# மக்கள் வாழ்வில் பழமொழி




## பழமொழிக் கட்டுரைகள்

சுகிர்தா பதிப்பக வெளியீடு — 1

வ. ஐ. (

செ... லு

அன்பளிப்பு -

சக்திமோனிமா

1.4.94

63 63

500

~~அன்பளிப்ப~~

அன்பளிப்பு

அன்பளிப்பு

அன்பளிப

[illegible]

63

63

[illegible]

A. காந்தன்
வதிரி மேற்கு
கரவெட்டி

# மக்கள் வாழ்வில்

# பழமொழி

அன்பளிப்பு

ஆ. ஜெயகாந்தன்
மலர்மகால்
கரவெட்டி
வடக்கு
கரவெட்

**சச்சி மாஸ்ரர்**

சுகிர்தா பதிப்பகம்
40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள் வாழ்வில் பழமொழி

ஆசிரியர் : சச்சி மாஸ்ரர்

பதிப்புரிமை : ச. தவநேசன்

முதற்பதிப்பு : 24 ஒக்ரோபர் 1988

பிரதிகள் : 2000

அச்சுப்பதிவு : அன்னை அச்சகம்
89, மவுண்ட்கார்மல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்,
ஸ்ரீலங்கா.

விலை : ரூபா 25-00

MAKKAL VAZHVIL PAZHAMOZHI

*Auther :* : **Satchi Master**

*Copy Right* : **S. Thavanesan**

*First Edition* : **24 th October 1988**

*Copies* : **2000**

*Printed at* : **Annai Printers,**
89, Mount Carmal Road,
Grunagar,
JAFFNA, SRI LANKA.

*Price* : **Rs. 25-00**

ஆ. ஜெயகாந்தன்

காந்தன

# அணிந்துரை

**கலாநிதி சி. மௌனகுரு,**
*நுண்கலைத் துறை, யாழ். பல்கலைக்கழகம்.*
*யாழ்ப்பாணம்.*

ஆ. ஜெயகாந்தன்

சமூக அறிவியற் துறைகளுள் ஒன்றாக நாட்டாரியல் தமிழில் இன்று மெல்லென வளர்ந்து வருகிறது. நாட்டாரியல் ஆய்வுகளுள் ஒரு கூறே பழமொழிகள் பற்றிய ஆய்வும். ஆய்வுக்காக ஆய்வு, சமூகத்தை, மனிதனை அறிவதற்கான ஆய்வு என ஆய்வு இருவகையினது. சமூகத்தை அறிவதற்கான முறையில் ஆய்வு அமைகையில் அது முழுமை பெறுகிறது.

பழமொழிகள், அதனைக் கையாளும் இனத்தின் அல்லது குழுவின் அனுபவ முதிர்ச்சியையும் சிந்தனைப் போக்கையும் பிரதிபலிப்பவை. தமிழிலே கிடைக்கின்ற முதல் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் தொடக்கம் இன்றைய சாதாரண சிறுகதைகள் வரை பழமொழிகளை எடுத்தாள்கின்றன. தமிழர் மத்தியில் வழங்கும் பழமொழிகளுக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் வருட வரலாறுண்டு. காலவாரியாக அதனை வகுக்கும் முயற்சியில் யாரும் ஈடுபட்டாரில்லை. வரலாற்றியல், சமூகவியல் அறிவுகளின் பின்னணியிற் செய்யப்பட வேண்டிய கடினமான முயற்சி அது.

ஆரம்பத்தில் பழமொழிகளைத் தொகுக்கும் முயற்சியே மேற்கொள்ளப்பட்டது. பிரதேசம் பிரதேசமாகப் பிரிந்து

கிடந்த இவற்றை ஒருசேரப் பார்க்கும் வாய்ப்பைத் தந்தவை இத் தொகுப்பு முயற்சிகளே. 1843 இல் பீற்றர் பேர்சிவல் திருட்டாந்த சங்கிரகம் என்ற பெயரில் 1823 பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டார். அவரைத் தொடர்ந்து ஈழத்தில் பழமொழிகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அப் பழமொழிகளுக்கு விளக்கம் எழுதும் பழமொழிக் கட்டுரை முறையொன்று ஆரம்பமானது. நாட்டார் பாடல்களுக்கும் இத்தகைய விளக்கக் கட்டுரைகள் எழுதப்பட்டன. பத்திரிகைகள் இவற்றை வரவேற்றன; பரப்பின. வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம், வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசா போன்றோர் இவ்வகையிற் குறிப்பிடத் தக்கவர்கள்.

அதன்பின்னர் பழமொழிகளை அறிவியற் துறைகளுடன் இணைத்து விதிமுறைகளுக்கிணங்க ஆயும் ஆய்வு நெறி உருவாகியது. பல்கலைக் கழகங்களில் இப்பழமொழி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொகுப்பு, விளக்கம், ஆய்வு என்ற படிமுறையில் பழமொழிகளைப் பற்றிய அணுகுமுறை விரிந்து வந்தமையை மேலே கண்டோம். இது நம்மை நாம் அறிந்துகொள்வதற்கான ஒரு முயற்சியின் பிரதிபலிப்பே. நம்மை, நம் சமூகத்தை அறிந்துகொள்ளுதல் கற்கும் கல்வியின் முக்கிய பயன்பாடுகளுள் ஒன்று.

சச்சி மாஸ்ரரின் பழமொழி சம்பந்தமான கட்டுரைகளை ஆங்காங்கு பத்திரிகைகளில் இடையிடையே வாசித்த போதும் அவற்றை ஒன்றுகத் திரட்டிப் படிக்கும் வாய்ப்பு இப்போது தான் கிட்டியது. சச்சி மாஸ்ரரின் கட்டுரைகளில் மேற்குறிப்பிட்ட மூன்று பண்புகளினதும் சாயல்களை ஆங்காங்கு காணுகின்றும். சில இடங்களிலே புதிய பழமொழிகளை அறிமுகம் செய்கிறார். இது தொகுப்புத் தன்மையைக் காட்டுகிறது. பல இடங்களிலே பழமொழிக

ளுக்கு விளக்கம் தருகிறார்; இது விளக்குந் தன்மையைக் காட்டுகிறது. சில இடங்களில் அப்பழமொழிகளின் சமூகத் தன்மையை விளக்குகிறார்; இது ஆராயும் தன்மையைக் காட்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட தலைப்பை எடுத்துக்கொண்டு அது சம்பந்தமான பழமொழிகளைத் திரட்டி வைத்து, அதற்கூடாக ஒரு விளக்கத்தை அளிக்கும் பாணியிலேயே அவரது பெரும்பான்மையான கட்டுரைகள் அமைந்துள்ளன. இவ்வகையில் இவற்றைப் பழமொழி விளக்கக் கட்டுரைகள் எனலாம். இவ்வண்ணம் விளக்கும்பொழுது அப்பழமொழி எழுந்தமைக்கான காரணங்களைக் காண முயல்வதும் சமகால நடைமுறைகளுடன் அவற்றை இணைக்கப் பிரயத்தனிப்பதும் அவரது சிந்தனைப் போக்கைக் காட்டுவது; சுவை பயப்பது.

மக்களோடு மக்களாக இறங்கி நின்று பழகுபவர் சச்சி மாஸ்ரர். நீண்ட அனுபவம் மிக்க ஆசிரியர்; பல நூல்களைக் கருத்தூன்றிக் கற்றவர்; மேலும் மேலும் அறிவு தேடும் ஆர்வம் மிக்கவர். இப்பண்புகள் யாவும் அவர் கட்டுரைகளிற் பிரதிபலிப்பதில் ஆச்சரியமில்லை.

வயது வித்தியாசம் பாராது பழகும் பண்பும் அறிவு தேடும் அவரது ஆர்வமும் அவரை நமக்கு நெருக்கமாக்கின. அவர் தொழிலில் நின்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்; இன்று 60 வயதைத் தாண்டுபவர். தொழிலில் நின்று ஓய்வு பெற்ற பின்னரும் ஓயாது அவர் செய்யும் சமூகநலன் சார்ந்த அவரது இவ்வெழுத்துப் பணியும், அறுபது வயதிலும் இளைஞராகத் திரியும் அவரது மனேவலியும் ஏனையோர் பின்பற்றற்குரியவை. மேலும் இப்பணியில் அவர் ஈடுபடவேண்டுமென்பதே எம் விருப்பம்.

சி. மௌனகுரு

# முகவுரை

க. சொக்கலிங்கம் (சொக்கன்) M. A; S. L. E. A. S;
(அதிபர், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)

நாம் வாழும் பூமியின் அடித்தளத்திலே மனித வாழ்க்கைக்கு உறுதுணையானவையும் வனப்பூட்டுவனவு மான தாதுப்பொருள்கள், கனிப்பொருள்கள், உலோகங் கள் என்பன மண்டிக் கிடந்தன; கிடக்கின்றன. காலந் தோறும் தமது ஆய்வுகள் மூலம் அவற்றை வெளிக் கொணர்ந்த நிபுணர்களால் இன்று மனித வாழ்வு சிறந்த வசதிகளோடும் மகிழ்வோடும் அமைந்து சிறப்படைகின்றது. இத்தகைய நிபுணர்கள் எதிர்காலத்திலும் தோன்றி மேலும் பலவற்றைப் பூமியின் உதரத்திலிருந்து வெளிக்கொணர்ந்து எமக்கு மேலும் மேலும் நன்மைகளை வழங்குவர் என்பதில் ஐயம் இல்லை.

இந்தப் பணிக்கு எவ்வகையிலும் குறைவுபடாத மகத் தான பணி ஒன்றினை உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் ஆங்காங்கே வாழ்ந்த சாமானிய மக்கள் புரிந்து வந்துள் ளனர். வாழ்க்கையிலே தாம் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்துப் பெற்ற அநுபவங்களையும் உணர்வுகளையும் பாடல்களாகவும், கூத்துக்களாகவும், நொடிகளாகவும், பழமொழிகளாகவும் ஆக்கித் தம் பரம்பரையினருக்கு முது சொங்களாக அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர். அறிவி யல் வளர்ச்சி, மொழி வளர்ச்சி, கலைத்துறைகளிலே புதிய நோக்குகள் முதலானவை தோன்றியதால், இயற்கை மாற்

றங்கள் கனிப்பொருள்கள் முதலானவற்றைப் பூமியின் அடித்தளத்தில் புதைத்து மறைத்துவிட்டதுபோல, மேற் குறித்த நாட்டார் படைப்புக்களை நிகழ்கால மக்களுக்குத் தெரியாது மறைக்க முற்பட்டன. எனினும் அறிவியல் நிபுணர்கள் புதைந்தவற்றை வெளிக்கொணர்ந்து மனித வாழ்வுத் தேவைகளுக்கு வளங்கூட்டியதை ஒத்து நாட்டாரியல் ஆய்வாளர்கள் நாட்டார் கலைகளையும், பழமொழிகள், நொடிகளையும் அரும்பாடுபட்டுத் தேடித் தொகுத்து வழங்கி வருவதனால், இன்று அவற்றின் செழுமையையும் பயன்களையும் நாம் அநுபவிப்பது, நன்றியுடன் நினைவுகூரப் படவேண்டியதாகும்.

பழைமையாலும் இலக்கிய வளத்தாலும் சிறந்துள்ள எமது அருமைத் தாய்மொழியாகிய தமிழிலும் 'நாட்டார் இயல்' அத்துறை ஆய்வாளர்களின் முயற்சிகளால் இன்று மதிப்பிற்குரிய ஒன்றாய் மேனிலை அடைந்துள்ளது. செவி வழியாய் நிலவி வந்த நாட்டார் பாடல்கள், நாட்டார் கூத்துக்கள், நொடிகள், பழமொழிகள் என்பன இன்று வேண்டிய விளக்கங்களுடனும் ஆய்வுக் குறிப்புகளுடனும் புத்தக உருவில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன; மேலும் வெளியாகக் கூடிய நற்குறிகளும் தோன்றுகின்றன.

இத்துறை ஆய்வாளர் வரிசையிலே இந்நாட்டில் நிலவி வரும் தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து வெளிக்கொணரும் பணியிலே ஈடுபட்டு உழைத்து வருபவர், நண்பர் சத்தியானந்தசிவம் அவர்கள் என்பது மகிழ்வைத் தருவதாகும்.

சத்தியானந்தசிவம் என்ற 'சச்சி மாஸ்ரர்' எனது சகபாடி; நல்லாசிரியர்; 'சுதந்திரன்' காலத்திலே கவிதை, கதை, கட்டுரை என்று நிறைய எழுதித் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகமானவர். ஆயுர்வேத வைத்திய பரம்பரையிலே உதித்த இவர் மக்களின் உடற்பிணி போக்கி

உதவும் பணியோடு உளப்பிணி போக்கவும் முயன்று தம் இளமைக் காலத்திலிருந்து சமூகத்தோடு ஒட்டி உறவாடி வருகின்றார். ஒரு காலத்தில் எம்மிடையே பிரசித்தி பெற்றிருந்த அரசியற்கட்சியோடு தம்மை இனங்காட்டி நேர்மையான அரசியல்வாதியாகவும் மிளிர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதே. இங்கு 'நேர்மையான அரசியல்வாதி' என்ற சொற்றொடரை அர்த்தபுஷ்டியுடனேயே கையாண்டுள்ளேன்.

இத்தகைய பலதுறை அனுபவங்களும், பண்பாட்டுப் பிரக்ஞையும், மனித நேயமும் வாய்த்த ஒருவர், மக்களிடையே வழங்கிவரும் பழமொழிகளின் பெருமையை உணர்ந்து அவற்றைத் தொகுத்து வழங்கிட முற்பட்டதில் வியப்பில்லை. புத்தகங்களிலே ஆங்காங்குக் காணப்படும் பழமொழிகளைத் திரட்டித் தரும் 'புத்தகப் பூச்சி'ப் பாங்கு நண்பருக்கு இல்லை என்பதை அவரது பின்வரும் கூற்று நன்கு புலப்படுத்துவதாகும்.

''(மீன்) சுவைகளைக் கொண்டு எழுந்த சில பழமொழிகளை எனது நண்பனிடமிருந்து பெற்று இங்கே தருகின்றேன்'' (பக். 108)

''மக்களிடமிருந்து பெற்று மக்களுக்குக் கொடுத்தல்'' என்ற கே. டானியலின் இலட்சியம் சத்தியானந்தசிவம் அவர்களின் இலட்சியமாகவும் அமைந்துள்ளதை இக்கூற்றுப் புலப்படுத்தவில்லையா? அன்றியும் பழமொழிச் சேகரிப்பு என்பது ஓர் வெளிக்கள ஆய்வு என்பதையும் அது மக்களிடம் நேரடியாகப் பெறுவதன் மூலமே உண்மைத் தன்மை கொண்டதாயிருக்கும் என்பதையும் 'சச்சி மாஸ்ரர்' உணர்ந்துள்ளமை அவர் நாட்டாரியல் ஆய்வுக்குத் தகுதியுடையவரே என்ற நிலைக்கு உயர்த்திவிடுகின்றது.

மக்கள் கவிமணி மு. இராமலிங்கம், முகாந்திரம் சதா சிவஐயர், பண்டிதர் வி. சி. கந்தையா, வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா, பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி சி. மௌனகுரு, பேராசிரியர் அ. சண்முகதாஸ் முதலாம் ஈழத்து நாட்டாரியல் ஆய்வாளர்கள் நாட்டுக் கூத்து, நாட்டுப்பாடல் என்பவற்றிற்கு வேண்டிய விளக்கங்கள் தந்து அவற்றின் சிறப்பினை உணர்த்தினர்.

'சச்சி மாஸ்ரர்' பெரும்பாலும் ஈழத்தில் வழங்கும் தமிழ்ப் பழமொழிகளையே பலவாறு முயன்று தேர்ந்தெடுத்து அவற்றிற் சிலவற்றிற்கு விளக்கக் கட்டுரைகள் வரைந்து புதியதொரு துறையில் நம்மவர்க்கு வழிகாட்டியுள்ளமை பாராட்டி அமையாது.

வேதங்களிலும் அவை போன்ற ஞான நூல்களிலும் இருடிகள், ஞானிகள் உரைத்தருளிய சிறுச்சிறு கூற்றுக்கள், மகாவாக்கியங்கள் எனப் பெயர்பெற்று அவற்றின் வியாக்கியானங்கள் இந்துமதத்திலே பல்வேறு தத்துவங்கள் உருவாக வழி வகுத்தன. சாமானியமான மக்கள் தம் அனுபவங்களைப் புதைத்து வைத்துள்ள பழமொழிகளும் 'மகா வாக்கியங்கள் தாமோ?' என்று அயிர்க்கத்தக்க வண்ணம் 'சச்சி மாஸ்ர'ரின் விளக்கங்கள் அமைந்துள்ளன என்று கூறுவது மிகையுரையாகத் தோற்றினுல் அதற்கு வாசகர்கள் என்னை மன்னிப்பார்களாக.

''மக்கள் வாழ்வில் பழமொழி'' என்ற இந்நூலிலே வெளியாகியுள்ள விளக்கக் கட்டுரைகள் மூலம் சச்சி மாஸ்ரரின் உலகியல் அநுபவச் செறிவு இலக்கிய உணர்வு, வரலாறு, அரசியல், சமூகம் பற்றி அவர் பெற்றுள்ள அறிவு இவற்றையெல்லாம் தெளிவாக எளிய இனிய உரைநடையிலே வெளிப்படுத்தும் திறன் என்பன நன்கு புலனுகின்றன. மக்களின் மனப்பாங்குகளைப் பொதுவாகவும் யாழ்ப்பாணத்துத் தமிழரின் மனப்பாங்கினைச் சிறப்பாகவும் வெளிப்படுத்த இவர் பழமொழிகளைக் கருவியாகக் கையாண்டுள்

ளாரோ என்றும் நினைக்குமாறு மிகவும் எதார்த்தமாகப் பல விடயங்களை ஆழமாக நோக்கிக் கூறியிருக்கிறார் 'சச்சி மாஸ்ரர்'. எனவே முதியவர் முதல் இளையவர் வரை, கற்றறிந்தார் முதல் கற்பார்வரை யாவருக்கும் பயன்படவல்ல நல்லதோர் ஆக்க முயற்சியே 'மக்கள் வாழ்வில் பழமொழி'.

இந்த மண்ணில் அறுபதாண்டுகள் வாழ்ந்துவிட்ட வாழ்க்கையின் பயனைத் தமிழ் மக்களுக்கு அரியதொரு கருவூலமாக நூல்வடிவிலே தந்துள்ள நண்பர் சத்தியானந்த சிவம் அவர்களுக்கு என் இதயங் கனிந்த வாழ்த்துக்கள் உரியன.

சொக்கன்

# என்னுரை

ஆ. ஜெயகாந்தன் - வதிரி

“வாலையிலே ஆடிய தேவடியாள் வயது சென்றும் காலைக்காலை ஆட்டுவாளாம்” என்பது பழமொழி. அதற் கிணங்க வாலிப வயதில் எழுத்துலகில் நடமாடினேன். பின் இடைநடுவில் ஓய்ந்திருந்தேன்; மீண்டும் எழுதத் துணிந்தேன். காலத்துக்கு ஏற்ற கோலத்தில் எழுதவேண் டும். அப்படியானுல் எதை எழுதுவது என்ற சிந்தனை என்னை ஆட்கொண்டது.

அச்சுவாகனம் ஏருத பழமொழிகளை மக்களிடமிருந்து திரட்டியெடுக்கும் முயற்சியில் இறங்கினேன். ஒருநாள் கலாநிதி மௌனகுரு தம்பதிகளைச் சந்தித்து எனது முயற் சியையிட்டுச் சிறிது நேரம் உரையாடினேன். அப்பொழுது அவர்கள் “பழமொழிகளை வைத்துக்கொண்டே பல ஆக்க வேலைகளைச் செய்யலாம். நீங்கள் விரும்பும் ஒரு புதிய கோணத்தில் நின்று, சமூக நடமாட்டத்துடன் பழமொழி களைத் தொடர்புபடுத்தி, உங்கள் ஆக்கத்தைச் செய்து பாருங்கள்” என்ருர்கள். எனது பள்ளி நண்பன் ‘சொக்கன்’ எம். ஏ. அவர்களும் “பழையதில் இருந்து புதுமைகாணப் படைப்பொன்றை ஆக்குங்கள்” என்று உற்சாகமூட்டினுர்.

சிந்தனை வலுப்பெற்றுக்கொண்டிருந்தது. குருநகர் நண்பன் செல்லத்தம்பி என்னைப் பல வயோதிபப் பெரி யார்களைச் சந்திக்க வைத்தார். அவர்கள் மூலமாகப் பல பழமொழிகளைத் திரட்டிக்கொண்டிருந்தேன்.

ஒருநாள் குருநகர் எழுத்தாளன் புஷ்பராஜனைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். புஷ்பராஜன் என்னைக் கண்டதும் ''சச்சி மாஸ்ரர்! நீங்கள் பழமொழிகளைத் தேடித் திரட்டிக்கொண்டிருக்கிறீர்களாமே, அப்படியானால் நாம் எமது புனித யாகப்பர் ஆலயத்தின் 125வது வெள்ளிவிழா மலர் ஒன்று தயாரித்துக் கொண்டிருக்கின்றோம். அதற்கு உங்கள் கைவரிசையைக் காட்டுங்களேன், பார்ப்போம்'' என்றார். ஒரு மாதகாலமாகியும் அவர் கேட்ட கட்டுரையை நான் எழுதவில்லை. மீண்டும் ஒருநாள் இரவு அவர் என்னைச் சந்தித்து ''மாஸ்ரர், நான் கேட்ட கட்டுரையை நீங்கள் நாளைக் காலை கட்டாயமாகத் தரவேண்டும்'' என்றார். அன்றிரவே ஒரு கட்டுரையை எழுதி, காலையில் அவர் கையில் ஒப்படைத்தேன். அவர்கள் வெளியிட்ட மலரில் 'மீனவப் பழமொழிகள்' என்ற தலைப்புடன் வெளிவந்த அக்கட்டுரை இந்நூலில் 'காற்றைக் கண்டால் படகை அகலக் கட்டு' என்ற தலைப்பில் இடம்பெறுகிறது.

பின்னர் தொடர்ந்து கட்டுரைகளை எழுதினேன். அவற்றை ஏற்று வெளியிட்ட வீரகேசரி, முரசொலி பத்திரிகை ஆசிரியர்களுக்கு என் உள்ளங்கனிந்த நன்றி உரித்துடையதாகுக.

இரண்டு பத்திரிகைகளிலும் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்தே இந்த நூலை வெளியிடுகின்றேன். மக்கள் வாழ்வில் பழமொழி என்ற இந்நூலை வரவேற்று எனது ஆக்க முயற்சிக்கு ஊக்கம் தருவது தமிழ் பேசும் மக்களினது கடமையெனக் கருதுகிறேன்.

பழமொழிகள் தமிழ் பேசும் மக்களினது அரும்பெரும் மொழிச் செல்வமாகும். மொழி வளர்ச்சி இனத்தின் வளர்ச்சிக்குப் பெரியதோர் ஊன்றுகோல். தமிழ் மொழி பேசிவந்த எமது மூதாதையர்கள் பழமொழிகளைத் தமது வாய்மூலமாகவே பரப்பி வைத்திருக்கின்றனர். இவ்வாக்கியங்களில் பொருள் நிறைந்திருப்பதால் அவை, போற்றுதற்குரியவை.

இலக்கியம் மக்கள் வாழ்வுக்கு ஏற்புடையதாக அமைந்தாலன்றி மக்களிடம் செறிவு பெறுது. அதிகளவில் கற்றுத் தேர்ந்த ஒரு சிலருடைய கரங்களிலேயே தவழ்ந்து கொண்டிருக்கும். பழமொழிகள் அதற்கு மாறுபட்டதாக சாதாரண மக்களுடைய அன்றுட வாழ்வின் நிகழ்வுகளிலேயே இடம் பெறுகின்றன. மேடைப் பேச்சுக்களிலும், கதைகள், கட்டுரைகளிலும் – ஏன், இன்று சினிமாக்களிலும் கூட பழமொழிகளைத் தாராளமாகக் காணலாம். எனவே பழமொழிகள் மக்கள் வாக்கியங்களாக அன்று மட்டுமல்ல இன்றும் இருந்து வருகின்றன. எனினும் காலத்துக்குக் காலம் இடத்துக்கிடம் மக்களது வாழ்க்கை முறைக்கேற்ப திரிபுபெற்று மாறுபடுவதை அவதானிக்கலாம். நான் அவதானித்த சிலவற்றை இக்கட்டுரைகளில் தொட்டுக் காட்டியுள்ளேன்.

பழமொழித் தொகுப்பாக்கத்துக்கு உறுதுணை புரிய விரும்பும் அன்பர்கள் தமது மனக் கருத்துக்களைத் தெரியத் தருவதுடன், பிரதேசவாரியாக நடைமுறையில் உள்ள பழமொழி வாக்கியங்களைத் தொகுத்துத் தெரியத் தந்தால் நன்றியுள்ளவனுயிருப்பேன். இன்று காணப்படும் பழமொழித் திரட்டுகளில் எமது ஈழத் தமிழ் மக்களிடையே உள்ள பழமொழிகளில் ஒருசிலகூட இடம்பெறவில்லை என்பது வெள்ளிடை மலை. அக்கருத்தை உறுதியாகக் கொண்டிருந்தமையினுலேயே பழமொழிகளைத் திரட்டி ஒன்றுசேர்க்கும் முயற்சியில் இறங்கினேன். எனினும் இக்கட்டான இக் காலகட்டத்தில் அதைச் சரிவரச் செய்ய வாய்ப்புக் கிட்டவில்லை. ''தனிமரம் தோப்பாகாது''. பலரின் உதவி கிடைத்தாற்ருன் நல்லதொரு ஈழத் தமிழ்ப் பழமொழித் தொகுப்பை மலரச்செய்ய முடியும்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி சி.மௌனகுரு, முகவுரை நல்கிய திரு. க. சொக்கலிங்கம், எம். ஏ. (சொக்கன்) அறிமுகவுரை எழுதிய எழுத்தாளர் ''புத்தொளி'' ஆகியோருக்கும், இந்நூலை அழகுற அச்சிட்

டுதவிய அன்னை அச்சகத்தினருக்கும், அட்டைப்படத்தை அழகாக வரைந்துதவிய ''அழகன் ஆட்ஸ்'' மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவர்க்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

வாலிப வயதில் எழுத்துலகில் என்னை ஊக்குவித்த அமரர் க. பே. முத்தையா (விடிவெள்ளி) அவர்கட்கு என்றும் கடப்பாடுடையவன் யான்.

சச்சி மாஸ்ரர்

40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்த

என் அன்புத் தந்தை



வைத்திய ரத்தினம்

## அமரர் கந்தையா கனகரத்தினம்

அவர்களின் பாதாரவிந்தங்களில்

இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

~~[illegible]~~

ஜெயகாந்தன்

[illegible]

# கருத்துரை

## ஒரு நல்ல புத்தகம்

**பேராசிரியர் சாலை இளந்திரையன்**
பேரவை இல்லம், சென்னை – 600 086.

---

ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகள், ஆய்வாளர்கள் ஆகியோர் மீது எனக்குத் தனிப்பட்ட பாசமும், நன்மதிப்பும் உண்டு. இந்தியத் தமிழகத்து அன்பர்கள் பொறாமைப்படும் அளவுக்கு, அவை என்னிடம் மிகுதியாக இருப்பதும் உண்மையே. ஆனால் அது காரண காரியத் தொடர்பற்ற கண்மூடித்தனமான பாசம் அன்று. தங்கள் தகுதியினால் அந்த நல்லிடத்தை, அவர்கள், என் நெஞ்சிலே பெற்றுள்ளார்கள்!

காலத்தை ஒட்டிய தமிழ்ப் பணிகள் ஆற்றுவதில் தமிழ்ஈழம் இன்று முன்னணியிலே நிற்கிறது. அவர்கள் தயாரித்துள்ள பள்ளிப் பாட நூல்களிலே கூட இத்தகைய கால ஓர்மை உள்ளது. இளையோருக்கு மொழியறிவை ஊட்டும் விதமாக அவர்கள் தமிழ்ப்பாடச் சுவடியை அமைக்கிறார்கள். அதனால் ஈழத்தில் தமிழ் பயின்றவன் பெரும்பாலும் பிழைத்தமிழ் எழுதுவதில்லை. இந்தியத் தமிழகத்தார், மொழியறிவை வளர்க்க வேண்டிய கீழ் வகுப்புகளிலே (பெரியவர்களாகிய தங்களுக்குப் பிடிக்கிறது என்பதால்) – இலக்கியப் பாடல்களைத் திணித்து மாணவர்களின் மொழியறிவைச் சாகடிக்கிறார்கள்; இந்தியாவில் முது கலை (எம். ஏ) வகுப்பு முடித்தவனும் சரியாகத் தமிழ் எழுத அறிந்திருக்கிறானில்லை!

மொழியறிவு என்பது வெறும் எழுத்து, சொல், வாக்கியம் மட்டுமல்ல. ஒரு மொழிக்கே உரிய மரபுத் தொடர், உவமைத் தொடர், பழமொழி, நகைமொழி முதலியவைகளை ஆண்டு மொழியின் செழுமையைப் பேணுவதாகவும் அந்த அறிவு மலர்ச்சி பெறவேண்டும். எந்திரமயமான, ஒரு விதமான 'மட்டைத்தனமான' (Prosaic) வாழ்க்கை முறை பரவி வருவதால் மொழியின் உயிர் நாடிகளான இவைகளை அறியும் வாய்ப்பையே இளைஞர்கள் இழந்து வருகிறார்கள். இந்தச் சமயத்திலே தான் மொழியாட்சியில் மரபுத்தொடர், பழமொழி முதலியவற்றின் பொருத்தப்பாட்டை இளைஞர்களுக்கு விளக்கி வைக்க வேண்டும். அவைகள் மக்களின் வாழ் வோடு கொண்டுள்ள தொடர்பையும் சொல்லி வைக்க வேண்டும்.

இந்தப் பின்னணியிலேதான் மக்கள் வாழ்வில் பழமொழி என்னும் சீரான தலைப்புடன் 'சச்சி மாஸ்ட்டர்' சத்தியானந்தசிவம் எழுதியுள்ள ஏட்டினை நான் பார்க்கி றேன்; மதிப்பிடுகிறேன்.

பல்லாயிரம் பழமொழிகள் கொண்டது தமிழ். அவை அனைத்தையும் எடுத்து விளக்குவதோ, அவற்றிற் குப் பின்னணி அமைத்துத் தருவதோ இயலாத காரியம். ஆனால் 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல. அவற்றுள் சிலவற்றை விளக்கி வைப்பதன் மூலம் பழமொழிப் பெருங்கடலின் ஆழ அகலங்களை ஊகித்து உணரச் செய்வது அத்தனை அரிய காரியம் அன்று. அந்தச் சுருக்கம் விளக்கப் பணியைத்தான்,– 'புல்லின் நுனித்துளி நீரில் ஒரு பொற்றை அடங்குதல் போலே'– பழமொழியின் பரந்துபட்ட தன்மைகள் அடங்கித் தெரி யும் வண்ணம் இந்தச் சிறிய பனுவலை யாத்தளித்துள் ளார் தோழர் சச்சி.

எந்த ஒன்றிற்கும் விளக்கம் சொல்லப் புகுவோருக்கு மூன்று பண்புகள் இருந்தாக வேண்டும். அவை ;

1. மூலப் பெரும் பொருளைப் பல பகுதிகளாக வகுத்து வகைப்படுத்திக் கொள்ளுதல்;

2. ஒவ்வொரு பகுதியையும் இயன்ற அளவு சுருக்கி அமைத்துக் கொள்ளுதல்;

3. படிப்போர் நெஞ்சில் இவற்றைப் பதிப்பித்திடத் தக்க நேரான எளிய மொழி நடை ஒன்று கைவரப் பெற்றிருத்தல்.

'மக்கள் வாழ்வில் பழமொழி' என்னும் இந்த நூல், இந்த மூன்று தன்மைகளையும் குறைவறப் பெற்றுள்ளது. பொருள் அடிப்படையில் 21 தலைப்புகளாகப், புத்தகம் வகுக்கப்பட்டுள்ளது. ஆயினும், 'கூறியது கூறல், குன்றக் கூறல்' என்னும் குறைகள் ஏற்பட்டு விடாதபடி, ஒவ்வொரு (பழமொழித்) தலைப்புகளும் உரிய வேறு பழமொழிகள். அதன் கீழ் அடைவுபடுத்தப்படுகின்றன.

அவ்வாறு செய்யும்போது சுவடியில் கிடைத்த அத்தனை பழமொழிகளையும் (அல்லது பலர்போல் உவமைத் தொடர், மரபுத் தொடர்களையும். பழமொழிகள் என்று) கூட்டிக் குவித்துவிடவில்லை. முனைப்பான பொருள்வளம் சிறந்த பழமொழிகள் பலவாக இருக்கும் பொருட்பகுதி களிலே கூட, அனைத்தையும் சேர்த்து ஒரு தெவிட்டலை ஏற்படுத்தவில்லை. 'கரும்பு ருசி என்று. வேரோடு பிடுங்கி விடக் கூடாது' அல்லவா?

இத்தகைய அளவுபாட்டோடு பழமொழிகளை வகைப் படுத்தி விளக்க முற்பட்ட ஆசிரியர், காலப்போக்கில் சில பழமொழிகளில், ஏற்பட்டுள்ள பிழைபாடுகளையும் நீக்க முயன்றுள்ளார்; ''ஆயிரம் பேரைக் கண்டவன் அரைப்பரி காரி; ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைப் பரிகாரி, ஆயிரம் வேரைக் கண்டவன் அரைப் பரிகாரி; ஆயிரம் வேரைக் கொன்றவன் அரைப் பரிகாரி; ஆயிரம் வேரைக் கொண்டவன் அரைப் பரிகாரி. இவைகளில், எது இந்தப் பழமொழியின் மூல வடிவம்?

இந்தக் கேள்விக்கு விடை தருகிறார் சச்சி மாஸ்டர். ''சித்த வயித்திய அவுடதங்களில் அதிக அளவில் வேர் விராய். இலை, பட்டை, பூ என்பன இடம் பெறுகின்றன. இவைகளைக் கண்டவன், கொன்றவன், கொண்டவன் பிணி தீர்க்கும் வைத்தியனாகிவிட முடியாது. மருந்துச் சரக்கு வியாபாரி, ஏன் மூலிகை பிடுங்கி கடைகளுக்குக் கொடுப்பவர்கள் பரிகாரியை விட இவற்றில் கூடிய அனுபவமுடையவர்கள். எனவே அவர்கள் பரிகாரிகளா என்பது சிந்திக்கத்தக்கது. நாடி தெரிந்து நோய் கண்டு அதற்குரிய மருந்து கொடுப்பவனே பரிகாரி. ''மருந்துகால் மதிமுக் கால்'' என்பதற்கு ஏற்ப பரிகாரி வைத்திய அறிவு படைத்தவனாகவும் மதிநுட்பம் உடையவனாகவும் இருக்க வேண்டியது மிக அவசியம். நோயாளியுடன் விளையாட்டாக ஊசலாட்ட முடியாது. உயிர் விலை மதிப்பற்றது. போனால் திரும்பிப்பெற முடியாதது என்பதை வைத்தியன் நன்கு உணர வேண்டும். எனவே ஆயிரம் பேரைக் கண்டவன் அரைப்பரிகாரி என்ற வாக்கியமே பெரும்பாலும் மூலப் பழமொழியாக இருந்திருக்க வேண்டும்.

இதுபோல் பல இடங்கள் உள்ளன. சில இடங்கள் சிறிதே பொருள் கருகலாகவும் உள்ளன. 'பந்திக்கு முந்து படைக்குப் பிந்து' 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' என்பன அத்தகையவை. 'ஆனைக்கும் அடிசறுக்கும்' என்பன பொதுவான உண்மை அல்லவா? இவை இரண்டையும், பழமொழிகளாகக் கொள்ளாமல், நகைமொழிகளா கொண்டு பொருள் கண்டால் பொருத்தம். சாப்பாட்டுக்கே முந்தி நிற்கிற சாப்பாட்டு வெறியன் ஒருவனை மற்றொருவன் கிண்டல் பண்ணுவதாகவும், வெறும் வாய்ச் சவடால்காரனை மற்றொருவன் ஏளனம் செய்வதாகவும் இவைகளைக் கொண்டால் பொருள் சிறக்கும் தானே!

இந்தப் புத்தகத்தின் மூலபலன், இதன் எளிய தெளிந்த நல்ல நடை. எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் அந்த நடை பழகு நம்மைக் கவர்கின்றது. சான்றாக ஒன்றிரண்டு:

"உப்பு விலையில் மலிவானது, செயலில் மிக்கது. 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே, உப்பு இல்லாப் பண்டம் எத்தனை மதிப்பு வாய்ந்ததாக இருந்தாலும் உப்பை உண்பதற்கு உதவாது குப்பையிலே போடும் ஒரு கழிவுப் பொருளாகி விடுகின்றது: அவ்வாறே பிள்ளைக்கு அப்பனும், பெண்ணுக்கு அதாவது பிள்ளையின் தாய்க்குக் கணவனும் இல்லாது போனால், சமுதாய நிலையில் தாழ்வு அடைகின்றனர். தாய் விதவை என்ற பெயரைப் பெறுகின்றாள். பிள்ளைக்கும் அறுத(ா)லி வளர்த்த பிள்ளை என்ற பெயரும் கிடைக்கின்றது. தந்தை, தாய், பிள்ளை மூவரும் கொண்டதே பூரண குடும்பம்.

பட்டம், பதவி, சொத்து, பணம் என்பனவற்றை உடையவன் கனம் பெறுகின்றான். அவன் யாராகவும் இருக்கலாம். எத்தகைய குணநலன் உடையவனாகவும் இருக்கலாம், அவன் உடனே இனமுறைக்கு ஆளாகிவிடுவான். அன்றியும் எத்தகைய கருமங்களிலும் முதலிடம் பெறும் தகுதியும் பெற்றுவிடுகிறான். அவனது சென்ற காலச் செயற்பாடுகள் மூடி மறைக்கப்பட்டு ஓர் உன்னதமான புதிய மனிதனாக்கப்படுகின்றான். ஒரு ஏழை எத்தகைய நல்ல குணநலமுடையவனாக இருந்தாலும், அவன் பணம் என்னும் கனம் இல்லாத காரணத்தால் இந்த மனித சமூகத்தில் யாரோ? எவரோ? என்று பேசப்படுகின்ற நிலைக்கு ஆளாகி விடுகிறான்".

இந்த வாக்கியங்களைப் படிக்கும்போது, சொல்லுகின்ற மாஸ்டருக்கும் கேட்கின்ற நமக்கும் இடையே சிறிய இடைவெளியும் இல்லை; இதயம் இதயத்தோடு உறவாடுகிறது. எளிய நடை, இரண்டு இதயங்களையும் ஒட்டி வைத்து, மெல்லென நடக்கிறது.

தமது படிப்பு, பட்டறிவு ஆகியவற்றால் நெஞ்சில் முகிழ்த்த சில கருத்து மணிகளையும் அங்கங்கே பதித்துள்ளார் ஆசிரியர்,

''உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்'', 'தர்மம் தலைகாக்கும்', ''தானங்களில் சிறந்தது அன்னதானம்'' எனப் பல வாக்கியங்கள் தமிழ்மொழியில் காணப்படுகின்றன. ஆனால் பழமொழியில் காணப்படும், ''பாத்திரமறிந்து பிச்சை இடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு'' என்ற வாக்கியத்தில் உள்ள பாத்திரம் எது என்பதை நன்கு புரிந்துகொள்ள வேண்டியது எமது முக்கிய கடமையாகும்.

''இன்றைய பெற்றோர், நேற்றைய பிள்ளைகள்; இன்றைய பிள்ளைகள் நாளைய பெற்றோர்கள். இவை இயற்கையின் நியதியால் நடைபெற்றுக் கொண்டிருப்பவை. எனவே இன்றைய பிள்ளைகளின் எதிர்காலந்தான் நாளைய உதயம். நல்ல பிள்ளைகளை நாளைய உலகத்திற்குப் படைத்துக் கொடுப்பது இன்றைய உலகத்தின் கடமை''.

''பெண்ணில்லாவிட்டால் ஆணில்லை' ஆணில்லாவிட்டால் பெண்ணில்லை, ஆணும், பெண்ணும் இணைந்ததே குடும்பம்'' தனிமனிதன் குடும்பம் சமூகம், நாடு எனக் கொண்டே உலகம் வியாபிக்கின்றது என்பதை ஏன் இந்த மனித சமூகம் மறந்து நடக்கின்றதோ தெரியவில்லை.

''வருவாய் குறைந்த குடும்பங்கள் சில நல்ல வசதி படைத்தவர்களைப் போல, ''கண்ட பாவனையில் தாமும் கொண்டை முடிக்கப்போய்'' வாழ்நாள் முழுவதும் கடன் பளுவுடன் வாழுகின்றார்கள். இந்த நிலையில் இருந்து எமது சமுதாயத்தை மீட்சிபெறச் செய்ய வேண்டுமேயானால் வீண் ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பதுடன் திருமண வீடுகளிலும், மரண வீடுகளிலும், பொது வைபவங்களிலும் தேவையற்ற முறையில் அனாவசியமாகச் செலவு செய்வதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது சிறந்த வழியாகும்,

''இந்த மனித சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் வேண்டிய நேரத்தில் மற்றவர்களுடன் இணைந்து வாழ வேண்டியவனாகவே இருக்கின்றான். அதை உண

ராத சிலர் தானுண்டு தனது குடும்பமுண்டு என வாழத் தலைப்படும் பொழுது மற்றவர்களின் மனவெறுப்புக்கும், புறக்கணிப்புக்கும் இலக்காகின்றார்கள்''.

தேவை அறிந்து படைக்கப்பட்ட தெளிவுக் களஞ்சியம் - வகைப்படுத்தித் தொகுத்தலே ஆய்வின் முதற்படி என்பதற்குச் சீரான எடுத்துக்காட்டு.—'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்பதை உணர்ந்து அளவுபாடு கடைப்பிடிக்கும் கருத்து விளக்கம். படிப்போர்க்குக் கருத்துக்களை மட்டுமன்றி நல்ல நடையையும் பிடிப்பிக்கும் ஆசிரியன். இத்தனையின் மொத்த வடிவம் ''மக்கள் வாழ்வில் பழமொழி'' என்னும் இந்த நல்லேடு. ஆகவே, தெளிவுடைய நன்மக்கள் இதனைப் போற்றுவர்; தெளிவுபெற இருப்போர் இதனை விரும்பிக் கற்பர். சமுதாய வளர்ச்சிக்கு இவை இரண்டும் இன்றியமையாதன என்பதை உணர்ந்திருக்கும் ஓர் ஆசிரியன் ஆதலால், சச்சி மாஸ்டரின் இந்தப் பயனுறு புது முயற்சியை வரவேற்றுப் பாராட்டுகின்றேன்.

பேராசிரியர் சாலை இளந்திரையன்,

A+KANTHAN-VATHIRI

தமிழீழத்தின் இன்றைய சூழ்நிலை காரணமாக

'கருத்துரை'

காலந்தாழ்த்தி எம் கரம் வந்தடைந்தமையால்,

'என்னுரை'

பகுதியில் அதுபற்றி எதுவும் கூறமுடியாது போய்விட்டது.

'நன்றியுரை'

என இவ்வரிகளை பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்கட்கு வழங்குகிறேன்.

A+KANTHAN

வடமராட்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி.

## 1

# படிப்பது தேவாரம்; இடிப்பது சிவன் கோவில்

A.KANTHAN

உனக்கல்லடி பெண்ணே!
ஊருக்கெல்லோடி கண்ணே!

அன்றும் இன்றும் மக்களின் மத்தியில் மிகப் பரிச்சயமாக வுள்ளது இந்தப் பழமொழி.

பண்டைய மக்களிடம் அரசனுக்கு அடுத்தபடியாக மதத் தலைவர்கள் நன்மதிப்புப் பெற்று வாழ்ந்து வந்தார்கள். மதத் தலைவர்கள் மக்களை வழிநடத்துபவர்களாகவும் இருந்து வந்தனர். கடவுளின் வாரிசுகளே மதத்தலைவர்கள் என நம்பிய அன்றைய மக்கள், அவர்களின்து சொற்களுக்குச் செவிமடுத்து, தலைசாய்த்து, செயற்பட்டும் வந்திருக்கின்றனர். அதனால் அவர்களும் தாம் கற்றதைப் பொதுமக்களுக்கு உபதேசம் செய்து வந்தார்களேயொழிய தமது சொந்த வாழ்வில், மனம்போன போக்கிலேயே வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதை இந்தப் பழமொழி வாயிலாகவே நாம் தெரிந்துகொள்ளலாம். இந்தப் பழமொழியை எடுத்துக்காட்டாக வைத்து ஒரு சின்னஞ்சிறு கதை சமுதாயத்தில் உருப்பெற்றிருப்பதைச் சகலரும் நன்கு அறிவர்.

"களவு செய்வது தலையாய பாவம். அதை மக்களாகிய நாம் விலக்கி நடந்துகொண்டாற்றான் ஆண்டவனை

அடையலாய்'' – பிரசங்கியார் கூறிய நற்சிந்தனை வாக்கிய மிது. இந்த வாக்கியத்தை அன்று செவிமடுத்த பிரசங்கி யாரின் மனைவி நேராக வீட்டிற்குச் சென்றதும் முதற் கடமையாக காலை தனது கணவன் பிரசங்கத்துக்குப் புறப் படமுன் மதியவேளைச் சமையலுக்காகப் பிடித்து அடைத்து வைத்திருந்த அடுத்த வீட்டுக் கோழியைத் திறந்து விட் டாள்.

தன் கடமை முடிந்து வீட்டுக்கு வந்த பிரசங்கியார் மனைவியின் செயலைக் கண்ணுற்றதும் "உனக்கல்லடி பெண்ணே! ஊருக்கெல்லோடி கண்ணே!'' என்றார். எப் படி அமைகிறது ஊருக்கு உபதேசிக்கும் உத்தமர்களின் சுய வாழ்க்கை? இந்தக் கதை மிகப் பழையதொன்று. கோழிக் களவோடு இது நின்றுவிட்டது.

ஆனால் இந்தப் பழமொழியைக் கொண்டு எமது சமு தாயத்தை நோக்கினால், எழுத்தாளர்கள், சமுதாயத் தொண்டர்கள் பலரிடம் இந்தக் குறைபாடு நிறைய நிலை கொண்டிருப்பதை நாம் காணலாம். தாம் ஒன்றை மக்க ளுக்கு எடுத்துச் சொல்லமுன், சொல்வதைத் தம் வாழ்வில் சிறிதளவுக்காவது கடைப்படிக்க முடியுமா? என்பதைச் சிந் தனை செய்து பார்க்க வேண்டும்.

காந்தி மகான் தமது வாழ்நாளில் மக்களுக்கு உபதே சித்தார். தனது உபதேசத்துக்கமைய தன்னுடைய அன்றாட வாழ்விலேயே வாழ்ந்து காட்டினார். எனவே அவரது வாழ் வில் சொல்லும் செயலும் ஒன்றாகவே அமைந்திருந்தது. அதனாலேயே அண்ணல் காந்தி மறைந்தும் அணையாத சுடர் விளக்காக மக்களினது உள்ளங்களில் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

படிப்பது தேவாரம்; இடிப்பது சிவன் கோவில்.

சிவபெருமானைத் தமது முழுமுதற் கடவுளாகக் கொண்டு வாழ்ந்து வரும் சைவ மத மக்கள் செந்தமிழ் மொழியில் தாமே சிவனைப் பாடித் துதிக்க மும்மணிகள் தந்த முத்

தாரமே தேவாரம். அத்தகைய தேவாரத்தைப் பாடி, பாமாலை சூட்டி, சிவபக்தனாக சமுதாயத்தில் ஊசாடுபவன் இடிப்பது சிவன் கோவில் என்றால் இவன் யார்? இவன் பகல் வேஷக்காரனா? அன்றேல் நாஸ்திகனாக வாழ்ந்தவன், தனது கொள்கையை மக்கள் முன் நிறைவேற்ற முடியாத தன்மையினால் வேஷம் பூண்டு சமயத்துக்கு வினை செய்ய வந்த விஷப் பாம்பா? அல்லது தனது சுய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள வேஷமிட்ட உருத்திராக்கப் பூனையா? யார் இவன்? என்பதுதான் கேள்வி.

இத்தகையவர்கள் தாம் வாழ மற்றவர்களை மாசு படுத்தத் தோன்றியுள்ள ஒரு மத விரோதி என்பதில் ஐய மில்லை. இவர்களைக் கண்டுபிடித்துத் திருத்தவேண்டியது உண்மையான சிவபக்தர்களின் தலையாய கடமையாகும். கோவிலைச் சொல்லி ஊர் மக்களை ஏமாற்றி, சாக்கு நிரப்பி வயிறு வளர்க்கும் பேர்வழிகள் சிலர் இன்றும் தெருவீதிக ளில் நடமாடித் திரிவதை நாம் காணலாம்.

வேறு சிலர் தொண்டர் சபைகளில் தந்திரமாக இடம் பிடித்து, அதை உறுதுணையாகக் கொண்டு தம் மடி நிரப்பி வாழ்க்கையை ஓட்டி வருபவர்களாய் இருக்கிறார்கள். இவர் களைக்கூட இந்தப் பிரமதேவன்தான் படைத்து இங்கு ஊசாட விட்டிருக்கின்றான். இதுவும் ஆண்டவனின் திரு விளையாடல்களில் ஒன்று தானெனக் கருதவேண்டியிருக்கி றது.

மேனி எங்கும் வெண்ணீறு, கழுத்தில் உருத்திராக்கம், அரையில் காவியுடை, வாயில் சிவசிவ, சிந்தனையில் மற்ற வர்களைக் கழுத்தறுக்கும் நினைப்பு. இப்படிப்பட்ட மனிதன் தானும் வாழமாட்டான்; மற்றவர்களையும் மன நிம்மதி யுடன் வாழ விட மாட்டான். தானும் சதா சஞ்சலப் பட்டுக்கொண்டேயிருப்பான். ஆனால் கோவில்களில் நின்று பணிவிடை செய்வதுபோலப் பாசாங்கு செய்வதனால் சிலரது நட்பைப் பெற்று தனது சுயகருமங்கள் சிலவற்றை இலகு வாக வென்றெடுத்துக் கொள்வான்.

நாடக நடிகன் ஒருவன் மேடையில் தான் தாங்கும் வேஷத்துக்கு ஏற்ப சிறிது நேரம் மட்டும் தன்னை நாடகப் பாத்திரமாக்கி நாடகத்தை நடித்து முடிக்கிறான். ஆனால் சில மனிதர்கள் நிஜ வாழ்விலேயே பல வேடம் தாங்கி தமது வாழ்வை ஓட்ட இலகுவான வழியைத் தேடிக் கொள்ளுகின்றனர்.

**கையில் பிடிப்பது ஜெபமாலை**
**கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோல்**

சமுதாயத்தை ஏமாற்றிவாழ கைக்கொள்ளும் தந்திரோபாயமிது. ஏமாளிகளை ஏமாற்ற சதா ஜெபமாலையைக் கொண்டு திரியும் மனிதனை உண்மையின் இருப்பிடமென விசுவாசித்து ஜெபமாலை ஏந்தும் அவனுக்கு தாம் அடியார்களாக நின்று உறுதுணை செய்வர். ஆனால் இத்தகையவனுக்குத் திரைமறைவில் திருடர்கள் சிலர் நண்பர்களாக விருப்பதை அடியார்கள் அறிய மாட்டார்கள்.

அடியார்களின் இருப்புத்திட்டங்களையெல்லாம் வேஷத்தில் மறைந்திருக்கும் மனிதன் மெள்ளமெள்ள அறிந்து கொள்வான். காலநேரம் பார்த்து கக்கத்தில் இருக்கும் கன்னக்கோலைப் பாவனைக்கு எடுத்து விடுவான். இந்த வேஷதாரி தன் மனதில் தீட்டிய திட்டங்கள் யாவும் இவனது நண்பர்களால் செயற்படுத்தப்படும். அந்த இடத்தில் கன்னக்கோல் காரன் காட்சிகொடுக்க மாட்டான். ஆனால் நண்பர்கள் கனகச்சிதமாக கன்னக்கோலைப் பாவித்து திருட்டைச் செய்து முடித்துவிடுவர். இப்படிப் பாசாங்காக நடக்கும் மனிதனின் உள்ளம் எப்படிப்பட்டதாக விருக்கும்? தானும் தன் நண்பர்களும் வாழ எத்தனையோ அப்பாவி மக்களினது வாழ்வைக் குட்டிச்சுவராக்கி விடுகின்றான்.

ஒரு மனிதன் சுயமாகத் தொழில் செய்து நடுத்தரமான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். மக்களின் செல்வாக்கும் ஓரளவுக்கு இருந்து வந்தது. ஆனால் சில தனவந்தர்

களின் நட்புக் கிடைக்கத் தொடங்கியது. அவர்களைப் போலத் தானும் ஒரு பணக்காரனாகி விட வேண்டுமென ஆசைப்பட்டான். ஆசை பாவம் அறியாது; வெட்கத்தை யும் எண்ணிப் பாராது. ஒருசில வேலையாட்களைத் தேடிப் பிடித்து திரை மறைவில் ஓர் சூதாட்ட நிலையத்தை ஆரம் பித்தான்.

பார்வைக்கு சாதுவான மனிதன்; சதா புன்சிரிப்பு, பொலிவு கொண்ட மேனி, நெற்றியில் அழுத்தமான திரு நீற்றுப் பூச்சு, சூதாட்ட நிலையம் ஒன்று அவனது தலைமை யின் கீழ் இயங்குகின்றது என்று சொன்னால் அங்கு வேலை செய்யும் ஆட்களைவிட மற்றைய பொது மக்கள் யாருமே நம்பமாட்டார்கள்.

ஒரு சில மாதங்களில் அவன் பெரியதோர் புள்ளியாகி விட்டான். ஒரு நாள் சிவபக்தர் ஒருவர் இந்தத் திடீர்ப் பணக்காரனைச் சந்தித்தார். இருவரும் பள்ளிக்கூட நண் பர்கள். ஒருவரையொருவர் சுகநலம் விசாரித்தனர். இவ னும் ஒளிவுமறைவின்றித் தனது தற்போதைய நிலைபரங் களைக் கூறினான். அப்பொழுது அந்தப் பக்தர், ''பலரது வாழ்வைக் கெடுத்து நீ ஒரு பணக்காரனாக வருவது கொடிய பாவமல்லவா?'' என்று கேட்டார்.

அந்த மனிதன் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறாய்?'' என்று பக்தர் கேட்டார்.

''பாவம் என்ன? புண்ணியம் என்ன? பணம் இருந் தாற்றான் இந்தச் சமூகத்தில் மதிப்பைப் பெறலாம். அது வுமின்றி பல பள்ளங்களை ஏற்படுத்தினாற்தான் ஒரு மேட்டு நிலத்தை அமைக்க முடியும்'' என்று கூறினான்.

''அது தான் உனது கொள்கை என்றால் நான் பேச வில்லை'' என்று கூறியபடி வேகமாக பக்தர் அந்த இடத்தை விட்டு நடந்தார்.

# 2

# அரசனும் ஒருநாள் ஆண்டியாவான்;

ஆ. ஜெயகாந்தன்.

மன்னன் மக்களின் நலனுக்காக மாநிலம் காக்கும் தலைவன். மக்களே நாட்டின் அடித்தளம். குடி உயரக் கோன் உயர்வான் என்பது ஔவையின் வாக்கு. குடி உயர மண்வளம் சிறக்கவேண்டும். மக்கள் நாட்டுக்காக அயராது உழைத்தால், அவர்களும் சிறப்படைவார்கள்; நாடும் நலம் பெறும்; மன்னனும் உயர்ச்சியடைவான்.

நாட்டில் அமைதி நிலவுமேயானல், செல்வம் பெருக் கெடுக்கும்; அறிவு விருத்தியடையும்; மன்னன் புகழ் நாடு எங்கும் பரவும். 'இல்லை' என்ற சொல்லுக்கே இடமிருக் காது. அன்று மன்னன் மணிமுடி தரித்து, செங்கோல் தாங்கி, மதிமந்திரியைத் துணைகொண்டு மக்களின் குறை நிறை தெரிந்து ஆட்சியைக் கொண்டு செலுத்தினன்.

தமிழ்ப் பழமொழியாளர்கள் மன்னர்களை மட்டுமே நாட்டின் தலைவனைக் கண்டனர். எனவே தான் மன்ன னைப் பற்றியே ஒரு சில பழமொழி வாக்கியங்களை மட்டும் கூறி வைத்திருக்கின்றனர். இன்று உலகில் ஒரு சில நாடு களில் மட்டுமே மணிமுடி தரித்துப் பரம்பரை வாரிசுக ளாக ஆட்சிப் பொறுப்பையேற்று மக்களை மன்னர்கள் வழி நடத்தி வருகின்றனர். இலங்கையில் 1948ஆம் ஆண்டில் இருந்து பிரித்தானிய முடியாட்சி முற்றுப்பெற்றது. அதன்

பின் அரசியல் கட்சிகளின் மக்கள் செல்வாக்குக்கேற்ப ஆட்சி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா, ஜப்பான், நேபாளம், சவூதி அரேபியா போன்ற ஒருசில நாடுகளில் மன்னர்கள் இன்றும் ஆட்சி பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களும் உலக அரசியலில் உரிய இடம் வகித்து, உலகப் பொது விடயங்களைக் கவனித்து வருவது குறிப்பிடத் தக்கது. அன்று மன்னர் பலர் நிர்வகித்த தலைமைப் பதவிகளை இன்று அரசியல் கட்சித் தலைவர்கள், வேறுசில குழுக்களின் தலைவர்கள் பொறுப்பேற்று வழிநடத்தி வருகின்றனர்.

### அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி

தலைவன் நல்வழியிற் சென்றால் மக்களும் அவ்வழிச் செல்வர். தலைவன், அதாவது மன்னன் தனது பாதை மாறி மனம்போன போக்கில் சென்றால் அவனது குடிமக்களும் மேய்ப்பன் இல்லாத ஆட்டுமந்தைகளைப் போலப் பல திசைகளிலும் திக்கற்ற பறவைகளாகித் தம் இஷ்டப்படி செட்டைகளை அடிக்கத் தொடங்குவர். நாடு சீரற்றுச் சிதைந்து போகச் சிலர் தருணம் பார்த்து, ஆர்த்தெழுந்து, ஆட்சியைக் கவிழ்த்து, புதியதோர் ஆட்சியை ஏற்படுத்தத் தலைப்படுவர். இப்படியாகக் கிளர்ந்தெழுந்த மக்கள், பல மணிமுடிகளை மண்ணில் படபடவெனச் சரித்து வீழ்த்தி, பல்வேறு வகைப்பட்ட புதிய ஆட்சிகளை நிறுவி வருவதைக் காண்கின்றோம். இப்படி நிறுவப்பட்ட நாடுகளில் சில, பல வருடங்கள் சென்ற பின்னும் ஓர் நிரந்தரமான ஆட்சி இன்றி அல்லோலகல்லோலப்பட்டு வருவதையும் அவதானிக்கின்றோம்.

மக்களின் அன்றாடத் தேவைகளை எந்த ஒரு நாடு பூரணப்படுத்துகின்றதோ அங்கு ஒரு சீரான அரசாங்கம் அமைவு பெற வாய்ப்பு ஏற்படும். மனிதனுக்குத் தொழில் இருந்தாற்றான் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய வருமானத்தைப் பெறமுடியும். இவற்றையெல்லாம் சனப் பெருக்கத்துக்கேற்பத் திட்டமிட்டுச் செயற்படுத்த

வேண்டியது ஆட்சியினது தலையாய கடமையாகும். தனது பொறுப்புக்களைச் சரிவர உணராது, தேசிய வருமானத்தையும் நல்ல முறையில் பெருக்க வகை தெரியாத ஆட்சி நெடுங்காலம் நீடித்திருக்க முடியாது. இது சரித்திர வரலாறு காட்டும் உண்மையாகும். 'மக்கள் சக்தி மாபெரும் சக்தி' என்பதை ஆட்சியாளர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

### புத்தி கெட்ட அரசனுக்கு மதி கெட்ட மந்திரி

அரசனோ அன்றித் தலைவனோ அரசைக் கொண்டு செலுத்த வழி அமைப்பவர்கள் மந்திரிமார்கள் என்பதை அன்றே பழமொழியாளர்கள் தெளிவுபடுத்தி வைத்துள்ளனர். "புத்தி கெட்ட அரசனுக்கு மதி கெட்ட மந்திரி" – விசரனுக்கு விசரன் வழிகாட்டினால் எப்படியிருக்கும்? மன்னனும் கெட்டு, நாடும் சீரழிந்து மக்களும் தாம் வாழும் வகை தெரியாத ஓர் நிலைமைதான் ஏற்படும். அரசன் புத்தியற்றவனாகவிருந்தால் மந்திரியாவது மதிநுட்பம் உடையவனாகவிருக்கவேண்டும். இருவரும் சாடியும் மூடியுமாக அமைந்துவிட்டால் நாட்டில் சங்கடங்கள்தான் மலிந்து காணப்படும். இவற்றை எல்லாம் நாம் அனுபவ வாயிலாகவே அறிந்து கொள்ள முடியும். ஒரு குடும்பத்தின் தலைவனும் தலைவியுமாகிய கணவனும் மனைவியும் மதிநுட்பமுடையவர்களாக இருந்தால் குடும்பம் சீராக அமையும். கணவன் மட்டும் மதிநுட்பம் உடையவனாகவிருந்தால் மனைவியை ஓரளவுக்காவது கொண்டு வழிநடத்துவான். கணவன் மட்டும் மதிகெட்டவனாகவிருந்தால் மனைவி தன்னால் இயன்றவரை தனது குடும்பத்தை இழுத்துச்செல்ல முயற்சி எடுப்பாள். ஆனால் இருவரும் புத்திகெட்டவர்களாக குடும்பம் சேர்ந்துவிட்டால் சொல்லவும் வேண்டுமா!

மதிநுட்பம் உடையவனையே மன்னன் இயன்றவரை மந்திரியாக அமர்த்திக் கொள்வான். அத்தகையவனுக்குக்கூடச் சில சமயங்களில் **மந்திரிக்கும் உண்டு மதி கேடு** என்ற பழமொழியை எடுத்து நோக்கும்பொழுது ஒருசிலர்

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி.

பிற ஏதுக்களின் வயப்பட்டு தக்க தருணத்திலே தம் மதியை இழந்து விடுகின்றனர் என்பதை நாம் ஊகித்துக் கொள்ள முடிகிறது.

**மூர்க்கமுள்ள இராசாவும் மூடமந்திரியும் அழிவார்கள்.**

தலைமை தாங்குபவனுக்குப் பொறுமை அவசியம். மூர்க்கத் தனத்தால் பொறுமையை இழந்தால் அனர்த்தங்கள் தான் ஏற்பட ஏதுவாகும். அந்த நேரத்தில் புத்திசாலியான மந்திரி உடன் இருந்தால் அரசனைத் தடுத்து நிறுத்தி ஆறுதற் படுத்த முடியும். அரசன் மூர்க்கன், மந்திரி மதி கெட்டவன் – இருவரும் ஒன்ருனல் அழியாமல் ஆக்கமா பெறுவார்கள்?

அரசன் அன்று கொல்லும்
தெய்வம் நின்று கொல்லும்

அரசன் கையில் சட்டம். அவன் பின்னே அரச ஏவலாளர்கள் அரசன் இடும் கட்டளைகளை நிறைவேற்றக் காத்திருப்பர். "கொல்" என்று வாய்திறந்து ஒருமுறை சொன்ஞலே போதும். கொலை நிறைவேற்றப்பட்டு விடும். ஆனல் கொடுக்கப்பட்ட மரணதண்டனை சரியான முறையில் நேரகாலமெடுத்து அலசி ஆராயப்பட்டதா என்பதுதான் கேள்விக் குறி. அன்றே கொன்று முடித்துவிட்டால் நீதி எங்கே? ஆய்ந்தோய்ந்து பாராமல் மாசாத்துவானின் புனைந்துரைக்குச் செவிமடுத்து, தமிழ் மும்முடி வேந்தர்களில் ஒருவஞகிய பாண்டியமன்னன் கோவலனை அன்றே கொன்றதனல் நடந்த நிகழ்வு என்ன? மதுரை மாநகரமே கருகிச் சாம்பலாகியது. நீதி கோரிய கண்ணகி பத்தினித் தெய்வமாஞள். மனுநீதி தவறியதால் மன்னனும் மனைவியும் மாண்டனர். சிலம்பு பிறந்து அழியாக் காவியமாக உயிர்பெற்றிருக்கிறது. தெய்வத்தின் செயலால் "தாம் தாம் செய்த வினைகளை தாமே வாழ்நாளில் அனுபவித்தே தீர்ப்பர்" எனவே தெய்வம் நின்று கொல்லும்.

## அரசனும் ஒருநாள் ஆண்டியாவான், ஆண்டியும் ஒருநாள் அரசனுவான்

செல்வமும் வறுமையும் மாறிமாறி வருவன; நிலையற்றன; ''மாறிமாறி மேடு பள்ளமாகும். பள்ளம் மேடாகும்'' காலத்தின் நிகழ்வுகளால் நிலைமை மாற்றம் அடையும் பொழுது பெரியதோர் அரசியல் மாற்றத்தையே ஏற்படுத்தி விடும். மன்னன் மக்களினது மனவெறுப்புக்கு ஆளாகும் பொழுது அரசன் ஆண்டியாக, ஆண்டி ஒருவன் அரசகொலு வில் ஏறுவதுமுண்டு. அரசன் செல்வத்தாலும் பாரம் பரியத்தாலும் பதவியைப் பெற்ருன். ஆண்டி தொண்டால் மக்களைப் பக்குவப்படுத்தித் தலைமையைப் பெற்ருர். ஆனல் இத்தகைய ஒருவன் இதுவரை எமது நாட்டு அரசியலில் இடம் பெற்றதில்லை. காரணம் வகுப்புவாதம் தலைவிரித் தாடுவதால் பெரும்பான்மை மக்களின் தலைவர்களே அரச கட்டிலை அலங்கரித்து வருகின்றனர். இதனுல் சிறுபான்மை மக்களாகிய நாம் அரசியல் அனுதைகளாகச் சொல் லொணுத் துன்பத்தை அனுபவித்து வருகின்ருேம். இதிலி ருந்து மீள நாம் ஒவ்வொருவரும் உணர்வடைய வேண் டும். எமது கடமைகளைச் சரிவரச் செய்தால் எமக்கு விமோசனம் மிக விரைவில் கிடைக்கும்.

3

# ஆறு கடக்கும் வரையும் அண்ணன் தம்பி

ஆ. ஜெயகாந்தன்

அரையிலே புண்ணும் அண்டையிலே கடனும் ஆகாது. இதுவும் பழமொழிக் கூற்றில் ஒன்று. கடன் – அதுவும் வீட்டுக்கு அண்டையிலே பட்ட கடனுல் சதா உபத்திரவம் இருந்துகொண்டே யிருக்கும். காலே, மாலே, நல்லநாள், பெருநாள், உண்ணும் நேரம், உறங்கும் வேளே என நேர காலம் பாராது கடன் கொடுத்தவன் வீட்டு முற்றத்தில் வந்து நின்றுகொண்டேயிருப்பான்.

கடன் வாங்கியவனும் சிலகால் தான் சொன்ன தவணேக்குக் கொடுக்க முடியாத நிலேமையேற்பட்டால் தன் வீட்டுக்குத் தானே செல்லமுடியாது ஒளிந்து மறைந்து திரிவான். வீட்டுக்காரனேக் காணமுடியாத நேரத்தில் கடன் கொடுத்த அண்டை வீட்டுக்காரன் வீட்டில் இருப்பவர்களுடன் வீண் வார்த்தை பேசி மோதிக்கொள்ளும் நிலேபரம் ஏற்பட்டு விடுவதுமுண்டு.

அரையில் புண் இருந்தால் துணி கட்டுவது, இருப்பது, எழும்புவது, படுப்பது, நடமாடுவது எல்லாமே வேதனேயாக விருக்கும். அதுவும் சிரங்குப் புண்ணுகவிருந்தால், உபத்திரவம் தாங்க முடியாது. கை போட்டுச் சொறிய வேண்டிய நிலேமை ஏற்படும். பிறருடன் கதைத்துக் கொண்டு நிற்கும் வேளேயிலே சிலகால் வேதனேயைத்

தாங்கமுடியாது கை தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிடும்.

அரையில் புண்ணையும், அண்டையில் கடனையும் ஒரு முறை அனுபவ வாயிலாகக் கண்டவன், மறுமுறை தன்னை இந்தப் பாரிய உபத்திரவத்துக்குள் ஆளாக்க மாட்டான் என்பது திண்ணம். இல்லாவிட்டால் அவன் சமுதாயத்தில் தன்மானத்தை இழந்து, பிறர் நகைக்கவும், தூற்றிக் கதைக்கவும் இடங்கொடுப்பதாகவும் அமையும்.

துணைக்குப் போனாலும் பிணைக்குப் போகாதே.

துணை, பிணை ஒருவன் மற்றவனுக்கு உதவுவது. உதவும் பொழுது துணை செய்வது சர்வ சாதாரணமானது. இதனால் இழப்புக்களையோ எதிர்பார்ப்புக்களையோ நோக்க வேண்டியதில்லை. துணைக்குப் போவதனாலும், பிணைக்கு நிற்பதனாலும் பாரிய இழப்புக்களை எதிர்கொள்ள வேண்டிவரும். ஒருவன் பெரியதோர் பொருளாதாரக் கஷ்டத்தில் இருக்கும் பொழுது வேறு ஒருவன் கடன் கொடுக்க முன்வருகின்றான். ஆனால் தான் கொடுக்கும் கடனுக்குப் பெறுமானமாக காணி, நகை ஏதாவதொன்றை அடமானமாகக் கேட்கின்றான். கடன் பெறுபவனிடம் அடமானமாகக் கொடுக்க ஒன்றுமேயில்லை. பரிதவிக்கின்றான். இறுதியாக தனக்குத் தெரிந்த பெறுமானமுள்ள ஒருவனைப் பிணையாக நிறுத்திக் கடனைப் பெற்றுக் கொள்ளுகின்றான். இதனால் கடன் கொடுப்பவனுக்கு பிணையாளியே பொறுப்பாளியாகின்றான். கடன் பெற்றவன் கடனைச் செலுத்தமுடியாத வேளையில் பொறுப்பாளியே கடனையும் வட்டியையும் செலுத்தவேண்டிய நிலைமைக்கு ஆளாகின்றான்.

பிணைகள் பல. காணிப்பிணை, காசுப் பிணை, சரீரப் பிணை என்பன. நீதிமன்றங்களிலும் எதிரிகளை விசாரணை முடிவடையும் வரை பிணையில் விடுதலை செய்வதுண்டு. பிணைக்காலத்தில் எதிரியின் தப்புக்களுக்கு பிணையாளியே பொறுப்பாளியாவார். பிணை நின்றவர் தான் எதிரியின்

தண்டத்தைச் செலுத்தி தனது மானத்தைக் காப்பாற்றிக் கொண்டாலும், தனதளவில் பொருளாதார இழப்புக்கு இலக்காகின்றார்.

துணை நிற்பதால் இழப்புக்களையோ எதிர்பார்ப்புக் களையோ அதிகளவில் நோக்க வேண்டியதில்லை என்று எடுத்துக்கொண்டாலும், சில சமயங்களில் சமூக விரோதச் செயல்களில், அதாவது கொலை, கொள்ளை, போதைவஸ்து கடத்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு வழித்துணை யாகச் செல்வதனால்கூடச் சிலகால் வகையாக மாட்டிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுவதுமுண்டு. அத்தகைய நேரங்களில் அனுபவசாலிகளாகிய பெருச்சாளிகள் தாம் தந்திரமாகத் தப்பிப் பிழைத்துக் கொள்வர். துணைக்குச் சென்றவர்கள் சிறையிருக்க, தப்புச் செய்தவர்கள் தந்திர மாகத் தப்பிப் பிழைத்ததுமின்றி நல்லவர்களாய்ச் சமூகத் தில் நடமாடித் திரிவர்.

மனிதர்களுக்கு மனிதர்கள் துணை நிற்கத்தான் வேண் டும். அதற்கு முன் அவனது குணம் செயல் அறிந்தே துணை நிற்க வேண்டும். பொதுவாக சமூக நன்மைக்காக ஆற்றும் பணிகளில் துணை நின்று உதவ வேண்டியது எமது கடமையாகும். ஆனால் தேவையற்ற அநாவசியமான கரு மங்களில் துணை போவதும், பிணை போவதும் பெருந்தப்பா கும்.

ஆறு கடக்கிறவரை அண்ணன் தம்பி
ஆறு கடந்தால் நீ யாரோ, நான் யாரோ!

தமது காரியம் கைகூடும் வரை இப்படியாக நடந்துகொள் வது சில மனிதர்களுடைய சுபாவம். தமது மனப்பயத்தை மறைத்து, மிகத்துணிந்தவராக நடித்து, நீரில் பிரயாணம் செய்யும்வரை முன்பின் தெரியாதவர்களுடன் மிக நெருங் கிய இரத்த உறவினர்களைப்போல நடந்துகொள்வர். உடன் இருப்பவர்களும் வேறுபாடின்றி அண்ணன் தம்பியைப் போன்று ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்பார்கள்.

சிலர் தமது கட்டுச் சோற்றில் பங்கிட்டுக் கொடுப்பார்கள். புதியவர் பிரயாணப் பயமோ களைப்போ தெரியாமல் மற்ற வர்களின் அனுசரணையுடன் தரை வந்து சேருவர். ஆற் றுப் பிரயாணத்தில் மட்டுமல்ல, நீண்டதூரப் பிரயாணங் கள் பலவற்றிலும் இத்தகைய செயற்பாடுகள் நடைபெறு வது சர்வசாதாரணம். ஆனால் பிரயாணம் முற்றுப்பெறும் இடத்திற்தான் ''நீ யாரோ நான் யாரோ'' என்ற உளப் பாடு வெளிப்படுகின்றது. கூடப் பிரயாணம் செய்தவர் களைத் திரும்பிக்கூடப் பாராமல் மூட்டைமுடிச்சுக்களை மட் டும் பக்குவமாக எடுத்துக்கொண்டு நடைகட்டத் தொடங்கி விடுவார்கள்.

இத்தகையவர்களை நாம் பிரயாணத்தில் மட்டும் சந் திக்கிறோமா? இல்லவேயில்லை. ''சமூகநலன் கருதி நாயாக உழைப்பேன்'' என முன்வருபவர்களில் அநேகர் ஆரம்பத் தில் தாம் நினைத்ததைச் சாதிக்கும்வரை ''ஆறு கடக்கிற வரை அண்ணன் தம்பி, ஆறுகடந்தபின் நீ யாரோ நான் யாரோ'' என்ற பழமொழிக் கூற்றுக்கிணங்க சொந்தபந்தம் பேசுவர். வலிந்து வந்து நன்மை தீமைகளில் பங்குகொள் வர். சில இடத்தில் பணமும் செலவு செய்வர். அழையா விருந்தாளியாக உட்புகுந்து முன்பந்தியில் அமர்ந்துகொள் வர். உண்மையான மக்கள் தொண்டன், அயராது சமூ கத்துக்கு உழைக்கக்கூடிய வல்லவன், நல்லவன் என்ற பெயரைத் தேடிக் கொள்வர். ஆனால் அவனது உள்ளத் தின் மறைவில் குடிகொண்டிருக்கும் சுயநலங்களை அப்பா விப் பொதுமக்கள் எப்படி அறிவார்கள். வெளித் தோற்றத் தில் மயங்கி தமக்குத் தலைவராக்கிக் கொள்ளுகின்றனர். தலைவர் இப்பொழுது சகல கௌரவப் பதவிகளையும் தன தாக்கிக் கொள்ளும் சாதுரியத்தைப் பெற்றுவிட்டார். அவ ருக்கு அவரே பெரியவர்.

''பதவிகளை எனது வல்லமையாலும் சாதுரியத்தாலும் பணத்தாலும் தேடியுள்ளேன்'' என்ற மமதையால் தனக் கென ஒரு தனித்துவப் பாதையமைத்து நடக்கத் தொடங்

குவார். மற்றவர்களை மதியார். தட்டிக் கேட்டால் நீ யாரோ எனத் தூக்கி எறிந்து பேசவும் தலைப்படுவார். காரியம் ஆகும்வரை ஒன்று; காரியமாகிக் கைக்குக் கிட்டிய பின் வேறொன்று. இது சிலரது இயல்பான குணமாக இல்லாவிட்டாலும், தாம் பதவியில் இருக்கும் காலத்திலேயே தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் தன்னைச் சார்ந்த சிலருக்கும் வேண்டியதைத் தேடிக்கொண்டு சொகுசாக எதிர்காலத்திலே வாழலாமென்ற நப்பாசையினாலே "யானை தன் தலையிலே தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வது போல" தமது எதிர்கால வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளுகின்றார். ஆனால் இதுவரை தான் மக்களிடம் தேடிக்கொண்ட நற்பெயரையும் புகழையும் இழந்து ஒரு மரப்பாவையாகி விடுகிறேன் என்பதை இவ்வாறானவர்கள் சற்றும் உணர்வதில்லை.

ஆனால் இலட்சியம்தான் பெரிதென மதித்து தன்னைத் தான் தியாகியாக்கி உழைப்பவர்கள் பட்டம் பதவிகளைப் பெற்றுத் தம்மை உயர்த்தா விட்டாலும் உண்மைத் தொண்டர்களாக மறைந்த பின்பும் "குன்றின் மேலிட்ட விளக்கைப் போல" மக்கள் மத்தியில் பிரகாசிப்பார்கள். உண்மைக்கும் நேர்மைக்கும் என்றும் அழிவில்லை. உத்தமர் என்றும் வாழ்வர்.

# 4

# நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன?

ஆ. ஜெயசந்திரன்

நாய் மனிதனை அண்டி வாழ்வது. அதன் செயல்களை நன்கு அவதானித்த மனிதர்கள் நன்றியுள்ள மிருகமென்றும், வீட்டைக் காவல் செய்ய நிகரற்றது என்றும் அன்று தொடக்கம் இன்று வரை வீடுகளில் வளர்த்து வருகின்றனர்.

நாய் தனக்கெனத் தனியான சில பழக்கவழக்கங்களை இயல்பாகவே கொண்டுள்ளது. இவற்றை அவதானித்த பண்டைய மக்கள் தமது பழமொழிப் படைப்புக்களில் நாயையும் மறக்கவில்லை. நாயை வைத்தே பல பழமொழிகளைப் புனைந்துள்ளனர்.

ஒரு கவளம் சோறு இட்டவரை நாய் தன் வாழ்நாள் மட்டும் மறவாத இயல்புடையது. அவரைக் கண்ட நேரத்தில் எல்லாம் தன் வாலையாட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் சுபாவமுடையது. ஆனால் இத்தகைய நாயை மனிதன் சிறு குட்டியாக இருக்கும்பொழுது வாரி எடுத்து முத்தம் கொடுத்து, செல்லம் பொழிந்து, குளிப்பாட்டி வளர்ச்சிக்கு ஏற்ற உணவை அளித்து, மருத்துவம் பார்த்து வளர்க்கிறான். மிருகமாகிய நாயும் பகுத்தறிவு படைத்த மனிதன் விரும்பிய துறையில் அவனுக்கு நன்றியாக உழைத்து வருகின்றது. காலத்தின் சுழற்சியால் வயது

முதிர நாய்க்குப் பிணியும் வயோதிபமும் வந்து சேருகின்றது. மனிதன் மனதில் திடீர் மாற்றம் ஏற்படுகின்றது. பல வருடங்கள் தனக்காக உழைத்த நாயை அடித்துத் துரத்துகின்றான்; ஏன் – கல்லெடுத்துத் தன் கையாலேயே எறிந்து துரத்தி விரட்டுகின்றான். நாய்தான் என்ன செய்யும்? வாய் பேசத் தெரியாத அந்த மிருகம் சாம்பர் பிட்டியிலும், தெருவிலும், சந்தையிலும் தஞ்சம் அடைகின்றது. பாவம், அவ்விடத்தில் பலரின் கைவரிசைக்கு ஆளாகிறது. அது இறந்து மண்ணோடு மண்ணாகும் வரை தாங்கொணாத் துயரங்களை அனுபவிக்கின்றது. நன்றி மறவாத நாய்க்கு பகுத்தறிவு படைத்த மனிதன் தேடிக்கொடுத்த நிலைமை இது. இத்தகைய மனிதச் செயலை உணர்ந்தமையினாலோ என்னவோ மண்ணுலக வாழ்வை வெறுத்த மாணிக்கவாசகர் ''நாயினும் கடையாய்க் கிடந்த அடியேற்கு தாயிற் சிறந்த தயவான தத்துவனே'' என்று தன்னைத் தானே மிகக் கீழ்மைப்படுத்திப் பாடியுள்ளார். தாய் உலகில் மிகச் சிறந்தவள்; நாய் மிகக் கடையது. நாயின் நிலைமையிலும் கடை நிலைமையில் தன்னைத்தானே நோக்குவதை நாம் நன்கு உணர வேண்டியிருக்கின்றது.

காவல் தெய்வம் வைரவரின் வாகனம் நாய். ஆனால் இதைப்பற்றிப் பழமொழி வாக்கியங்களில் எதுவும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் சில மனிதர்கள் நாய் என்ற பதத்தை தாம் மற்றவர்களுடன் மனக்குரோதம் கொள்ளும் காலத்திலும் பிறருடன் நேருக்குநேர் சினங்கொண்டு பேசும் நேரத்திலும் மற்றவர்களின் குற்றம் குறைபற்றி முறைப்படும் சமயத்திலும் இழிவான செயலில் ஒருவன் ஈடுபட்டான் என அறியும் பொழுதும் தாராளமாக உபயோகப்படுத்துகின்றனர். நன்றி கெட்ட நாய், நக்கி நாய், பொறுக்கி நாய், எச்சில் நாய், நாய் வீட்டு நாய், கெட்ட நாய், பெட்டை நாய், குட்டை நாய், விசர் நாய், பறை நாய், நாய்ப் பழக்கம், நாய்க் குணம், நாய்ச்சேட்டை, சொறி நாய் என்பன அவர்

களது வாயிலிருந்து உதிரும் சொற்களாகும். எனவே இவற்றிலிருந்து நாம் ஒன்றை மட்டும் உணரக்கூடியதாக இருக்கின்றது. நாய் நன்றியுடையதாக மனிதனுக்கு உதவினும், மனிதன் நாயை மிக இழிவான இடத்தில் வைத்தே நோக்குகிறுன்.

நாய்க்கு வேலையுமில்லை; நடக்க நேரமுமில்லை

எந்த நேரமும் ஓடித்திரியும் சுபாவமுடையது நாய். வேறு மிருகம் ஒன்றைக் கண்டுவிட்டால் மிக வேகமாக ஓடி அந்த மிருகத்தைத் துரத்தும் தன்மை கொண்டது. இன்று அறக் கப் பறக்கத் திரிவார்கள் நம்மில் பலர். ஆனுல் கிடைக் கும் பலன் பூச்சியம். அத்தகையவர்களைப் பார்த்து வேறு சிலர் கிண்டலாக இந்தப் பழமொழியைக் கூறுவதைக் கேட் கின்றேம்.

நாய் அடித்த துட்டு குரைக்கவா செய்யும்?

என்பது பழமொழி.

**பூ விற்ற பணம் மணக்குமா? மீன் விற்ற பணம் நாறுமா?**

என்ற பழமொழிகளும் காணப்படுகின்றன. நாய் குரைக் கும்; பூ மணக்கும்; மீன் நாறும். இவற்றுல் தேடும் பணம் மணக்குமா? காசு என்றுல் மனிதன் பேயாகப் பறப்பவன். எந்தத் தொழிலைச் செய்தாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைக் கடைப்பிடித்துப் பணம் தேடலாம். நாயைப் பராமரிக்கும் தொழில் பார்த்த பலர் பணத்தைக் கூலியாகப் பெறுகின்றனர். இன்று அங்காடி நாய்களைப் பிடிக்கும் தொழிலைச் சிலர் செய்து வருகின்றனர். மிருக வைத்தியர்களாக இருப் போர் நாய்க்கு வரும் நோய்களுக்கு சிகிச்சை செய்கின் றனர். நாய் குரைக்கும். விசர் நாய் கடித்த மனிதனும் நோயால் நாயைப்போல் குரைப்பான். பணம் குரைக்கவா செய்யும்? என்று வினு எழுப்பப்பட்டிருப்பதால் மனிதனு டைய வறட்டுக் கௌரவத்தை எடுத்து எறிந்துவிட்டு எந்தத் தொழிலையும் செய்து உழைக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்டி இருப்பதாகவும் கொள்ளலாம்.

நாய் குரைத்து விடியுமா? கோழி கூப்பிட்டு விடியுமா? இப்பழமொழியும் வினவாகவே எழுப்பப்பட்டிருக்கின்றது. விடிவதும் இருளுவதும் இயற்கையாகவே நடைபெற்று வருவன. சத்தம் சந்தடி கேட்டவுடன் நாய் குரைக்கும் தன்மை கொண்டது. கோழியும் அத்தகைய தன்மை வாய்ந்தது. இரவில் வெளிச்சத்தைக் கண்டாலே கோழிச் சேவல் கூவத் தொடங்கிவிடும். சேவல் கூவும் பொழுது முதலாம் சாமம், விடியற்பொழுது என்று சிலர் காலத்தைக் கணக்குப் போடுவதுண்டு. இருந்தாலும் நாய் குரைத்தோ கோழி கூப்பிட்டோ பொழுது விடியென்றாலும் விடியாது. பண்டைய எமது மக்கள் வாழை மரத்தைக் குறுக்காக வெட்டி, காலை வெளிவந்த குருத்தை அளந்து அன்று குழந்தை பிறந்த நேரத்தைக் கணக்கிட்டார்கள் என்ற செயற்பாட்டை மூதாதையர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அன்று கடிகாரம் இல்லாத காலம் என்பது குறிப்பிடத்தக்கது.

நாய்க்குத் தெரியுமா போர்த்தேங்காய் அருமை?

நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன ?

நாய் கோவிலுக்குப் போவானேன்? கோவில் காத்தவன் தெண்டம் இறுப்பானேன்?

இந்த மூன்று பழமொழிகளும் கேள்வியாகவே அமைந்துள்ளன.

நாய் பகுத்தறிவற்ற மிருகம். தான் காணும் பொருட்களைத் தகுதி காணும் தன்மையற்றது. சடப்பொருட்களைக் காணும் நேரத்தில் பின்னங்கால்களில் ஒன்றைத் தூக்கிக்கொண்டு சடப்பொருளின்மேல் சலம் விடும் சுபாவமுடையது. அந்நேரத்தில் பாதுகாப்பற்ற செக்கின் மேலென்ன சிவலிங்கத்தின் மேலும் சலத்தை விடும்தான். நாய் இவ்வாறு கோவில் தூண்களையும் வெளிநிலங்களையும் அசுத்தப்படுத்தும் தன்மை உடையதுதான். மனிதன் ஒருவனை பாதுகாப்புக்காக வைத்திருக்கும் இடத்தில் அவன் தன் கடமையைச் சரிவரப் பார்ப்பானேயாகில், நாயைக்

கண்டதும் துரத்தி தெண்டம் இறுக்கும் நிலையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம் தானே? அதை விடுத்து அந்த மனிதன் அசட்டையீனமாக இருப்பதும் கடமை நேரத்தில் கண் அயர்வதும் காவல் தொழில் பார்ப்பவர்களுக்கு ஏற்றதல்ல. தான் செய்யும் தொழிலைச் சரிவரச் செய்ய முடியாத ஒருவன் கடமையில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும். அதுவே மனிதப் பண்பு.

### பட்டி நாய் தொட்டி சேராது

இன்று நம்மிடையே ''பழக்கம் பெரிதா? பரம்பரை பெரிதா?'' என்ற வாக்கியம் வாதப் பிரதிவாதங்களுக்குத் தீர்வுகாணமுடியாததொன்ருகவிருந்து வருகின்றது. இங்கே ''பட்டிநாய் தொட்டி சேராது'' என்ற பழமொழிமூலம் பழக்கத்தை மாற்றி அமைக்க முடியாது என்ற தீர்க்கமான முடிவையே உறுதிப்படுத்தி வைத்திருக்கிறுர்கள் பண்டைய பழமொழியாளர்கள். பட்டியில் கூடி வாழ்ந்த மிருகத்தைத் தொட்டியில் கட்டி எப்படிப் பராமரித்து வந்தாலும் அது தன் பட்டியுடனேயே சேர்ந்து வாழ விரும்பும். சந்தர்ப்பம் கிடைத்த நேரத்தில் பட்டியுடனேயே போய்ச் சேர்ந்து கொள்ளும். சுயாதீனமாக வளர்ந்த நாயைக் கட்டிப் போட்டால் அது சதா சத்தமிட்டுக்கொண்டும், ஊளையிட்டுக்கொண்டுமே இருக்கும். இவ்வாறே சில மனிதர்களும் தாம் பழகிய பழக்கத்தில் இருந்து விடுபட முடியாது அல்லற்படுவதை அவதானிக்கலாம்.

### நாய்க்கு எச்சிலிலை பேய்க்கு வேப்பிலை.

எச்சிலிலை – உண்டு பின் கழிக்குமிலை. வேப்பிலை – விஞ்ஞான ரீதியாகவே ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலிகையிலை. மூலிகைகள் நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தியை உள்ளடக்கியவை. பண்டைக் காலம் தொட்டு வேப்பமரத்தை தேவ விருட்சமென்றும் பத்தினித் தெய்வம் உறையுமிடமென்றும் நம்மவர்கள் பேணிக்காத்து வருகின்றனர். மனேவியாதியால் பீடிக்கப்படுபவர்களைப் பேய் பிடித்தவர்கள்

எனக் கருத்திற் கொண்டு பேய் வித்தைக்காரனை நாடிச் செல்வர். அவன் அங்கே நோயாளிக்கு வேப்பிலையால் அடித்துப் பார்வை பார்ப்பது அன்று தொடக்கம் இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. மனிதன் தான் உணவுண்டு முடிந்த பின் மிச்சம் சொச்சமாயுள்ள உணவுகளைத் தானுண்ட எச்சிலிலையில் சேர்த்து நாய்க்கு இடுவது பாரம்பரியமாக நடைபெற்று வருவது. அன்றிச் சிலர் நாய்க்கென்றே ஒரு பாத்திரத்தை ஒதுக்கி வைத்து அதில் தீனியிட்டு வருவதுமுண்டு. அந்தப் பாத்திரம் என்றும் நாய் எச்சிலாகவே இருக்கும்.

**நாய் நக்கிச் சமுத்திரம் குறையுமா?**

**நாய்க்கு நடுச் சமுத்திரத்திலும் நக்குத் தண்ணீர்**

நாய் சிறிதளவு தண்ணீரை நக்கிக் குடிப்பதனுல் சமுத்திர நீர் எப்பொழுதும் குறைவடையாது. அதைப்போல பெரிய செல்வந்தர்களிடமிருந்து ஒரு பகுதி பணம் செலவாகினுல் அவனது செல்வம் குறைவுபடாது.

பெரிய அளவில் சமுத்திரத்திலும் சரி, சிறிதாகவுள்ள பாத்திரத்திலும் சரி தண்ணீரை நக்கியே குடிக்கும் இயல்பு கொண்ட நாயை யாராலும் மாற்றி அமைக்க முடியாது. அதைப் போல பெரிய அளவில் தேட்டமுடைய மனிதனுடைய ஆஸ்திகளைப் பாதுகாப்பாளர் சிறியளவாகத் தமக்கு எடுத்துக்கொள்ளுவதால் குறைவு தெரியவராது என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய மனித செயல்களையும் கண்டுபிடிப்பது மிகக் கஷ்டம். மற்றும் சிலர் தாமாகவே உழைத்துச் சுதந்திரமாக வாழாது என்றும் பிறர் கையையே எதிர்பார்த்திருப்பர். அத்தகையோருக்கு எந்த நேரத்திலும் மற்றவர்களினுல் கிடைக்கும் உணவு நக்குத் தண்ணீர் போன்றதே. கட்டி வளர்க்கப்படும் நாய் சுதந்திரமாக நடமாடாது. எஜமான் நினைத்த நேரத்திலேயே அதற்கு உணவு கிடைக்கும். அவ்வாறனதே பிறரை நம்பியிருப்பவர்களின் வாழ்வும் நிலையும் என்பதை அத்தகையோர் நன்கு உணர வேண்டும்.

நாய் வாழ்ந்தால் என்ன
பூனை சிங்காசனம் ஏறினால் என்ன?

அன்று மக்களிடையே அதிக அளவில் நாய் இன்றுபோல் பல துறைகளில் உபயோகப்படுத்தப்படவில்லை என்பது உண்மை. பூனை எலியைப் பிடிப்பதற்காகவே வீடுகளில் வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது. எனவே, தேவையற்றவர்கள், என்றும் தேவையற்றவர்கள்தான் என்ற மனப்போக்குடன் இந்த வாக்கியம் சில காலம் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் உபயோகமற்ற பூனை சிங்காசனம் ஏறியதால் கூடிய பிரதிபலிப்பை ஏன் சிந்தனையில் கொள்ளவில்லை என்பதைச் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

“வைக்கோல் பட்டடை நாய் போல” என்ற சொற்றொடர் வாக்கியம் இன்று நம்மவர் மத்தியில் சாதாரணமாக எடுத்துப் பேசப்படுகின்றது. வைக்கோற் பட்டடைக்கு அருகில் கிடக்கும் நாய் தானும் தின்னாது; வைக்கோலைத் தின்ன வரும் மாட்டையும் விடாது. இது சாதாரணமான நிகழ்வு. நாய்க்குரிய கடமைப்பாட்டை அது தேவையான இடத்தில் செய்கிறது. ஆனால் நாய் தான் உண்ணாத பொருளை எஜமானுக்குப் பாதுகாத்துக் கொடுக்கிறது எனக் கருதவிடமுண்டு. ஆனால் நம்மில் சிலர் மற்றவர் வாழ்வதற்கும் கொடாது பூதங்காப்பதுபோல் பெருந்தொகையை வைக்கோற் பட்டடைபோற் குவித்து வைத்திருப்பர். தாமும் உண்ணாமல் உடுக்காமல் நற்கருமங்களுக்குக் கூட ஈகையும் செய்யாமல் திடீரென இவ்வுலகையே விட்டு அகன்றுவிடுவார்கள்.

உண்ணாமல் தின்னாமல் அண்ணாமலையாருக்குக் கொடுக்கும் பேர்வழிகள் தான் இவர்கள். வழியிருந்தும் வாழத் தெரியாது பணம் காக்கும் பூதங்களாக 'வாழ்ந்து அகலட்டும். தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வழிகாட்டும் மனிதன் என்றும் மனித சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டே இருப்பான்.

5

# நோயாளி விதியாளியானால் பரிகாரி பேராளி

ஆ. ஜெயகாந்தன்

---

சுதேச வைத்தியங்களாகிய, சித்த, ஆயுள்வேத, யூனானி முறைகள் எமது நாட்டில் பண்டைக்காலம் முதல் நிலை பெற்று வந்திருக்கின்றன. எமது நாட்டை ஐரோப்பியர் ஆக்கிரமித்த பின்பே மேலை நாட்டு வைத்திய முறைகள் இங்கு இடம் பெறத் தொடங்கின.

எமது சித்த - ஆயுள் வேத முறைகளை அகஸ்திய முனிவரைத் தலைமையாகக் கொண்டு பதினெண் சித்தர்கள் செப்பிவைத்துள்ளனர். இவ்வாகட முறைகளைத் துணை கொண்டு பல வைத்தியர்கள் பரம்பரைத் தொழிலாகவே வைத்தியத்தைச் செய்து வந்திருக்கின்றனர். அவர்களையும் பழமொழியாளர் நோக்காமல் இருக்கவில்லை.

ஆயிரம் பேரைக் கண்டவன் அரைப்பரிகாரி

ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைப்பரிகாரி

ஆயிரம் வேரைக் கண்டவன் அரைப்பரிகாரி

ஆயிரம் வேரைக் கொன்றவன் அரைப்பரிகாரி

ஆயிரம் வேரைக் கொண்டவன் அரைப்பரிகாரி

ஒரே பழமொழி காலத்துக் காலம் இடத்துக்கு இடம் திரிபு பெற்று புழக்கத்தில் இருந்து வருவது கவனிக்கத்

தக்கது. ஆயிரம் என்ற பதமும், அரைப்பரிகாரி என்ற பதமும் ஐந்து வாக்கியங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. முதலிரண்டு வாக்கியங்களிலும் பேரைக் கண்டவன். பேரைக் கொன்றவன் என மாறுபட்டு காணப்படுகின்றது. அடுத்த மூன்று வாக்கியங்களிலும் முறையே வேரைக் கண்டவன், வேரைக் கொன்றவன், வேரைக் கொண்டவன் எனத் திரிபு பெற்றிருக்கின்றன. பதங்களின் பொருள் மிக இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியன. இருந்தாலும் மூலப்பழமொழி எது?

சித்த வைத்திய ஒளடதங்களில் அதிக அளவில் வேர், விராய், இலை, பட்டை, பூ என்பன இடம் பெறுகின்றன. இவைகளைக் கண்டவன், கொன்றவன், கொண்டவன் பிணி தீர்க்கும் வைத்தியனுகிவிட முடியாது. மருந்துச் சரக்கு வியாபாரி — ஏன் மூலிகை பிடுங்கி கடைகளுக்கு கொடுப்பவர்கள் பரிகாரியை விட இவற்றில் கூடிய அனுபவமுடையவர்கள். எனவே அவர்கள் பரிகாரிகளா? என்பது சிந்திக்கத்தக்கது. நாடி தெரிந்து நோய் கண்டு அதற்குரிய மருந்து கொடுப்பவனே பரிகாரி. ''மருந்துகால் மதிமுக்கால்'' என்பதற்கு ஏற்ப பரிகாரி வைத்திய அறிவு படைத்தவனுகவும் மதிநுட்பம் உடையவனுகவும் இருக்க வேண்டியது மிக அவசியம். நோயாளியுடன் விளையாட்டாக ஊசலாட முடியாது. உயிர் விலைமதிப்பற்றது. போனல் திரும்பிப் பெற முடியாதது என்பதை வைத்தியன் நன்கு உணர வேண்டும். எனவே ஆயிரம் பேரைக் கண்டவன் அரைப் பரிகாரி என்ற வாக்கியமே பெரும் பாலும் மூலப் பழமொழியாக இருந்திருக்க வேண்டும். கல்வியுடன் அனுபவ முதிர்வே ஒருவனைப் பூரண மனிதனுக்குகின்றது என்பதைக் கருத்தில் கொண்டால் கிராமப்புற வைத்தியன் ஒருவன் அதுவும் பண்டைக்காலத்தில் ஆயிரம் நோயாளிகளைக் காண பல வருடங்கள் சென்றிருக்கும். அப்பொழுது அவன் அனுபவசாலியாகவும், அறிவு முதிர்ந்தவனுகவும் பெரும்பாலும் இருப்பான். அதை விடுத்து ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைப்பரிகாரி என்ற வாக்கியத்தை எடுத்துச் சீர்தூக்கிப்

பார்த்தால் நோயாளியைச் சுகப்படுத்துபவனுகவே பரிகாரி இருக்க வேண்டும். அது பரிகாரியின் கடமையும் கூட. நோயாளி ஆயிரம்பேர் இறந்தபின்தான் பரிகாரி ஒரு அரைப்பரிகாரியாவான் என்ருல் அவன் வைத்தியத்தொழில் செய்வதற்கே இலாயக்கற்றவனுவான் என்பது வெள்ளிடைமலே. யாரோ ஒரு தனி மனிதன் ஒரு பரிகாரிமேல் சினம் கொண்ட நேரத்தில் ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைப் பரிகாரி என்ற பதத்தைப் பிரயோகப்படுத்தியிருக்கின்ருன் போலும்?

அது வாய்மொழியாகப் பரவி நிலேகொண்டிருக்கிறது. ‘‘நோயாளி விதியாளியானுல் பரிகாரி பேராளி’’. விதியை வெல்ல முடியாது என்பதில் திட நம்பிக்கை கொண்டவர்களின் வாய்மொழியே இது.

நோய் வந்தால் மருத்துவம் செய்ய வேண்டிய அவசியம் இல்லே எனக் கூறும் சில மத நம்பிக்கை கொண்டவர்கள் இல்லாமலில்லே. நோயாளி மண்ணில் வாழ வேண்டியவனுக இருந்தால் நோய் மாறித் தப்பிப் பிழைப்பான் என்ற மன நம்பிக்கையுடன் செபங்களேச் சொல்லி வழிபாடுகளிலீடுபடுவர். இத்தகைய செயற்பாடுகளில் நம்பிக்கை வைப்பவர்கள் மிக மிகச் சிலரே. ஒருவனுக்கு நோய் கண்டதும் உடனடியாக மருத்துவனே நாடிப் பரிகாரம் தேட வேண்டும். அதை விடுத்து காலத்தைக் கடத்துவோமேயானுல், நோய் மாறினுலும் அந்த மனிதனுடைய உடல் பாதிப்படையும். உருக்குலேந்த அவனது உடலேத் தேற்றி எடுக்கப் பல காலம் எடுக்கும். ஆகையால் நோயாளியை உடனடியாகப் பரிகாரியிடம் காட்டி பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும்,

நோயாளி ஒருவன் வருத்தத்தால் மிக வேதனேப் பட்டுக்கொண்டு கிடக்கின்ருன். அவனுக்கு பரிகாரம் பார்த்த வைத்தியனே நாடி நோயாளியின் வீட்டார் சென்ருர்கள். வயது முதிர்ந்த அந்தப் பரிகாரியார் சூதாட்டத்தில் பங்

காளியாக இருக்கின்றான். வந்தவர்களிடம் ஒரு குளிகையை இருந்தவிடத்தில் இருந்தவாறே எழும்பாது கொடுத்து, இதோ இதைக் கொண்டுபோய்க் கொடு. நான் இரண்டு மணி நேரத்தில் வந்து பார்க்கின்றேன்'' என்று அவர்களை அனுப்பி விட்டார். தான் கூறியவாறே பரிகாரி அந்த நோயாளியைப் பார்க்கச் சென்றார். நோயாளி பூரண குணமடைந்து காணப்பட்டான். பரிகாரி தன் மனதுக் குள்ளேயே ''எனது உடல் ஊத்தைகூட நோய் மாற்றும் ஔடதமாகிவிட்டது'' என்று எண்ணியவாறே வீடு வந் தடைந்தார். 'நோயாளி விதியாளியானால் பரிகாரி பேராளி' என்ற பழமொழிக்கு உண்மையாக அமைந்தது பரிகாரி யின் இந்தச் செயல். இந்தச் செய்தி உண்மையானது. ஒரு மறைந்த வைத்தியரின் வாயில் இருந்து உதிர்ந்தது.

## மருந்து கால் மதி முக்கால்

உலகம் அறிவியல் வயப்பட்டது. அறிவு மிக்கவன் மிக இலகுவாகக் காரியங்களைச் சாதிக்க முடியும். வலிமை பெற் றவன் நோய்க்கு மருந்து கொடுக்கும்பொழுது மதி நுட்பத் துடன் செயற்பட்டால் கொடிய நோயையே குணமடையச் செய்து விடுவான். சிலகால் பெரிய மருந்துகள் கையில் இல்லாத நேரத்திற்கூட நல்ல நோய் தணிக்கும் கசாயத் தின் துணைகொண்டு நோயை மாற்றி நோயைக் குணம் காணலாம்.

பேய், பைத்தியம் போன்ற குணங்களால் அவஸ்தைப் படும் நோயாளரை, மதி நுட்பத்தால் குறைபாட்டைக் கண்டு செயற்பட்டால் வெகு இலகுவில் நிலையை மாற்றி வெற்றி காணலாம். சில நோயாளருடன் வைத்தியரின் அணுகுமுறைகளினாலேயே குறைபாடுகளைக் கண்டறிந்து மிக இலகுவாக குணத்தை ஏற்படுத்தி விடலாம். சில நோயாளர் வைத்தியர் காட்டும் பரிவுக்கும், பாசத்துக்கும் கட்டுண்டு குறிப்பிட்டவரை நாடிச் செல்வதையும் நாம் காண்கின்றோம். இத்தகைய நிலைக்குக் காரணம் வைத்திய ரின் மதிநுட்பமே. வைத்தியர் மதிநுட்பத்துடன் செயற்

பட்டாலும் நோயாளியும் அவரைப் பராமரிப்பவர்களும் மதியுள்ளவர்களாகச் செயற்படாவிட்டால் பலன் ஏற்படாது.

நோயாளி மருந்து சாப்பிடும் வேளைகளில் பத்திய முறிப்பாக நடந்தால் மருந்து தொழிற்படாது, அவ்வாறே நோயாளியைப் பராமரிப்போர் மருந்துக்கும், நோய்க்கும் தகுந்த உணவுகளையே கொடுக்க வேண்டும். அதுவின்றி நோயாளியின் நிலைக்கேற்ப நடந்து கொள்ளவும் வேண்டியது மிக அவசியம்.

### எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால்<br>இளைப்பும் களைப்பும் கூடும்

மனித சுபாவத்தை அப்பட்டமாக வெளிக் கொண்டு வருகின்றது இந்தப் பழமொழி. நோயாளியே நோயின் தாக்கத்தை அனுபவிப்பவன். அந்த நேரத்தில் குடும்பநிலை, ஆள் வசதி பணவசதியுடையவருக்கு நோய் கண்டால் சிறிய தடிமன்காய்ச்சல் பெரியதோர் சன்னிவாத சுரமாகப் பரிமளிக்கும். எடுப்பாரும் பிடிப்பாரும் பலர். பலரின் சேவையைக் காணும் பொழுது நோயாளியும் பெரியளவில் இளைப்பும் களைப்பும் கூடியவராகத் தன்னைக் காட்டிக் கொள்ளுவான். ஆனால் மிக வசதி குறைந்த ஒருவன் மரண அவஸ்தையைக் கூடக் கேட்பார் மேய்ப்பாரின்றி அனுபவிக்கின்றான். இந்த நிலை இன்னும் எமது சமுதாய அமைப்பில் காணக்கூடியதாகவே இருக்கின்றது.

### அரைப்பான் அரைத்தால்<br>அடுப்புச் சாம்பலும் மருந்தாகும்

அடுப்புச் சாம்பல் விலையற்ற தேடுவாரற்ற பொருள். அத்தகைய விலையற்ற அல்லது விலை குறைந்த பொருள் பெரிய புள்ளியின் கையில் இருக்கும் பொழுது அதன் மதிப்பும் விலையும் கூடியே காணப்படும். அவ்வாறே பெயரான பரிகாரி எந்த விலை குறைந்த மருந்தையும் அரைத்து நோயாளிக்குக் கொடுத்தால் அது விலை மதிப்பற்ற மருந்தாகவே

கணிக்கப்படும். காரணம் பழமொழியாளரே உறுதியாக வலியுறுத்தி ''அரைப்பார் அரைத்தால் அடுப்புச்சாம்பலும் மருந்தாகும்'' எனக் கூறிவைத்துள்ளார். சமுதாயத்தில் இல்லாதவன் இல்லாதவன் தான்; உள்ளவன் என்றும் எங்கும் உயர்த்தப்படுவான் என்பது புலனுகின்றது. வலிமையுள்ளவன் எதையும் சாதித்து வெற்றி காண்பான் என்பதையும் நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. இந்தப் பழமொழி வாயிலாக பழமொழி பழையது மட்டுமல்ல, புதுயுக மனித நடமாட்டத்தையும் நன்கு பிரதிபலிக்கின்றது.

### கழுதைப் புண்ணுக்கு புழுதி மருந்து

உயிரினங்களை நோய் பிடிப்பது உண்மை. மனிதனுக்கு வசதிக்கேற்ப வைத்தியமும் பராமரிப்பும் நடைபெறும். ஆனுல் இந்த மனிதன் பேணிக் காக்கும் மிருகங்களுக்கும் நோய் கண்ட நேரத்தில் சிலகால் வைத்தியம் நடைபெறும். ஆனுல் இழி நிலையில் உள்ள மிருகங்களுக்கும், வசதி குறைந்த மனிதர்களுக்கும் ஏற்ற வைத்தியம் நடைபெறுவதில்லை. அத்தகைய உயிர்களுக்கு இயற்கையே உதவுகின்றது. இத்தகைய நிலையையே இந்தப் பழமொழி வாயிலாக உணர வைத்திருக்கின்ருர்கள். கட்டாந் தரையில் படுத்துறங்குபவன் நல்ல சுகவாசியாகக் காணப்பட, பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கி, பாலும் பழமும் உண்டு வாழும் கோடி சீமான் நித்திய நோயாளியாகக் கண்ணீரும் கம்பலையும் நிறைந்தவனுக வாழுகின்ருன். நோய் அதிகமாக நொய்த உடலையே தனக்கிருப்பிடமாகக் கொள்கின்றது. கழுதை போன்ற திடமான உடலுக்கு மருந்தே தேவைப்படாது என்பதும் புலனுகின்றறு. இத்தகையதே மனித உடலும்.

### குறத்தி பிள்ளைப்பெற குறவன் காயம் தின்ருனும்

இதிலிருந்து நாம் சிந்திக்க வேண்டியவை பல உள. குறப்பெண்ணே கர்ப்பத்தை பத்துமாதம் சுமந்து சிசுவைப் பெற்றெடுக்கின்ருள். அதனுல் உண்டான உடல் வேதனையை முற்று முழுதாக அவளே அனுபவிக்கின்ருள். சிசு

வைப் பாலூட்டிப் பராமரிக்க வேண்டியவளும் அந்தப் பெண்ணே. வயிற்றுப் புண்ணும் அவளுக்கே உண்டு. குறவன் சிசுவுக்குத் தந்தையென்ற ஒரு இடத்தையே பெற்றிருக்கின்றான். அப்படிப்பட்ட ஆண்மகன் காயம் தின்ன வேண்டிய அத்தியாவசியம் என்ன? பாடுபடுபவன் ஒருவன்; அதை அனுபவிப்பவன் இன்னொருவன் என்று நோக்குவதா? அன்றேல் சிசுவைப் பெற்றெடுத்த குறத்தியை மற்றைய பெண்கள் காயத்தில் ஏதாவது கலந்து கொலை செய்து விடுவார்கள் என்ற பயமா? விந்து விட்டவன் நொந்திருப்பான் என்ற எண்ணமோ? சரிவரத் தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. சிலகால் மூதாதைக் குறமக்களின் பாரம்பரியமான செயற்பாடோ என்றும் நினைக்கவேண்டியிருக்கின்றது. திரிகோஷங்களுக்கும் பாவிக்கக்கூடிய மருந்துச் சரக்கில் ஒன்று சுக்கு. இஞ்சியை அவித்துப் பதப்படுத்தியே சுக்கு எடுக்கப்படுகின்றது. திரிபலையிலும் தசமூலத்திலும் ஒன்றாக இடம்பெறுவது சுக்கு. சுக்கு கைகண்ட மருந்தாகும். இவற்றை உணர்த்த விரும்பிய பண்டைய மக்கள் சுக்கின் பெருமையை "சுக்கில்லாக் கசாயமில்லை" என்ற வாக்கியத்தின் மூலம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

நோயையும், மருந்தையும், வைத்தியனையும் பற்றிக் கூறியவர்கள் சுகம் பேணினால் நோய்கள் அணுகாது என்பதையும் கூறாமல் விடவில்லை. மனிதர்கள் சுகத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் சுகமாக வாழலாம் என்பதை மிகத்தெளிவாக சுகாதாரப் பழமொழிகள் மூலம் கூறிவைத்துள்ளனர்.

சுத்தம் சோறிடும்

உட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று

கந்தையானாலும் கசக்கிக் கட்டு

கூழானாலும் குளித்துக்குடி

என்பன அவற்றில் சிலவாகும். பண்டைய மக்களில் சுகத்தைப் பேணும் வாழ்க்கை முறை சமய வாழ்வுடனேயே பின்னிப் பிணைக்கப்பட்டதாகவே இருந்திருக்கின்றது. மரண வீட்டுக்குச் சென்றவர் குளித்து ஆடை மாற்றி வீட்டினுள் செல்லவேண்டும். கிருமி நாசினிக்குப் பதிலாக சாணம் நடைமுறையில் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

தீட்டுக் காத்தல், துடக்குப் பேணுதல் என்பன சுகவாழ்வுக்கான விதிமுறைகளேயாகும். சிலர் வெளியில் வெள்ளையாகவும் உள்ளே அழுக்காகவும் வீடு உடை என்பவற்றை வைத்திருப்பர். அதனையே சுட்டிப்பாக உட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று என்று குறிப்பிட்டுச் சொல்லி இருக்கின்றனர். சுவர் இருந்தாற்றான் சித்திரம் எழுதலாம். நோயற்ற உடலுடன் இருந்தால் மிக மன மகிழ்ச்சியுடன் வாழலாம். நோயாளி எதிலும் இன்பம் காணமுடியாது. சுகமான வாழ்வு இல்லாதிருந்தால் பணமிருந்தென்ன? படித்தென்ன? பட்டம் பெற்றென்ன? எனவேதான் சுத்தம் சோறிடும் என்று கூறி வைத்திருக்கின்றனர். சுத்தம் சுகம் தரும், சோறு தரும், நிறைந்த வாழ்வு தரும்.

6

# கையிலே உண்டானால் காத்திருப்போர் ஆயிரம்பேர்

எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம். மூளை, மூக்கு, கண், காது, வாய் ஆகிய அவயவங்கள் தலையில் இடம் பெற்றிருக்கின்றன. சிந்தனையில் எழுந்த கருவைக் கண் காண, வாய் ஏவ, கால் நடக்க, கை செய்யும் திறன் கொண்டது. கையிரண்டிலும் உள்ள பத்து விரல்களும் கையின் செயற் திறனுக்கு உற்ற துணை புரியும் சேவகர்களாக இருந்து வருகின்றன. எனவே தலையையும், உடலையும் பேணிக்காக்க கை இன்றியமையாத அங்கமாகிறது. கரம் ஊனமுடையவன் தன் உடலைக்கூடத் தானே செம்மையாகப் பேணமுடியாதவனாகின்றான் அதனால் பிறர் உதவியைப்பெற்றே தன்னை இந்தவுலகில் வாழ வைக்க வேண்டியவனாகின்றான்.

தலை அற்ற உடல், முண்டம். அதற்கு வாழ்வு இல்லை. ஆனால் கரம் இழந்த பின் உயிர் உடலிலிருந்தால் உயிருள்ள மரமாகவே மனிதன் தன் வாழ்நாளைக் கழிக்க வேண்டியிக்கும். மரம் காற்றடிக்கும் திசைக்கெல்லாம் அசைந்தாடும். அதேபோன்று கரமற்ற மனிதனும் சதா உதவிக்குக் காத்திருக்க வேண்டிவரும். உதவியாளனின் தயவை இழந்தால் வாழ்வதிலும் சாவது மேல் என்ற எண்ணம் உதயமாகும். மனிதன் தன் சுய விருப்பப்படி

உண்டு, உடுத்து வாழக் கரம் இன்றியமையாத ஓர் அவயவமாகும்.

இதனுற்ருன் தமிழ் மொழியில் கையை முதலாகக் கொண்டு எண்ணற்ற பதங்கள், சொற்ருெடர்கள், பழமொழிகள் ஆக்கம் பெற்றிருக்கின்றன போலும். கையை ஊன்றித்தான் கரணம் போடவேண்டும். கையில்லாதவன் கரணம் போடவும், கால் இல்லாதவன் ஓடவும் முடியுமா? இந்த இரண்டு பழமொழிகளும் கூறுவது என்ன?

கையில்லாதவன் கரணம் அடிக்க முடியாது. காலில்லாதவன் ஓட முடியாது என்பது உண்மை. ஆனுல். காலிருந்தும் கையில்லாவிட்டால் வேகமாக ஓடமுடியாது. வேகமாக ஓடவும், நீரில் நீந்தவும் காலும் கையும் இணைந்து செயற்பட்டாலன்றி வெற்றி காண முடியாது. இருந்தாலும் கால் முடமான ஒருவன் இருந்த இடத்தில் இருந்தவாறே தன்னையும் பேணி இயன்ற அளவுக்கு மனித சமூகத்துக்கும் உதவுவான். ஆனுல் கையில்லாதவாறு கால் மட்டுமிருந்தால் பிறர் உதவி கொண்டே எதையும் செய்யவேண்டியிருக்கும்.

கையிலே உண்டானுல்
காத்திருப்போர் ஆயிரம் பேர்

இல்லானை இல்லாளும் வேண்டாள். கையில் இருப்பவனுக்கு தனிமதிப்புண்டு. பூவை நாடி வண்டுகள் செல்வதுபோல உள்ளவனை நாடிப் பலரும் செல்வர். போற்றிப் புகழ்வார்கள். ஆனுல் இன்று வசதியுடன் இருப்பவன் நேற்று இல்லாது இருந்த நேரத்தில் சுக நலம் விசாரியாதவர்கள் கூட வலிந்து சென்று, ஏவாமலே அவனது பணிவிடைகளைச் செய்து நிற்பர். திரண்டு நிற்கும் ஆயிரத்தில் சிலர் அவனிடமிருந்து சுரண்டிக் கொண்டு போகவும் முனைவர். கை கூடாத நேரத்தில் இனபந்துக்களிடையே பகைமையை ஏற்படுத்தி வைப்பர். சிலகால் உனக்கா எனக்கா உரிமை உண்டு என்ற வாக்கு வாதத்தில் இறங்கியும் விடுவர்.

ஆயிரத்தில் ஒருவன் தந்திரசாலியாக விருந்தால் கையில் உள்ளவனைத் தன் வசப்படுத்தித் தொளாயிரத்தித் தொண்ணூற்று ஒன்பது பேரையும் ஏமாற்றி விடுவான். அதிக அளவில் வாரிசுகள் இல்லாது கையிலே உள்ளவனுக் குத்தான் இத்தகைய இடர்ப்பாடுகள் தோன்றி உபத்திரவப் படுத்தும். ஒரு சிலர் காத்திருப்பவர்களின் தொல்லைகளைத் தாங்க முடியாத நிலைமையில் தமது சொத்துக்களைத் தரு மமாகப் பொது ஸ்தாபனங்களுக்குக் கொடுத்து வீண் பழி களில் இருந்து விலகிக் கொள்வதுமுண்டு.

## கை காய்த்தால் கமுகு காய்க்கும்

கமுகு பாக்கு மரம். கமுகு காய்க்கக் கை காய்க்க வேண் டும் எனப் பழமொழியாளர் கூறுவதை நோக்கினல் பாடு பட்டாற்றான் பலன் கிடைக்குமென்பதைச் சமுதாயத்துக்கு எடுத்துக் கூறி வைத்துள்ளமை நன்கு புலனுகின்றது. பாக் கொன்றை நிலத்தில் நட்டுவிட்டால் போதாது. நிலத்தை வெட்டிக் கொத்தி, பசளையிட்டு நீர்ப்பாய்ச்சி கமுகைப் பராமரித்து வந்தாற்றான் அதுவும் வளர்ந்து பூத்துக் காய்க் கும். அதனுல் வருமானம் கிடைக்கும். சதா பாடுபடுவ தனுல் கையில் உள்ள மெதுமெதுப்புப் போய்க் கைத்தசை நார்கள் உறுதி பெறும். இவ்வாறு கைகளினுல் தானே பாடுபட்டு கடினமான வேலை செய்யும் ஒவ்வொரு தொழி லாளியினது கரமும் காய்க்கும். அதாவது கடினம் ஏறி வலுப்பெறும். அதுவே அவன் பாடுபட்டுத் தன்பசியை ஆற்றுகின்றான் என்பதற்குரிய ஓர் அடையாளச் சின்ன முமாகின்றது. அதை விடுத்து வேலை செய்தால் உடல் நோகுமென்று இருப்போருக்கு இளமையிலேயே முதுமை வந்து சேரும். வறுமை, மிடிமை என்றும் அவர்களை விட்டு அகலாது என்பது நாம் காணும் உண்மையாகும்.

## கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை

வாய்க்கு வேண்டிய பண்டங்களைக் கை எடுத்து ஊட்டுகிறது. ஆனுல் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதில் இருந்து நாம் புரிந்து கொள்ளக் கூடியது, கிடைத்தது

இடைநடுவில் கையிலிருந்து நழுவி விட்டது. எனவேதான் அது வாய்க்குக் கிடைக்கவில்லை. சிறுபாலன் ஒருவன் தான் விரும்பிய பண்டமொன்றை மிக ஆவலோடு கையில் எடுத்து உண்ண ஆயத்தமாகின்ருன். அந்த வேளையில் அதைக் கண்ணுற்ற காகமொன்று அதைத் திருட்டுத் தனமாக அபகரித்து விடுகிறது. பாலன் அங்கலாய்க்கின் ருன். கையில் கிடைத்தும் உண்ணும் வாய்ப்புக் கிடைக்க வில்லை. இந்த நிகழ்வு ஒரு சிறிய சாதாரண விடயம். ஆனல் மனித சமுதாய வாழ்வில் எத்தனையோ பாரிய கருமங்கள், பொருட்கள் கைக்கெட்டியபின் வாய்க்கு எட் டாதவாறு சீர்குலைந்து விடுகின்றன,

பெண் ஒருத்தி கருவுற்று வயிற்றில் பத்து மாதம் சுமந்து வேதனை அனுபவித்துச் சிசு ஒன்றைப் பெற்றெடுக் கின்ருள். சிசு பிறந்த மறு நாளே இறந்து விடுகிறது. கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலை.

வாலிபன் ஒருவன் பிறதேசத்திலிருந்து பல வருடங்க ளாகப் பாடுபட்டுச் சம்பாதித்துக் கொண்டு தாயகம் திரும்பு கிருன் என்ற செய்தியை அறிந்த வீட்டார் அகமகிழ் வுடன் மகனை வரவேற்கக் காத்திருக்கின்றனர். ஆனல் மகன் புறப்பட்ட விமானம் விபத்துக்குள்ளாகி, அவன் இறந்துவிட்டதாகச் செய்தி ஒன்று அவனது நண்பர்களிட மிருந்து கிடைக்கிறது. எப்படியிருக்கும் பெற்ருேரின் உள்ளம்? கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை. இப்படி யான பல நிகழ்வுகள் அன்ருடம் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன.

கையிலே காசு வாயிலே தோசை

சில ஏழைப் பெண்கள் தங்களது அன்ருட வாழ்க்கையை ஓட்டுவதற்காகத் தோசை சுட்டு விற்று வருவதைக் காண்கின்ருேம். அத்தகையவர்களிடம் கூடச் சிலர் தமது வாய்ச்சாதுரியத்தினல் தோசையைக் கடனுக வாங்கி உண்டு விட்டு நகர்ந்து விடுவர். எனவே அத்தகையவரிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகச் சாதுரியமான முறையில்

காசை வாங்கிக்கொண்டு தோசையைக் கொடுக்க இந்தப் பழமொழியை நடைமுறைப் படுத்தி, வந்திருக்கின்றனர் போலும்!

கடைகளில் கூடச் சிலர் கடன் வாங்கிக் கொண்டு திருப்பிக் கொடுக்க முடியாதவிடத்தில் மெல்லக் கடையை விட்டு வேறுகடையொன்றிற்கு மாறிவிடுவதுமுண்டு. அத் தகையவர்களிடமிருந்து தம்மைத் தாம் முன் கூட்டியே பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவதற்காய்ச் சில கடைக் காரர் "இன்று கடன் இல்லை" "நீங்கள் நாணயமானவர்கள், ஆனல் நாம் கடன் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை" என்ற பொருளில் பல வாக்கியங்களை எழுதி அட்டைகளைத் தொங்கவிட்டு வைத்திருப்பர். கடன் கொடுக்காவிட்டால் ஒரு கோபம், கடன் கொடுத்துக் கேட்டால் ,பல கோபம். இத்தகைய மனிதர்களையும், மற்றும் நிதானமான வாடிக் கையாளர்களையும் இனம் கண்டு வியாபாரிகள் தாம் தப் பிக்கொள்ள கையாளும் தந்திரம்தான் இது.

வியாபாரம் செய்வது கூடவொரு கலை. இந்தக் கலை யின் உதவியால் மனிதர்களை நன்கு அறிந்து கொண்ட, வியாபாரிகள் மிகச் சாதுரியமாக வெற்றி கண்டு தமது தொழிலைத் தொடர்ந்து நடாத்துவர்.

# 7

# இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

**ப**ழமொழிகள் வெளிப்படையாக ஒரு கருத்தைத் தந்தாலும் ஆழ்ந்து சிந்திப்பவர்கட்கு மிக விரிவாக மனித சமூதாயத்தைச் சாடி நிற்கும் பரந்த கருத்துக்களைக் கொண்டிருப்பதை உற்று உணரக்கூடியதாகவிருக்கின்றது.

**உழுகிற மாடென்றால் உள்ளூரிலே உழாதா?**

**உழுகிற மாடென்றால் உள்ளூரிலே விலைப்படாதா?**

இந்த இரண்டு பழமொழிகளும் ஒரே மாதிரியாக அமைப்புப்பெற்று முடிவில் மாத்திரம் உழாதா? விலைப்படாதா? என்ற முடிவுகளைக் கொண்டிருக்கின்றன.

உழவு, செயல், விலை, செயற்திறன், உடற்தோற்றம், குணம், வயது, நிறம் என்பனவற்றைக் கொண்டு மதிப்பிடப்படுவது.

உழுகிறமாடு வேலை செய்யும் திறன் உடையதாகவிருந்தால் உள்ளூரிலேயே போதிய அளவு வேலை கிடைக்கும். அவ்வாறே உழக்கூடிய திறன் படைத்த அங்கலட்சணம் உடைய மாடு ஒன்று விலைப்படவிருந்தால், உள்ளூரிலேயே நல்ல விலைகொடுத்து வாங்கப் பலர் போட்டி போட்டு முன் வருவர், அல்லாத மாட்டுக்கு அதன் திறமை அறியாத அயலூரிலேயே வேலை கொள்ளவோ, விலைப்படுத்

தவோ வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படும்.

இந்த நிலைமை மாட்டுக்கு மட்டுமல்ல, உயிருள்ள வீட்டு மிருகங்களுக்கும், கல்யாணச் சந்தையில் விலை கூறப்படுகின்ற வாலிபர்களுக்கும், கன்னிப் பெண்களுக்கும் மிகப் பொருத்தமுடையதாகும்.

பெண் ஒருத்தி கல்யாண வயது அடைந்ததும் அவளின் குண நடை தெரிந்தவர்கள் எந்த வித ஆஸ்திபாஸ்திகளையும் எதிர்பாராமல், அவளைத் தம் வீட்டு மணப் பெண்ணுக்க முன் வருவர். அவ்வாறே சில வாலிபர்களின் இல்லறப் பிணைப்புக்களும் நிறைவேறுகின்றன. ஆனால் சிலர் தமது ஆண் மக்களின் திருமணங்களின் மூலமே தமது குடும்ப பாரங்களையெல்லாம் குறைக்க எண்ணி, நடையாய் நடந்து கனங்கொண்ட மணப் பெண்களைத் தேடி எடுக்கின்றனர். இத்தகையவர்களைப் பார்த்துக் கிராமமக்கள் உழுகிற மாடென்றால் உள்ளூரிலே விலைப்படாதா என்று கிண்டலாகக் கதை அளப்பர்.

கல்யாணம் ஆயிரம் காலப் பயிர்

அதை அவரவர் நிச்சயித்துக் கொள்வதில் தப்புண்டென நான் கருதவில்லை. "மணப் பொருத்தம் இருந்தால் மற்றப் பொருத்தம் வேண்டுமா?" என்ற பழமொழியை மட்டும் எடுத்து நோக்குவது சாலப் பொருத்தமாகும்.

இலங்கை வாழ் தமிழர் அநேகர் உள்ளூரை விட்டு அயலூருக்குப் பறந்து கொண்டிருக்கும் காலமிது. ஏன் பறக்கின்றார்கள்? உள்ளூரில் உள்ள இக்கட்டான கால கட்டத்திலிருந்து தம்மையும், தமது சொத்துக்களையும் பாதுகாத்துக்கொள்ள, உயர்கல்வி பெற, தொழில் வாய்ப்புப் பெற எம் தமிழ் இனத்துக்குள்ள இக்கட்டுகளை நீக்கி ஆக்க பூர்வமான, நிரந்தரமான சுதந்திர வெற்றி பெறத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள எனப் பல திறப்பட்டவர்கள் அயலூர் செல்லுகின்றனர்.

உள்ளூரிலே ஓணன் பிடிக்காதவன்
அயலூரிலே உடும்பு பிடிப்பானு?

என்ற பழமொழியுடன் நான்கு வகுப்பினரையும் ஒப்பிட்டு நோக்கினுல் அவரவர் தகுதியைக் காணமுடியும். சுதந்திரத்துக்காகத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ளுபவர்கள், உள்ளூரிலும், அயலூரிலும் மதிப்புக்குரியவர்கள், தியாகிகள், இனமீட்பை இலட்சியமாகக் கொண்டவர்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. எனவே அவர்கள் எம்மையும் தம்மையும் பாதுகாக்க அயலூர் சென்று வரவேண்டியது மிக அத்தியாவசியமான செயலாகும்,

உயர்கல்வி பெறச் செல்பவர்கள் இந்நாட்டில் உள்ள இனவொதுக்கல் கொள்கையால் தமது உயர் கல்வியைப் பெற வசதியற்று அயலூர் சென்று கல்வி கற்பவர்கள். அத்தகையவர்கள் கற்றபின் தாம் பிறந்த நாட்டை மறவாது இங்கு வந்து வாழ்வமைத்தால் வரவேற்கப்பட வேண்டியவர்களே.

தொழில் வாய்ப்புக்காக அயலூர் பறப்பவர்களிற் சிலர் உள்ளூரிலேயே தொழில் செய்து அதிக வருமானம் பெற்று வந்தவர்கள். ஆனுல் சிலர் உண்மையாகவே தொழில் வாய்ப்பற்று இருந்தவர்கள்; பலர் வரட்டுக் கௌரவத்தால் உடல் வருந்தி ஊதியம்தேட மனமற்ற சோம்பேறிகள் என்பல திறப்படுவர். இத்தகையவர்கள்தான் இன்று தம் கையில் இருந்தனவற்றை விற்றுச் சுட்டு பற்ருக்குறைக்குக் கடன்காரர்களுமாகி அயலூரிலே வேலைதேடிச் சென்றிருக்கின்றனர். இவர்கள் அத்தனைபேரும் உள்ளூர் திரும்பி வரும் பொழுது பண வசதி படைத்தவர்களாக வருகின்ருர்களா? என்பதுதான் கேள்வி.

வசதியுடன் சென்றவர்கள் மேலும் வசதிபடைத்தவர்களாகின்றனர். உள்ளதை விற்றுச் சுட்டவர்களும் கடன்காரர்களாகச் சென்றவர்களில் சிலரும் ஓரளவு நிம்மதியடைகின்றனர். ஆனுல் சிலர் கைப்பொருள்களையும்

இழந்து, போலி முகவர்களிடம் அகப்பட்டுத் திக்கற்றவர்களாகி நிர்க்கதிக்காளாகின்றனர். இத்தகைய நிலைமைக்கிலக்காகிய பல குடும்பங்கள் நம் மத்தியில் பரிதவிப்பதை நாம் கண்ணுரைக் காண்கின்றோம். இத்தகையவர்கட்கு ஏமாந்தவன் ஏமாந்து கெட்டான்; ஏமாற்றியவன் இடிவிழுந்து கெட்டான் என்ற பழமொழிகளைத்தான் இங்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கின்றது.

பெரிய மட்டத்தில் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள அயலூர் செல்பவர்களைப்பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை.

ஆல் பழுத்தால் அங்கே, அரசு பழுத்தால் இங்கே என்ற பழமொழிதான் வௌவால் போன்ற இவர்கட்குப் பதில் பகரும்.

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

மாடு புல் நிலத்தைக் கண்டவுடன் தன் பசி அடங்கும்வரை மேய்கிறது. பின் ஆறுதலாகக் கிடந்து இரைமீட்டு உணவை யரைத்து ஜீரணத்துக்கு ஏற்றதாக்கிக் கொள்ளுகின்றது. இப்படியான மாடு தான் மேய்ந்து நிற்கும் பொழுது தூரத்தில் உள்ள அடிக்கட்டைப் புல்லின் பச்சை கண்டு, ஓடிச் சென்று ஏமாற்றமடைகிறது. பசியால் முன் மேய்ந்த புல் நிலத்தைத் தேடி வரவேண்டிய நிலைமைக்கு ஆளாகின்றது. இந்த மாட்டைப் போன்றுதான் சொந்த மண்ணை விட்டு அயலூர்தான் தஞ்சமென எண்ணிச் செல்பவர்கள். இவர்கள் என்றோ ஒரு நாள் உள்ளூர்ச் சொந்த மண்ணை நாடி ஓடி வரவேண்டிய நிலைமைக்கு ஆளாவார்கள் என்பது திண்ணம்.

# 8

# இந்தப் பூனையும் பால் குடிக்குமா?

பூனை புலி போன்ற தோற்றமுடைய சிறிய பிராணி. இது காட்டிலும் வீட்டிலும் வாழும். சிலர் இன்று பூனையை செல்லப் பிராணியாக வளர்க்கிறார்கள். எப்படிச் செல்லமாக வளர்த்தாலும் மற்றைய சிறு பிராணிகளையும் பட்சிகளையும் பிடித்துண்ணும் இயல்பான குணத்திலிருந்து அதனை மாற்றியெடுக்க முடியாது.

திருடி உண்பது இதனுடைய இயல்பான சுபாவமாகும். அதிக அளவில் எலிகளின் உபத்திரவத்தை நீக்குவதற்காகப் பூனையைப் பலர் வீடுகளில் வளர்க்கிறார்கள். ஆனால் பண்டைய மக்கள் பூனையை விரும்பி வளர்த்ததாகத் தெரியவில்லை. பூனையின் மீசை, கண், கால்களில் உள்ள பஞ்சு மெத்தை போன்ற பாதங்கள் மற்றைய மிருகங்களை விடத் தனித்துவமானவை. மோப்பம் பிடிப்பதில் நிகரற்ற மிருகம். குழி பறித்து மலத்தைக் கழித்து மூடி மறைக்கும் விசேட இயல்புடையது. தன் கால்களில் எச்சிலைத் தடவி தன்னுடைய முகத்தைச் சுத்தி செய்து கொள்ளும் பூனை தன்னிடமுள்ள திருட்டுத் தன்மைக் கேற்ப தனது உடல் முழுவதையும் ஒடுக்கி மறைத்து பதுங்கிப் பாய்ந்து மற்றைய உயிரினங்களைப் பிடித்து உண்ணும். இத்தகைய பூனையைக்கண்ணுற்ற பழமொழியாளர்கள் சமூக வாழ்வுடன்

இணைத்து ஒரு சில பழமொழி வாக்கியங்களைத் தந்துள்ளனர்.

## சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

எத்தித்திருடும் காகங்கூட அடுப்பில் நெருப்பெரியும் பொழுது சட்டிக்குள்ளிருப்பதை எடுக்கத் துணியாது. அடுப்பில் எரியும் நெருப்பில் இருந்து பண்டத்தை எடுத்ததுமே அதன் சூட்டை அறியாத பூனை தனது வாயிற் கௌவி சூட்டுக்கு இலக்காகின்றது. சிலகால் சாம்பலுக்குள் படுக்க மிக விருப்புக் கொண்ட தன் செயலால் தணலுக்குள் படுத்து சூடு வாங்கிக் கொள்கிறது. சில பெண்கள் சமையல் செய்யும் வேளையில் பூனையின் உபத்திரவத்தைப் பொறுக்க முடியாது கொள்ளிக் கட்டையாலேயே நல்ல சாத்துக் கொடுப்பர். இதனாலும் பூனைக்கு சூடு கிடைக்கிறது. எப்படியென்றாலும் பூனை மறுமுறை அடுப்பங்கரை நாடாது என்பதை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பகுத்தறிவுள்ள மனிதன், அதாவது முன் கூட்டியே நன்மை, தீமை இரண்டுக்கும் இடையே உள்ள பேதங்களைப் புரிந்து கொள்ளும் இயல்புடைய மனிதன், சிலகால் ஆசை வயப்பட்டுத் தீய செயல்களில் ஈடுபட்டு விடுகிறான். அதனால் வாழ்நாள் முழுவதும் தேடிக்கொண்ட நற்பெயரையும் கெடுத்துக் கைப்பொருளையும் இழந்து விடுகிறான். தான் செய்த தவறை நினைத்து மனம் நொந்து வேதனை அடைகின்றான். வறுமைப் பிணி வாட்டத் துன்பம் அனுபவித்த பின் தன்னைத்தானே 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்பதற்கேற்பத் திருத்தி நடந்து கொள்ளுகின்றான். இது மனிதப் பண்பு. இதை அடுத்துப் பின்பு திருந்தி நடவாது தாம் கொண்டதே கோலம் என நடப்பவர்களும் சிலர் இல்லாமலில்லை. "இந்தப் பூனையும் பால் குடிக்குமா?" பால் குடிக்காத ஒரு பூனையும் உண்டா? இல்லவேயில்லை! "நான் வளர்க்கும் பூனை நான் கொடுத்தாலன்றித் தட்டித் திருடிக் குடிக்கவே குடிக்காது, எனது நேசத்துக்குரிய பூனை. நேரத்துக்கு நேரம் நானே இந்தப் பூனையைப் பராமரித்து

வருகின்றேன்.'' என்று சிலர் சொல்லலாம். அது உண்மையல்ல.

மனித குலத்தில் ஒரு சில ஜென்மங்களும் பார்வைக்குப் பசுப்போன்று நடந்த இடத்துப் புல் அசையாதவர்களாகவும், நாவால் தேனெழுகவும் கதைப்பார்கள். திரை மறைவில் பலவிதமான சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு உடல் உள ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வர். இவர்களின் வெளித்தோற்றத்தில் மயங்கிய சிலர் ஆசாடபூபதிகளாகிய அந்த மனிதர்கள் மேல் அளப்பரிய விசுவாசங் கொண்டு, மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பர். குற்றேவல்களைக் கூடச் செய்து வருவர். ஆனால் காலம் வரும் பொழுது திரை மறைவுச் செயல்களில் ஒரு சிலவாவது வீதிக்கு வந்தே தீரும். அன்று தான் முகமூடி சமூகத்தினால் கிழித்தெறியப்படும். அப்பொழுது தான் விசுவாசிகள் இந்தப் "பூனையும் பால் குடிக்குமா?'' என்ற வினாவை எழுப்பி நிற்பர். "உருத்திராக்கப் பூனைகளாக'' வேடம் தரித்துச் சிலர் தமது காரியங்களைச் சாதித்து வெற்றி காண்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. "அழு கள்ளர், தொழு கள்ளர், ஆசாரக் கள்ளர்'' எனச் சிலர் வேடம் தாங்கி வினை செய்வர் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

### பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

இந்தப் பழமொழி முற்று முழுதாக சமுதாய வாழ்வையே சாடி நிற்கின்றது. எப்படியிருந்தாலும் திருட்டைக் கைவிடாத சுபாவமுடைய பூனைக்குத் தோழன். பாலுக்கும் காவல். இது எப்படிச் சாத்தியமாகும். தோழனை வெறுக்க முடியாது. எனவே இங்கே காவல் வேலையைச் சரிவரப் பார்க்க முடியாத ஒரு நிலைமை தான் ஏற்படும்.

### பூனைக்கு இல்லை தானமும் தவமும்

திருடிக் கொலைசெய்து மாமிசத்தை உண்டு உடல் வளர்க்கும் பூனைக்கு எப்படித் தயவு தாட்சண்யம் இருக்கும்?

உயிரைக் கொன்று, மாமிசத்தை உண்டு உயிர் வாழவே அது தருணம் பார்த்திருக்கும். அத்தகைய, ஈன இரக்க மற்ற மிருகசுபாவமுடைய மனிதர்கள் தானம், தவம் என்ற வார்த்தைகளைக் கனவிற்கூட நினைக்கமாட்டார்கள்.

அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி.

**கிளியின் அருமை பூனை அறியுமா?**

**கிளி அழுதால் பூனை விடுமா?**

**கிளியை வளர்த்துப் பூனை கையிற் கொடுப்பதா?**

இந்த மூன்று பழமொழிகளிலும் கிளியும், பூனையும் இடம் பெற்றிருக்கின்றன. இறுதி வார்த்தையாக அறியுமா? விடுமா? கொடுப்பதா? என வினாக்கள் எழுப்பப்பட்டிருக் கின்றன. உண்மையில் கிளியின் அருமை பெருமையைப் பூனை அறியாது. எனவே அகப்பட்டால் அதை விடாது கொன்று புசித்துவிடும். அது பூனையின் இயல்பான சுபா வம். கொடுப்பதா? பூனையின் கையிற் கொடுப்பதா? என்று கூறும் பொழுதுதான் சிந்திக்கவேண்டியிருக்கிறது. பெண்களும், சிறுவர்களும் கிளியின் அழகிலும் பேச்சிலும் வயப்பட்டு கிளிக்குஞ்சுகளைப் பிடித்து மிகச் செல்லமாக வளர்ப்பார்கள். அத்தகைய கிளியை யாராவது பூனை கையிற் கொடுப்பார்களா? இல்லவேயில்லை.

சில புலவர்களும், நாவலர்களும் பெண்களின் அழகிற் காகவும், இனிய பேச்சுக்காகவும் கிளிக்கு ஒப்பிடுவார்கள். கிளிபோன்ற பெண்களைப் பெற்று வளர்த்து பூனை போன்ற ஆண்களுக்குக் கொடுப்பதா? இதனால் அந்த அப்பாவிப் பெண்கள் சதா துன்பக் கடலில் நீந்தித் தத்தளிப்பதா? ஏன் இந்த நிலைமை எமது சமூகத்தில் ஏற்படுகின்றது? பல்வேறு காரணங்கள் இருந்தாலும் சீதனம் என்ற பேய் பல ஏழைப் பெண்களின் வாழ்வை பலி கொள்ளுகின்றது. பணம் இல்லாத காரணத்தால் பெண், பூனைகளின் பிடியி லிருந்து தன்னைத்தானே விடுவித்துக்கொண்டு வாழத்தலைப் பட்டால் அவளை இந்தச் சமுகம் வீண்பழிகளுக்கு இலக் காக்கி வைக்கின்றது.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது
பூனை இல்லாத இடத்திலே சுண்டெலிக்குக் கொண்டாட்டம்

இந்த இரண்டு பழமொழிகளும் எதிரும், புதிருமானவை. எலியின் ஜென்ம விரோதி பூனை. பூனை எலியைப் பிடித்து விடுவதும் திரும்பப் பிடிப்பதும் பொழுதுபோக்கு விளையாட்டு. ஆனால் எலியும் ஒரு ஜீவனுள்ள பிராணி. தனது விளையாட்டால் அது மரணவஸ்தைக்குள்ளாக்கப்படுவதை பூனை உணர்வதில்லை. அவ்வாறே வசதி படைத்தவர்கள் மற்றவர்கள் படும் துன்பங்களையும், துயரங்களையும் அறிவதில்லை. தம்மைப் போலவே அவர்களும் வாழுகின்றார்கள் எனக்கணக்கிட்டுக் கொள்ளுகிறார்கள். ஒரு சிலர் தமது வீட்டு வேலைக்காரர் போல் அதிக வேலை சுமத்தி அவர்களை வேதனைப்படுத்துவர். வேலைக்காரர்களும் மனிதர்தான் என நினைவில் கொள்ளவேண்டும். ஒருவன் மனம் நொந்தால் அந்தப் பழி தம்மை வந்து சூழும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

9

# சோறு அகப்பட்ட இடம் சொர்க்கம் தானே?

உயிர் வாழ உணவு அத்தியாவசியம், உணவு நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. நாம் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது நெல் அரிசிச் சோற்றை உண்ணாவிட்டால் உண்டோம் என்ற மனத்திருப்தியை அடைய மாட்டோம்.

ஐரோப்பியர் நம் நாட்டுக்கு வந்த பின் எமது உணவில் கணிசமான இடத்தைக் கோதுமை உணவு இடங்கொண்டிருக்கிறது.

பண்டைக் காலத்தில் நம்மவர்கள் சோற்றையும், பல காரங்களையுமே உண்டு வந்திருக்கின்றனர். இல்லாவிட்டால் சோற்றைப்பற்றிக் கூறி வைத்துள்ள பழமொழியாளர்கள் ஒரு சில வார்த்தையாவது கோதுமையைப்பற்றிக் கூறாமலா இருந்திருப்பார்கள்?

சோறு என்ற பதத்துக்கு அன்னம், சாதம், அமுது என்ற சொற்களும் நடைமுறையில் இருந்து வருகின்றன. வயிற்றில் பசியென்ற ஒன்று இல்லாதிருந்தால் மனிதன் முயற்சியற்ற சோம்பேறியாகவே வாழ்ந்திருப்பான். முயற்சியற்ற சிலர் பிறர் கைகளைச் சோற்றுக்காக எதிர்பார்த்திருப்பதைக் காண்கின்றோம். இத்தகையவர்களாலேயே,

சோற்றுக்குக் கேடு; பூமிக்குப் பாரம், என்ற பழமொழி தோன்றியது,

பூமிக்குப் பாரமானவன் யார்? உழைத்து வாழக் கூடியவர்கள் முயற்சியின்றிப் படு சோம்பேறிகளாக — இல்லை வெறும் சோற்று மாடுகளாக மற்றவர்களை எதிர் பார்த்து இருந்து வருகின்றார்கள். இத்தகையவர்களால் ''சோற்றுக்குக் கேடு'' ஒழிய மனித சமூகத்துக்கு எது வித பலனுமில்லை. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' ''தர்மம் தலைகாக்கும்'' ''தானங்களில் சிறந்தது அன்னதானம்'' எனப் பல வாக்கியங்கள் தமிழ் மொழியில் காணப்படுகின்றன. ஆனால் பழமொழியில் காணப்படும், பாத்திரமறிந்து பிச்சை இடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு என்ற வாக்கியத்தில் உள்ள பாத்திரம் எது என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டியது எமது முக்கிய கடமையாகும்,

பிச்சை எடுக்கத் தகுதியுடையவர்கள் அகதிகள், வயோதிபர்கள், நோயாளிகள், அங்கவீனர்கள், பாலர்கள் என் போரே ஆவர். நொய்தவர்கள் உதவிக்குரியவர்கள். சமூகத்தில் உள்ள நொய்தவர்களைக் கபட புத்தி படைத்த திடசாலிகளும், செல்வாக்கு மிக்கவர்களும் பல வழிகளில் குட்டி முந்திவிடுகிறார்கள். இதனால் தருமப் பொருட்கள் நொய்தவர்களுக்குக் கிடைப்பது மிகச் சொற்பமே. இவற்றைக் கண்காணிக்க வேண்டியது பொறுப்பதிகாரிகளினதும், தர்ம சிந்தனையுள்ள பொது நலத் தொண்டர்களினதும் தலையாய கடமையாகும். இத்தகைய நிலைமையை எமது ஆலயங்களில் உள்ள அன்ன சத்திர மடங்களிலும் பொது நல நிலையங்கள் சிலவற்றிலும் கண்ணாரக் காணலாம். இடத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றதாக நாம் நொய்தவர்களை இனங்கண்டு உதவ முன்வர வேண்டும்.

சோறு அகப்பட்ட இடம் சொர்க்கம்

பரமனை அடைந்து ஆன்மா சொர்க்கத்தில் நித்திய பேரின்ப வாழ்வைப் பெறுகிறது என்பது சமயிகளின் நம்பிக்கை. ஆனால் மண்ணுலகில் சிலருக்குச் சோறு அகப்பட்ட இடம் சொர்க்கமாக இருக்கின்றது. அப்படியானால் இத்தகைய வர்கள் எத்தகையவர்கள்? 'ஓசி' ச் சோற்றுக்கு அலைந்து திரியும்பேர்வழிகள் என்பது நன்கு தெரியவருகிறது. தமது உடலை நிமிர்த்தி அகப்பட்ட அகப்பட்ட வேலை செய்து சுயமாகப் பணம் தேடுவது வெட்கம். சிலரால் முடியாது. ஆனால் நாய் போல அலைந்து திரிந்து அழையா விருந்துகளில் நுழைந்து வயிறு நிரப்புவதில் வெட்கமில்லை. இத்தகைய வர்களுக்குச் ''சோறு அகப்பட்ட இடம்சொர்க்கம்.''

சில வருடங்களுக்கு முன் ஒருநாள், நானும் எனது பாடசாலை ஆசிரியர்களும் இறந்த எமது ஆசிரியரின் அந்தியேட்டி வீட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தோம். வீட் டுக் கிரியைகள் முடிவுற்றதும், எம்மை வீட்டார் சாப்பிட அழைத்தனர். நாங்கள் ஒரு குழுவாகச் சென்று பந்தியில் அமர்ந்து கொண்டோம். எங்களுக்கு இடையில் இனம் தெரியாத மூவர் அங்கும் இங்குமாக வந்து இடையில் அமர்ந்து கொண்டனர். நாம் அவர்களை இறந்த ஆசிரி யரின் உறவினர் என்று எண்ணினோம். வீட்டார் அவர் களை ஆசிரியர்கள் என எண்ணிக் கொண்டனர்.

எல்லோருக்கும் சோறு பரிமாறப்பட்டது. ஒரு முறை பரிமாறப்பட்ட சோற்றை நாம் உண்பதற்கிடையில், அந்த மூவரும் மூன்று முறை இலையை வெறுமையாக்கி விட்ட னர். எமக்கு இரண்டாவது தடவையாகச் சோறு வைக் கப்பட்டது. அப்பொழுது அவர்கட்கு நான்காவது முறை யாகச் சோறு படைக்கப்பட்டது.

'வாத்தியார், சோறு கறி என்ன அப்படிப் பிரமாதமோ?' என்று சோறு பரிமாறிய வாலிபன் ஒருவன் கேட்டான். நான் நிமிர்ந்து அவனைப் பார்த்தேன் அப்பொழுது அந்த வாலிபன் எங்களைப் பார்த்துச் சிறிது புன்முறுவல் செய்தான்.

"ஏன் தம்பி சிரிக்கிறாய்?" என்றேன். "சும்மா" என்று பதில் கூறியபடி அந்த வாலிபன், மூன்று சோற்று இராமன் களையும் ஒருகணம் நோட்டமிட்டான்.

நான் விடயத்தைப் புரிந்து கொண்டேன். இதற்கிடை யில் அந்த மூன்று பேர்வழிகளும் நான்காவது தடவையாக வைத்த சோற்றையும் காலியாக்கி விட்டனர். திரும்பவும் ஐந்தாவது தடவையும் அவர்கட்கு சோறு வைக்கப்பட்டது. அவர்கள் அதைச் சாப்பிடும் நேரத்தில் நாம் நமக்கு இரண் டாவது தடவையாக வைக்கப்பட்ட சோற்றில் ஒரு பகு தியை மட்டும் சாப்பிட்டுவிட்டு வடை, பாயசம், பழம் என்பவற்றையும் உண்டு எமது சாப்பாட்டைப் பூர்த்தி யாக்கினோம், அவர்களும் இலைகளில் இருந்தவற்றையெல் லாம் உட்செலுத்தி விட்டுக் கைகளை அலம்ப எம் பின்னாலே எழுந்து வந்தனர்.

உண்ட களை தொண்டருக்கும் உண்டு

என்ற மொழிக்கேற்பக் கைகளை அலம்பிய பின் நாம் முற் றத்தில் கிடந்த நாற்காலிகளில் அமர்ந்தோம். அப்பொ ழுது அந்த மூவரும் உண்ட களையின்றி வீதியால் நடந்து கொண்டிருப்பதைக் கவனித்தோம்.

இத்தகையவர்கள் பலர் இன்னும் எமது சமுதாயத் தில் வாழுகின்றார்கள். இவர்கள் மூவரும் அழையா விருந் தினர்கள். "சோறு அகப்பட்ட இடத்தில் சொர்க்கம்" காண்பவர்கள் என அங்கு இருந்தோர் கதைப்பதைக் கேட்டோம்.

"சோற்றுக்குத் தாளம் போடுகிறான்." நாய் எச்சிலி லையைக் கண்டதும் வாலையாட்டிக் கொண்டு பின் தொடர் வது. அதைப்போன்று சில சுய கௌரவமற்ற சோம்பேறி மனிதர்கள் ஒரு நேரச் சோறு கிடைத்தால் போதுமென்று சிலர் பின்னால் அட்டைபோல ஒடித்திரிவர்.

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

## சோறு சிந்தினால் பொறுக்கலாம், மானம் சிந்தினால் பொறுக்கலாமா?

சோறு, பருப்பொருள். மானம் நுண்பொருள், பருப்பொருளைத்தேடி எடுத்து, தொட்டு உணர்வுகளைப் பெறமுடியும். நுண்மையானவற்றை உற்று உணர்ந்து செயற்பாடுகள் மூலம் நிதானித்து, ஒருவன் மற்றையவன்மேல் ஒரு முடிவை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

சமூகத்தில் வாழும் நல்ல மக்களால் சீரணிக்கமுடியாத தீய செயல்களைச் செய்பவர்கள், மானத்தைச் சிந்தியவர்களாகக் கணிக்கப்படுவார்கள்.

அன்று ஒருநாள் பிரான்ஸ் நாட்டு மன்னன் பதினான்காம் லூயியின் மனைவி "பசி" என்று கூறிய நாட்டு மக்களைப் பார்த்து "உங்களுக்கு உண்ணப் பாண் கிடைக்காவிட்டால் கேக் வாங்கிச் சாப்பிடுங்கள்" என்று மக்களின் வறுமையைத் தெரிந்து கொள்ள முடியாது சிந்தனையின்றிக் கூறினாள். பசியால் வாடிய மக்கள் அவளின் வார்த்தையால் ஆத்திரங் கொண்டெழுந்து நாட்டையே சுடுகாடாக்கினர். மன்னனையும், மனைவியையும் அவர்கள் ஆக்கி வைத்திருந்த வாளுக்கே இரையாக்கினர்.

### அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்

சோறுகுறைந்தால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளும் தமது செயற்பாடுகளிலிருந்து நாளுக்கு நாள் குறைவடையும். அதனால் சரீரம் தளர்வு அடைந்து, சோர்வு ஏற்பட்டு மனித யந்திரம் செயலிழந்து மரணத்தை எட்டிப் பிடிக்கும். எமது சமூகத்தில், சிலர் போதிய வருவாயின்மையால் இந்த நிலைமைக்கு இலக்காகின்றனர். வேறுசிலர் நோய்கள் காரணமாகச் சோற்றை உண்ண முடியாத நிலைமைக்கு ஆளாகிக் காலனைக் கட்டித் தழுவிக் கொள்ளுகின்றனர்.

என்ன இருந்தாலும் மனிதன் சோற்றுக்காக வாழாது வாழ்க்கைக்காகச் சோறு என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டாற்றான் ஒரு செம்மையான சமுதாய அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். ●

10

# பந்திக்கு முந்து; படைக்கப் பிந்து!

விருந்துபசாரமொன்றில் சைவாகாரம் பரிமாறப்படுகிறது. பருப்புக்கறி, சாதத்தின் மத்தியில் ஊற்றப்பட்டுவிட்டது. அதைத் தொடர்ந்து பெண் ஒருத்தி நெய்க்கிண்ணத்தையும், சிறு கரண்டியொன்றையும் கொண்டு பந்தியை நோக்கி வருகின்ருள். அங்கு அமர்ந்திருப்பவர்களில் ஒருவன் வந்துகொண்டிருந்த பெண்ணை மெல்ல நிமிர்ந்து பார்த்து நோட்டமிடுகிருன். நெய் கொண்டு வருபவள் தனது மனைவிதான் என்பதைக் கவனித்துவிட்டான். ஆஹா...! ஊரார் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்ற பழமொழி வாக்கியம் அவனது மனதில் ஞாபகம் வருகிறது. ''ஆஹா! சைவச்சாப்பாடு சிறக்க நெய். அதுவும் என் பெண்டாட்டி கையில் இருக்கிறது. ஒரு சிறு துளிக்குப் பதில் தாராளமாகக் கிடைக்கும்'' என்பதை எதிர்நோக்கி அங்கலாய்க்கின்ருன். இப்படி ஊரார் வீட்டுச் சொத்தில் ஒரு நேரம் இன்பங்காணத் துடிப்பவன் எத்தகைய குணபாவமுடையவனுகவிருப்பான் என்பதை நான் எடுத்துத் தெளிவு படுத்திக் கூற வேண்டியதில்லை.

தனது சொந்தப் பணத்தில் நல்ல உணவைச் சமைத்துண்ண வகையிருந்தும் சிலர் மிகச் சின்னத்தனமாகப் பிறர்வீட்டு விருந்தில் குடித்தனமாகப் புகுந்து, உதவிபுரி

வார்போல நடித்துத் தாமும் வயிறாரப் புசித்து அகமகிழ் வர். அதுவுமின்றிச் சட்டி பெட்டிகளில் போட்டு மிகுதி யாகத் தமது வீட்டில் இருப்போருக்கும் அனுப்பிவைப்பர். இந்த நிகழ்வு சொந்த வீட்டாருக்குத் தெரிந்தும் தெரியா மலும் இடம் பெறும். இத்தகைய சாதுரியமான கையா டல்களைச் செய்வதில் கைதேர்ந்தவர்கள் அன்றும் இருந் திருக்கிறார்கள். இன்றும் இந்த நாகரிகவுலகிலும் வாழு கின்றார்கள்.

''பந்திக்கு முந்து படைக்கப் பிந்து'' என்ற இந்தப் பழமொழியைச் சிலர் திரிபுபடுத்திப் ''பந்திக்கு முந்து. படைக்குப் பிந்து'' எனவும் நடைமுறைப்படுத்தி வருகின் றனர். எனவே பந்தியோடு தொடர்புடைய 'படைக்க' என்ற சொல்லையே ஏற்றுக் கொள்ளவேண்டியதாகின்றது.

பந்திச் சாப்பாட்டில் பல வகையான உணவுப் பதார்த் தங்கள் இடம் பெறும். அவற்றை முழுமையாக உண்டு சுவைகாணவேண்டுமேயானால் முதற்பந்தியிலே இடம்பிடித் துக் கொள்ளவேண்டும். இல்லாது விட்டால் ஒரு சில சுவை மிக்க பதார்த்தங்கள் எமது வாய்க்கு எட்டாமலே தீர்ந்து விடும். விருந்துபசாரத்தில் இத்தகைய நிலைமை ஏற்படுவது சர்வசாதாரணம். விருந்து வைப்போர் எந்த வகையிலும் விருந்தாளிகளைத் திருப்திப்படுத்தி அனுப்பவே முயற்சி எடுப்பார். விருந்தில் பங்குகொள்வோரில் ஒரு சிலர் எந்த வகையிலும் குறை கண்டு பிடிக்கும் மனப்பாங்கு உடைய வர்களாகவே இருப்பர். இத்தகையவர்கள் நேராகச் சொல் லாவிட்டாலும் தம்முள் கூடிக் கதைப்பர். இத்தகைய ஒரு தாழ்வான குறைபாடு எமது சமுதாயத்தில் சிலரிடம் உதி ரத்துடன் கலந்துள்ள இயல்பான குறைபாடென்றே கருத வேண்டியிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன் ஒருநாள் திருமண வைபவ மொன்றில் பந்தி விருந்தில் பங்குகொள்ளக்கூடிய வாய்ப்பு ஒன்று கிடைத்தது. பெரிய புள்ளிக்காரன் வீட்டுத் திரு மணம். அருமையான சாப்பாடு. இரண்டாவதாக இருந்

திய பந்தியில் எனக்கும் இடவசதி கிடைத்தது. வயிருரச் சாப்பிட்டுவிட்டு எழுந்தேன். மூன்ருவது பந்திவரை சாப்பிட்டு முடிந்தது. நான்காவது பந்தி இருத்தப்பட்டுக் கறிகள் இலைகளில் வைக்கப்பட்டாயிற்று. சில நிமிடங்களாக உணவு பரிமாறிக்கொண்டு நின்றவர்கள் அங்குமிங்குமாக ஓடித் திரிந்தனர். "உலையில் இப்பொழுதுதான் அரிசி போடுகிருர்கள். சோற்றுக்குச் சிறிது நேரம் பொறுத்திருக்கவேண்டும்". பந்தி பரிமாறியவர்கள் சாப்பாட்டு இலையில் இருந்தவர்களைப் பார்த்துக் கூறினர். பந்திவைத்த இடமோ மிக ஒடுக்கமானது; இருந்த சனமோ இருநூறுக்குமேல் இருக்கும் மதிய உணவுவேளை; கறிகள் வைத்த இலைகள் அப்படியே இருக்க மக்கள் கூட்டம் எழுந்து கலைந்து சென்றது. அவர்களில் அதிகமானேர் சில மைல் தூரத்திலிருந்து கலியாண வைபவத்தில் பங்குகொள்ள அழைப்பின் பெயரில் வந்தவர்கள். ஆனல் முதன் மூன்று பந்திகளிலும் அமர்ந்து சோற்றுக்குப் பற்ருக்குறையை ஏற்படுத்தியவர்கள் அழையாவிருந்தினர்கள் என்பதைப் பின்புதான் திருமண வீட்டார்களினுல் புரிந்து கொள்ளமுடிந்தது.

அப்பொழுதுதான் ஆலய மடத்தில் திருமணப் பந்தி ஆண்டிகளும், அங்காடிகளும் 'பந்திக்கு முந்து' என்ற வாக்கியப் பொருளைப் புரிந்து செயற்பட்டிருக்கிருர்கள் என்பதை நான் நன்கு புரிந்துகொண்டேன்.

'படைக்கப் பிந்து' என்ற இறுதி இரண்டு சொற்களும் புகட்டும் கருத்து, பரிமாறப் பிந்திக்கொள் என்பதே! பரிமாறுபவர்கள் மேல் குறைகாணப் பலர் காத்திருப்பர். அன்றியும் பரிமாறியதால் தமக்கு ஏற்பட்ட களைப்பால் சிலர் சாப்பிட முடியாத நிலைக்காளாவர். வேறு சிலர் அதிக அளவில் உணவுடன் ஊடாடியதால் தாம் சாப்பிடும் பொழுது அந்த உணவில் வெறுப்படைவர். எனவே படைக்கப் பிந்திக் கொண்டால் இத்தகைய நிலைமைகளிலிருந்து தன்னைத் தானே பேணிக் கொள்ள முடியும்.

அகப்பை பிடிப்பவர் நம்மாளென்றால்
அடிப்பந்தியென்ன நுனிப்பந்தியென்ன?

'பந்திக்கு முந்து படைக்கப் பிந்து' என்ற பழமொழியுடன் இந்தப் பழமொழியையும் ஒப்பநோக்கினல் அறிமுகம் ஒரு படி பந்தியில் செல்வாக்கைப் பெறத் துணை நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். சிலவேளை உணவு பரிமாறிக்கொண்டு வரும்பொழுது அடிப்பந்தியில் அமர்ந்திருப்பவர்களுக்குச் சில பதார்த்தங்களைத் தவறுதலாக வைக்க மறந்துவிடுவதுமுண்டு. சில வேளைகளில் இருப்பவர்களுக்கு வைக்கு முன் ஒழிந்து விடுவதுமுண்டு. ஆனல் அகப்பை பிடிப்பவர் நம்மாளென்றால் அடிப்பந்திவரை உள்ளதை அளவிற் குறைத்தாவது பரிமாறப்படும். அடிப்பந்திவரை உள்ளதைப் பங்கீடுசெய்ய முடியாவிட்டாலும் அடிச்சட்டியிலாவது கொஞ்சத்தை ஒளித்து மறைத்தாவது தமது ஆளுக்குக் கிடைக்க வைப்பர்.

ஒரு நாள், ஒரு வேளைச் சோறு பரிமாறுமிடத்தில் அகப்பை பிடிப்பவர் நம்மாளென்றால் இத்தனை செல்வாக்கு; ஒரு பெரிய பாரிய பொறுப்பில் நமதாளிருந்தால் பேசவும் வேண்டுமா ? மிகப்பாரிய கருமங்களைக் கூட நம்மாளைக் கொண்டு இலகுவாகச் செய்து முடித்து விடலாம். இப்படியே பல்வேறு பட்ட இடங்களிலும் நமதாளிருந்தால் எந்த விடயத்தையும் சிலர் புறக்கதவாலேயே சாதித்து முடிப்பர். ஒருவனை வீழ்த்தி மற்றொருவனை மீண்டு கொடுத்து எழுப்ப நினைக்கும் முயற்சியைக் கைவிட்டு எல்லோரையும் சமமாக மதித்து சேவைகளில் இருப்போர் கருமங்களை ஆற்றிவந்தால் இத்தகைய சீரழிவுகள் ஏற்படமாட்டாது. அதை விடுத்து முகத்துக்காகவும், வேறு ஏதுக்களுக்காகவும் வயப்பட்டு வளைந்து கொடுத்து பொறுப்பிலுள்ளவர்கள் கருமங்களை ஆற்றினல் பல பிரச்சினைகள் உருப்பெற்று வீண் விதண்டாவாதங்கள் தலை தூக்கும். ஒரு சில இடங்களில் முன் பின் அறியாதவர்களைக் கூடத் தமதாளாக்கிக்கொள்ள இலஞ்சப்பேயும், போர்சுக் கடிதங்களும் மதுவும் மாதுவும் கூட பாதை சமைக்கும் ஏதுக்களாக்கி நிற்கின்றன. எனவே சமூகம் தன்னைத் தானே உணர்ந்து நடந்துகொண்டால் இத்தகையவர்களால் என்ன செய்யமுடியும்?

# 11

# அழுவார் அழுவார் எல்லாம் தம் கரைச்சல்; திருவன் பெண்டிலுக்கு...

எவன் ஒருவன் தன்னை நேசிக்கின்றானோ அவன் பிறரையும் நேசிப்பான். தன்னை நேசிக்காதவன் பிறரைப்பற்றி அறவே அக்கறை கொள்ளமாட்டான். எனவே சுயநலத்தில் இருந்துதான் பொதுநலம் பிறக்கிறது. ஒருவன் தான் வாழவேண்டும். அவ்வாறே மற்றவர்களும் வாழ தன்னால் இயன்றதைச் செய்ய முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொரு தனிமனிதனுடைய வாழ்வும் உயர்ந்து சமூகத்தின் மறுமலர்ச்சி உயர்வாக பரிணமிக்கும். சமூகங்களின் உயர்வு நாட்டின் வளர்ச்சிக்கு ஏதுவாகவமையும். இதனை உணராத சில மனிதர்கள் எதற்கும் சுயநலத்தையே அடித்தளமாகக் அமைத்து, தம் வாழ்நாள் முழுவதும் செயற்பட்டு வருவதுமுண்டு. அத்தகையவர்கள் அன்று மட்டுமல்ல இன்றும் எம் மத்தியில் உளர். அத்தகையவர்களைப் பற்றி பழமொழியாளர்கள் ஒரு சில வாக்கியங்களைக் கூறித்தான் வைத்திருக்கின்றனர்.

தனக்குத் தனக்கென்றால்
சுளகு படக்குப் படக்கென அடிக்கும்

தன் கருமத்தைத் தானே பார்த்துச் செய்துமுடிப்பது நன்று. ஆனல் ''தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக் கென அடிக்கும்'' என்பதிற்றான் சுயநலம் எனக் கருத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. தனக்கென்றாலென்ன, மற்ற வனுக்கென்றாலென்ன செய்வதைச் சரிவரச் செய்பவனே பண்புள்ள மனிதனுவான். அதைவிடுத்து தனக்கொரு விதமாகவும், பிறர்க்கொரு விதமாகவும் செய்வதானல், மனிதன் பகுத்தறிவுடைய ஜீவன் என நாம் அர்த்தம் கொள்வதில் என்ன நியாயமுண்டு?

சுளகு கொண்டு வேலை ஆற்றும்பொழுது சிலர் கூலிக்கு வேலை செய்வதுமுண்டு. அந்நேரத்தில் மிக ஆறுதலாகத் தமது உடம்பு நோகாமல் நாட்சம்பளமென்றால் வேலை செய்வர். அந்த வேலையையே கூலி ஒப்பந்த அடிப்படை யிலே கொடுத்தால், அதாவது செய்யும் அளவுக்கு கூலி எனப்பொருத்தம் பேசிக் கொடுத்தால் நிகழ்வு என்ன? பல நாளில் கூலிக்குச் செய்யும் வேலையை ஒரு சில நாளில் செய்து முடித்து விடுவர். அதனல் பல நாட்களில் உழைக் கும் கூலியை ஒரு சில நாட்களில் பெறுகின்றனர் என்பது உண்மை. ஆனல் நாட்கூலிக்கு வேலை செய்யும் பொழுது ''ஐயோ சரியான வேலைப்பளு. புடைப்பது மிகக் கஷ்ட மானது. நாம் என்றதால் தெரிந்த முகமென்று தட்டா மல் செய்கிறேம்'' என்று கூறுவதும், அடிக்கடி தண்ணீர் குடிப்பதும், இடைக்கிடை வெற்றிலை பாக்குப் போடுவதும், வேளைக்கு வேளை ஆறுதல் எடுப்பதும், நேரம் பார்த்து வேலைக்கு வருவதும், போவதும் இயல்பாகவே கடைப்பிடிக் கப்படும் செயல்களாகும். ஆனல் அந்த வேலை கூலி ஒப்பந்த அடிப்படையில் அமைந்து விட்டால் நடைமுறைச் செயல் கள் எல்லாம் ஓடி மறைந்து விடும்.

நேரகாலம் பாராமல், கைஓயாமல் வேலையைச் செய்து முடிப்பதில் கண்ணும் கருத்துமாகவிருப்பர். ஒரே மனி தனிடம் காணப்படும் பல தன்மைகள் இவை என்றால், இதை நினைத்து அழுவதா? சிரிப்பதா?

கூலி வேலை செய்பவர்கள் கல்வி அறிவு சிறிது குறைந்த வர்கள்: தம்மைத்தாமே எடைபோட்டு சமுதாய வட்டத் தைச் சிறிதாக்கி நாளாந்த வாழ்க்கையை ஓட்ட முயற்சி செய்பவர்கள். ஆனால் படித்தவர்கள், தம்மைத்தாமே உயர்ந்தவர் எனக் கணக்குப் போட்டுக் கொள்பவர்கள். எல்லோரும் வேலைக்கென மாதவேதனம் வாங்குபவர்கள். ஆனால் அவர்களில் சிலர் என்ன செய்கிறார்கள்? காரியால யங்களில் தங்களது அலுவல்களைப் பார்த்துப் போக வரும் அப்பாவிப் பொது மக்களை நடையாய் நடக்க வைக்கிறார் கள். அந்த வேளை அவர்களினது கையில் ஏதாவது ஆதா யம் கிடைக்குமெனக் கண்டால் உடனே படக்குப் படக் கெனச் செய்து முடித்துக் கொடுத்து விடுவர். ஆனால்...?

ஒருவன் தன் சொந்த வேலையை படக்குப் படக்கெனச் செய்வதை நியாயப்படுத்தினாலும் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் செய்யும் சேவைக்கென வேதனம் பெற்றுக்கொண்டு பல்வேறு பொறுப்புக்களில் இருப்போர் சிலர் வேறு விதமாகத் தமக்கு ஆதாயம் கிடைக்கும் நேரத்தில் மட்டும் படக்குப் படக்கெனச் செய்து முடித்துக் கொடுப்பதை எப்படி நியா யப்படுத்துவது? சமூகத்தில் மிக நலிந்தவர்களே இத்தகைய வர்களுக்கு இலக்காகின்றனர். பணம் படைத்தவர்கள் இத்தகையவர்களைத் தேடிப் பிடித்து ஒன்றுக்குப் பத்தை வீசி தமது வேலைகளை மிக இலகுவாகவும், மிகப் படக்குப் படக்கெனவும் செய்து முடித்துக் கொள்வர்.

''நியாயவாதி பொது சன விரோதி'' என்பதற்கு ஏற்ப இத்தகையவர்களை ஒருவன் இடை நடுவில் தட்டிக் கேட்கப் புறப்பட்டால், அவனது நிலைமை இக்கட்டாகவே அமையும். உள்ளதைச் சொன்னதினால் உடம்பெரிச்சல் கொண்ட அதிகாரி வேண்டுமென்றே அந்த மனிதனின் அலுவல்களைப் பார்த்து முடிக்காமல் சாட்டுப்போக்குச் சொல்லிக் காலத்தைக் கடத்துவான். இதனால் காரியத் தைச் செய்து முடிக்கப் பல சிக்கல்கள் வந்துசேருவதுமுண்டு. அந்த அதிகாரியின் செயற்பாட்டால் வேறு சில காரியா

லய ஊழியர்களையும் பகைத்துக் கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்படும். ''துணிந்தவனுக்குத் துக்கமில்லை'' என்பதற்கேற்ப எதிர்நீச்சல் போடப் பலர் துணிய வேண்டும். அப்பொழுதுதான் ஆசாட பூதிகளான லஞ்சப் பேர் வழிகள் திருந்துவார்கள்.

**அழுவார் அழுவார் எல்லாம் தம்கரைச்சல்;**
**திருவன் பெண்டிலுக்கு அழ யாருமில்லை**

திருவன் அன்றாட வாழ்வில் பல திருகுதாளம் போட்டாலும், மக்களோடு வாழ்ந்து தானும் சிரித்து, மற்றவர்களைச் சிரிக்கவைப்பதுடன் சிந்திக்கவும் வைப்பவன். சாடிக்கேற்ற மூடியாக அவனது மனைவியும் நடந்து வருபவள். அத்தகைய குடும்பத்தின் அங்கமாகிய அவனது மனைவி இறந்து கிடக்கிறாள். அவனுக்கு முகம் காட்டப் பலர் குழுமி நிற்கிறார்கள். ஆனால்... அங்கு என்ன நடக்கிறது? அவனது சிறு குடிலே எழும்பிப் பறக்கக் கூடிய அளவுக்கு குரல் எழுப்பி ஒப்பாரி ஓலம் ஒலிக்கின்றது. இருந்தும் ஒப்பாரியைச் சிறிது நேரம் கவனித்தாற்றான் உண்மை புரியும். ''அழுவார் அழுவார் எல்லாம் தம் கரைச்சல்'' பழைய சலிப்பு. அதாவது தமது குடும்பத்தில் இறந்தவர்களை நினைத்து ஓலமிட்டு ஒப்பாரி வைப்பதையும், மாரடித்து பிணத்தைச் சுற்றி வருவதையும், தலைகளை மோதிக் கொள்வதையும் கண்ணீர் சொரிந்து கதறி அழுவதையும் தான் நாம் காணலாம். ''திருவன் பெண்டிலுக்கு அழுவார் யாருமில்லை'' எனப் பழமொழி வாக்கியம் கூறினாலும் எந்த மரண வீடுகளிலும் நாம் காணும் காட்சி இதுவே ஆகும்.

மரண வீட்டுக்கு வந்து போவது, உதவுவது பாரம்பரியமான ஒரு நடைமுறைச் சம்பிரதாயமே ஒழிய பச்சாத்தாபமான பரிவு அல்ல, என்பதை சமுதாய நடைமுறைகளில் இருந்து நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம். சிலரது சுய கவலையைப் போக்க அயலார் வீட்டு மரணவீடு ஒரு நிலைக்களமாக அமைகிறது என்பதை மரண வீட்டிற்கு வருபவர்கள் நடந்து கொள்ளும் வழி முறைகளில் இருந்து

புரிந்துகொள்ள முடியும். இந்தவகையில் ஆண்களை விடப் பெண்களே முதலிடம் பெறுவர்.

எது எப்படிப் போனாலும் தன் காரியம் தனக்கு
யார்குடி கெட்டாலும் நீ குடி மிளகு சாறு

இந்த இரண்டு பழமொழி வாக்கியங்களும் சுயநலப் பற்றுக் கொண்ட தன்நலவாதிகளையே சாடி நிற்கின்றன. 'எது எப்படிப் போனாலும்' 'யார் குடி கெட்டாலும்' என்ற இரண்டு கூற்றுக்களையும் எடுத்துநோக்கினால் 'சுயநலம்' மிகப் பாரிய அளவில் இடங்கொண்டிருப்பதைக் காணலாம். 'எது எப்படிப் போனாலும் தன் காரியம் தனக்கு' சமுதாயத்தைப் பற்றியோ, அன்றி பிறர் ஒருவரைப் பற்றியோ அக்கறையில்லை, தன் காரியம் தனக்கு நிறைவேறினால் அதுவே போதும் என்ற மனப்பாங்கு கொண்டவன் யார்? சுத்த சுயநலமிதானே. இன்று சொந்த மண்ணை விட்டு வெளிநாடு சென்று தாம் மட்டும் தப்பிப்பிழைக்க வழி தேடுபவர்களும் இவர்களே.

''யார் குடி கெட்டாலும் எமக்கு என்ன? நீ குடி மிளகு சாறு'' எனப் பொருள் பட உள்ள வாக்கியம் நோய்கண்டவர்களுள் தமது ஆளைமட்டும் தப்பவைப்பதற்காக நீ குடி மிளகு சாறு எனக் கட்டாயப் படுத்தப்படுவதை நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது. எனவே தமது கருமங்களை மட்டும் பார்த்து முடித்தால் போதும், தம்முடன் கூடியிருப்பவர்களைக் கூட உதாசீனப் படுத்தி "நீ குடி மிளகு சாறு; எம் குடும்பம் தப்பிப் பிழைத்துக் கொள்வோம். அதுவே எமக்கு போதும்'' எனத் தொனிக்கிறது. ஒரு பெரிய கூட்டத்தில் இத்தகைய ஒருவர் இருந்தாலே போதும் சமூகச் சீரழிவுக்கு.

இன்று தமிழராகிய நாம், நான், நீ என்று பேரம் பேசாமல், நாம், எங்கள் என்று ஒரே குரல் எழுப்பினால் நாளைய நாளே எமது சபீட்ச நாளாகும், ●

# 12

# பணம் பந்தியிலே குணம் குப்பையிலே

ஆ.ஜெயகாந்தன்

பண்டைய பழமொழி வாக்கியங்கள் இன்றைய மக்களின் வாழ்க்கையையும் பிரதிபலிப்பனவாகவே அமைகின்றன. மக்கள் கல்வி அறிவில் குறைந்தவர்களாக இருந்தாலும் அனுபவவாயிலாக ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கூட்டு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

இன்று மனித சக்திக்குப் பதில் விஞ்ஞான சக்தியால் ஆக்கப்பட்ட கருவிகள் பல, மனிதர்கள் சேர்ந்து செய்யும் வேலைகளைத் தாமே செய்துமுடிக்கின்றன. ஆனால் அன்று மனிதர்கள் ஒன்று கூடிப் பல பாரிய வேலைகளை மனித சக்தியின் வலிமையினாலேயே செய்து வெற்றிகண்டனர். வேலைக்குக் கூலியாகப் பண்டங்களையே பெற்று வந்தனர்.

செல்வந்தர்களாகச் சிலரும் மற்றையோர் அவர்களுக்குச் சேவகம் செய்பவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர். நிலப்பிரபுக்களின் கீழ் வேலை செய்தோர் நிலத்தில் வேலை செய்து வருவாயில் ஒரு சிறு பங்கைக் கூலியாகப் பெற்று அவற்றின் மூலம் தம் தேவைகளைப் பண்டமாற்றாகப் பெற்று வாழ்க்கைப் பாட்டைச் சீராகவும், சிறப்பாகவும் ஓட்டி வந்திருக்கின்றனர். எனவேதான் பணப் பரிமாற்றம் மனித வாழ்க்கையில் இடத்துக்கு இடம் வெவ்வேறு

உருவத்தில் மாறுபட்ட காலங்களிலும் தோன்றியிருக்கின்றது.

எமது நாட்டில் அரேபிய முஸ்லிம்கள் வர்த்தகராக வந்த காலத்தில் முதன் முதலாகப் பணத்தை மேலைநாடுகளிலிருந்து இங்கு கொண்டுவந்திருக்கவேண்டுமெனக் கருத வேண்டியிருக்கிறது. அதன் பின் மேலை நாட்டவரின் அரசுகளும் இங்கு நிலைபெற்றன; அக்காலகட்டத்திலேயே நிலையான பணப்பரிவர்த்தனை இலங்கையில் நிலை பெறத்தொடங்கியது.

காசு, பணம் என்ற சொற்கள் செல்வம், தேட்டம் என்ற சொற்களை விட மக்களின் வாய்களில் அடிக்கடி உச்சரிப்பில் இடம்பெறத் தொடங்கியிருக்கின்றன. எனவே பணம் நாணயங்களாகவும், கடதாசித் தாள்களாகவும் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. காசு, பணம் போன்ற பதங்களைக் கொண்டு உருப்பெற்ற பழமொழிகள் காலத்தால் மிகப் பிந்தியவை. இருந்தும் பணம் என்றும் எந்நேரமும் மனித கைகளில் உருண்டுகொண்டிருப்பதால் மிக முக்கியமான இடத்தை மனித சமூகத்தில் பெற்றிருக்கின்றது.

**'கனத்தால் இனமாகும் பணத்தால் சனமாகும்'**

பட்டம், பதவி, சொத்து, பணம் என்பனவற்றை உடையவன் கனம் பெறுகின்றான். அவன் யாராகவும் இருக்கலாம். எத்தகைய குணநலன் உடையவனாகவும் இருக்கலாம். அவன் உடனே இனமுறைக்கு ஆளாகி விடுவான். அன்றியும் எத்தகைய கருமங்களிலும் முதலிடம் பெறும் தகுதியும் பெற்று விடுகிறான். அவனது சென்றகாலச் செயற்பாடுகள் மூடி மறைக்கப்பட்டு ஓர் உன்னதமான புதிய மனிதனாக்கப்படுகின்றான். ஒரு ஏழை எத்தகைய நல்ல குண நல முடையவனாக இருந்தாலும் அவன் பணம் என்னும் கனம் இல்லாத காரணத்தால் இந்த மனித சமூ

கத்தில் யாரோ? எவரோ? என்று பேசப்படுகின்ற நிலைக்கு ஆளாகி விடுகிறான்.

### கோடி சீமான் துணியவேண்டும் அல்லது கோவணாண்டி துணியவேண்டும்

இந்த மனித சமுதாயத்தில் எதைச்செய்து வெற்றி காண்ப தென்றாலும் பணம் முக்கியம். பணக்காரன் தான் நினைத் ததை ஒன்றுக்குப் பத்தை, பத்துக்கு நூறைப் பாராது செலவு செய்து அந்தக் கருமத்தால் வரும் லாப நட்டத்தைக்கூடக் கணக்கிட்டுப் பாராமல் வரட்டுக் கௌரவம் ஒன்றை மன தில் வைத்துக்கொண்டு தான் செய்யும் செயலில் உள்ள சரி பிழையைக் கூட ஏறெடுத்து நோக்காமல், தான் ஒரு சீமான் என்ற நிலையை மட்டும் நிலைநாட்டி விடுகிறான். இவனைப் போன்றே, வருவது வரட்டும்; எனக்கு என்ன நட்டம்? என் உயிர் ஒன்றுதான் போனால் போகும் என்ற மன வைராக்கியத்துடன் ஒன்றுமில்லாதவனும் சில செயல் களைச் செய்து முடிவுகாணத் துணிந்து விடுவான்,

### ஆண்டி குண்டியைத் தட்டினால் பறப்பது சாம்பல்

வெற்றியும் தோல்வியும் அவனுக்கு ஒன்றே. ஆனால் இவர் களைப்போல இடைநிலை வாசி ஒருவன் துணிந்தால் மெல்ல வும் முடியாது, விழுங்கவும் முடியாது சொல்லொணாக் கஷ்டத்துக்கு ஆளாகிவிடுவான்.

மனிதனுக்கு மானம் ஒன்றே பிரதானம். மானம் அழிந்தபின் வாழ்வதிலும் வாழாமை நன்று. 'காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வராது'. அன்று மக்கள் மானத்தைக் காக்க தங்கள் பொருள் பண்டங்களை இழந்தது மட்டுமன்றித் தமது உயிர்களையே பணயம் வைத் தனர். நாணயம் வாய்ச்சொல்லைக் காப்பது. சில கால் நாணயம் (பணம்) இன்மையால் வாய் நாணயம் தப்பிப் பொய்யன் என்ற பெயரெடுக்கவும் வழி அமைந்துவிடு கின்றது. சிறு தொகைக்காகப் பொய்யன், கள்ளன் என்று பெயரெடுத்தபின் கோடி செலவு செய்தாலும் முன்

எடுத்த பெயரை மாற்றமுடியாது. பரோபகார வாழ்க்கையால் பணத்தைச் செலவு செய்து முன் பெற்ற கெட்ட பெயர்களைச் சமுதாயக் கண்ணில் இருந்து மறைக்கச் சிலர் பாடுபட்டாலும் கிடைக்கும் பலன் மிகச் சொற்பமே.

இன்று சிலர் பணமிருந்தால் போதும். மானம், மரியாதை தானே தேடிவரும் என்ற துணிவுடன் தகாத பல வழிமுறைகளைக் கையாண்டு பணத்தைச் சம்பாதித்துப் பெரிய புள்ளிகளாக நடமாடி வருகின்றனர்,

பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்.

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே.

பணமில்லாதவன் பிணம்.

ஈட்டி எட்டியமட்டும் பாயும்
பணம் பாதாளம்மட்டும் பாயும்.

பணமிருந்தால் படையையும் வெல்லலாம்.

பணம் இருக்கவேண்டும்;
இல்லாவிட்டால் பத்துச் சனமிருக்கவேண்டும்.

இப்படியாகப் பல பழமொழிகள் பணத்தை அடித்தளமாகக் கொண்டு எழுந்திருக்கின்றன.

பணமென்றால் பனிதன் பேயாகப் பறப்பான் என்ற பழமொழி வாக்கியத்தின் மூலம் பணமென்றால் மனிதன் தனது நற்பண்புகளையெல்லாம் இழந்து பேயாகி விடுகிறான்; பணமென்ற பேய் மனிதத் தன்மையை மறக்க வைக்கின்றது என்பதை உணர்த்தவே பேயாகப் பறப்பான் எனக் கூறப்பட்டிருக்கிறது. இதனால் பணம் எப்படி மனிதனை ஆட்டிப்படைக்கிறது என்பதைச் சென்றகால மனிதர்களே நன்கு புரிந்திருக்கின்றனர் என்பதை நாம் இன்று தெரிந்து கொள்ள முடிகிறது.

'பணமென்ருல் பிணமும் வாய் திறக்கும்'. உயிர் நீங்கிய சடலம் பிணம். பஞ்சப் புலன்களும் அடங்கியது. ஆனல் பணம் என்று கூறினல் அந்தப் பிணமே வாய் திறக்கிறதென்ருல் பண வாஞ்சை எவ்வாறு மனிதனைப் பீடித்திருக்கிறது? ஆட்டிப்படைக்கிறது என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே' அன்றைய தமிழ் மக்களிடையே தொழில் முறையாக எழுந்த வேறுபாடு சாதி என்ற பெரியதோர் வியாதியாக நிலைபெற்றிருக்கிறது. குலம் பேசி, உயர்வு தாழ்வு பாராட்டி வாழ்ந்துவந்திருக்கின்றனர். அப்படியானவர்களிடையே பணம் பந்தியிலும் குணம் குப்பையிலுமாக இடம்பெற்றிருக்கிறதென்ருல், பணம் எத்தகைய நிலைப்பாட்டை உடையதென்பதை அறிந்துகொள்ளலாம்.

உலகின்கண் வாழ்வாங்கு வாழ்ந்து உலக இன்பங்களைச் சரிவர நுகரவேண்டுமேயானலும் இந்தப் பணம் மிக இன்றியமையாத ஒன்ருகின்றது. பணமில்லாதவன் பிணம், பணமென்ருல் பிணமும் வாய்திறக்கும் என்று கூறியதோடு நில்லாமல், பணமில்லாதவன் பிணமென்று கூறும்போது உயிருள்ள மனிதனே பணமில்லாத காரணத்தால் நடைப்பிணமாகி விடுகிருன்.

'பணம் பாதாளம் மட்டும் பாயும்'. மூவுலகம்பற்றிப் பேசி வாழ்ந்த அவர்கள் மண்ணுலகிலிருந்து பணம் பாதாள உலகம் மட்டும் பாயும் என்று மட்டும் கூறி, ஏன் விண்ணுலகைப் பற்றிக் கூற மறந்துவிட்டனர் என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. இன்று இந்தப் பணம் விண்ணையும், மண்ணையும், பாதாளத்தையும் ஒன்ருய் இணைப்பதைக் காண்கின்ருேம்.

போர் முனையில் பணம் படைத்தவன் பக்கம் ஆயுத பலம் கூடியதாகவும் பணம் இல்லாதவன் ஆயுத பலம் குறைந்தவனுகவும் இருப்பதை நாம் காண்கிருேம். இந்த

நிலைப்பாட்டை அன்றே பழமொழியாளர் நன்கு உணர்ந்திருக்கின்றனர். பணமிருந்தால் படையையும் வெல்லலாம். இன்றைய உலகப் போர்களில் வீரத்தைவிட ஆயுதம் முக்கிய பங்கை வகிக்கின்றது.

உடலை விற்று உயிர்வாழும் தாசியும்கூட ஒருவனை வேண்டாள் என்பதைக் 'காசில்லாதவனை வேசியும் வேண்டாள்' என்ற பழமொழி மூலம் எடுத்துக் கூறியுள்ளனர் முன்னோர். அழகு, உடற்கட்டு, செல்வாக்கு என்பனகூட அப்பெண்முன் செல்லாக் காசாகிவிடுகிறது.

'காசா லேசா, காசாலே சா' இந்தச் சொற்கள் வாயில் என்றும் உச்சரிக்கப் பெறும் இரண்டு சொற்களாகும். ஆழ்ந்து நோக்கினால் இதன் கருத்து பெரிய அர்த்தமுள்ளதாகவும் இந்த மனித சமுதாயத்தின் நோக்கத்தையும் போக்கையும் எடுத்தியம்பும் சொற்களஞ்சியமாகவும் இடம் பெறும்.

காசு இலேசான ஒன்றல்ல. சகலத்தையும் ஆட்டிப் படைக்கும் சக்திவாய்ந்தது; கனம் உடையது; பிணத்தையும் வாய்திறக்கச் செய்வது; பாதாளம் மட்டும் பாய்வது; படையை வெல்லக்கூடியது. காசாலே சா என்று எடுத்து நோக்கினால் இந்தக் காசு எத்தனையோ உயிர்களைக் கொலை செய்ய ஏதுவாகின்றது. உண்மையைப் பொய்யாக்கலாம். பொய்யை மெய்யாக்கலாம். மனிதரில் பலரை அடிமையாக்கலாம். ஆட்சியைக் கவிழ்க்கலாம். இப்படி இந்தப் பணத்தைக் கொண்டு எண்ணற்கரிய செயல்களையெல்லாம் செய்துமுடித்துவிடலாம்.

இந்த உலகில் உண்மையின் பக்கம் மக்கள் எல்லோரும் சாய்ந்தால் எப்படித் துன்பங்களும் துயரங்களும் நிறைந்த, நீதி நியாயமற்ற கொடூர செயல்கள் இடம்பெறும்? அமைதியும் சாந்தமுமல்லவா நிலைபெற்றிருக்கும்!

சமூகச் செயல்களில் இன்று பலர் பணக்காரனைப் பார்த்து முதலிடம் கொடுப்பதைக் காண்கின்றோம். பணக் காரனும் மாலை மரியாதைகளைப் பெறுவதற்காகத் தன் பணத்தையே கொடுத்து முதலிடத்தைப் பிடித்துக்கொள் ளும் செயலும் இன்று நிலைபெற்று வருகின்றது. இன்றும் அன்றும் படித்தவன், பண்புள்ளவன் என்று பருக்கைத் துண்டுக்கு வாலாட்டும் நாய்களைப்போல் சிலர் பணக்காரன் பின்னால் திரிவர். 'பணக்காரன் பின்னாலும் பத்துப்பேர்; பைத்தியக்காரன் பின்னாலும் பத்துப்பேர்' என்ற பழமொழி யிலிருந்து எமது சமுதாயத்தைக் கணக்கிட்டுக்கொள்ள லாம்.

ஏன்? ''தாயைக் கொன்றவன் பின்னாலும் நாலுபேர்'' என்பதை உற்றுநோக்கினால் எமது சமுதாயத்தில் எப்படிப் பட்ட குணநலன்களைக் கொண்டவர்கள் பணத்தைக் காட்டிச் சமூகத் தொண்டர்களாகிப் பல நலன்களைப் பல வழிகளாலும் பாதுகாத்துக்கொள்கிறார்கள். இந்தச் சுயநல வாதிகளே சமுதாயப் புல்லுருவிகள். இத்தகையோரை இனங்கண்டு கொள்ளவேண்டியது மக்களின் கடமையாகும். அதை விடுத்துச் ''சாய்கிற பக்கம் சாய்கிற செம்மறி ஆடு'' களாக இருக்கவேகூடாது. பணம் வரும்போகும். மானம் போனால் வராது என்பதை உணர்ந்து வாழவேண்டியது எமது கடமையாகும்.

# 13

# வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்

இது நவ நாகரிகவுலகம். மக்கள் கலப்பு நாகரிகத்துக் குட்பட்டு வாழ்வதால், புதியது எது? பழையது எது? எனப் புரிந்துகொள்ள முடியாத நிலையிலுள்ளனர்.

நாம் வாழப் பணம் வேண்டும். அதைத் தேடிக் கொள்ளக் காலத்துக்குக்கேற்ற கோலத்துக்குத் தன்னை மாற்றிக் கொண்டாற்ருன், மனிதன், தான் இன்றைய சமுதாயத்தில் தனது பொருளாதாரத்தை விருத்தி செய்து கொள்ளலாமென நினைக்கின்ருன்.

அப்படியானவன் பழையவற்றைப் பேணிக் காப்பவர்களைப் பார்த்துப் பைத்தியக்காரர்கள் என்று பெயர் சூட்டுகின்ருன்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஔவையார் வாக்கை எடுத்துக் கூறினுல் "அன்னையும் பிதாவும் பின்னடிக் கிடைஞ்சல்" என்று கூறுகிருன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதைப் புதுமை வாக்கியமாக "ஆலயம் தொழுவது வேலை மினக் கேடு" என்கிருன்.

இத்தகைய மாற்றங்களும் புதுமைகளா?

புதுமை என்ற பெயரில் எத்தனை கேலிக்கூத்துக்கள்? காலக் கிரமத்தில் இத்தகைய செயல்களால் பல சிறந்த தமிழ் வாக்கியங்கள் திரிபு படுத்தப்பட்டு, உருக்குலைந்து, சிலகால் மறைந்து போய்விடுமோ என எண்ணிக் கவலைப் படவேண்டியிருக்கிறது.

இன்றைய பெற்ருேர், நேற்றைய பிள்ளைகள்; இன்றைய பிள்ளைகள் நாளைய பெற்ருேர்கள். இவை இயற்கையின் நியதியால் நடைபெற்றுக் கொண்டிருப்பவை. எனவே இன்றைய பிள்ளைகளின் எதிர்காலந்தான் நாளைய உலகம். நல்ல பிள்ளைகளை நாளைய உலகத்திற்குப் படைத்துக் கொடுப்பது இன்றைய உலகத்தின் கடமை. ''பெற்றவளுக்குத்தான் தெரியும் பிள்ளையின் அருமை''. இதையுணராத சில பிள்ளைகள் தாம் நினைத்ததைச் சாதனைப் படுத்த முடியாத நேரத்தில் "பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு" என்ற பழமொழிக்கேற்ப நடந்து பெற்ருேரது மனதைப் புண்படுத்துவதுமன்றித் தாமும் சீரழிந்து போகின்றனர். ஆனல் சிலகால் பிள்ளைகளின் வாழ்வே அஸ்தமனமாகி விடுகின்றது. அந்தப் பரிதாபகரமான நிலையைக் கண்டு பெற்ருேர் கண்ணீர் சிந்திக் கதறி அழுகின்றனர். பித்து மெதுமெதுக்கும்; கல்லு வைரம் பாய்ந்திருக்கும். அனுபவமும் ஆற்றலும் குறைந்தவன் பிள்ளை. அவசரமும் ஆத்திர புத்தியும் கொண்டு "இளங்கன்று பயமறியாது" என்பதற்கு ஏற்பச் செயற்பட்டு விடுகிருன். கன்று துள்ளித் தாய்க்கு நோகுமா? பிள்ளைதானே என்ற பெருமனத்துடன் பெற்ருேர் அரவணைத்துக் கொள்ளுகின்றனர். செய்த பிழைகளையும் நொடியில் மறந்துவிடுகின்றனர். வீசிய புயல் தணிந்து, தென்றல் வீசத் தொடங்கி விடுகிறது. இங்கே "நீரடித்து நீர் விலகாது" என்ற பழமொழி அர்த்தமுள்ளதாகின்றது.

தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழி

வேரோடி விளாத்தி முளைத்தாலும் விந்துவழி தப்பாது

தாய் மரம் விளாத்தி. விளாத்தி மரத்தின் வேரில் இருந்து விளாத்திக் கன்று முளைத்து மரமாகிப் பழம் தரும் பொழுது, மூலப் பழத்தின் விதை (வித்து) யில் இருந்து முளைத்த மரத்தின் தன்மைக்கு மாறுபட்டதாக எப்பொழுதும் அமையாது. அத்தகையதாகவே உற்பத்திக் காரணி யின் உரிமை வழியாக தந்தையின் வாரிசாகவே மகன் இருப்பான் என்பதை இப்பழமொழி எடுத்துக் கூறுகின்றது. ''தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழி'' என்பதில் இருந்து தந்தையின் நிலைப்பாடே மைந்தனிடமும் காணப்படும் என்பது நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் தந்தையின் செயற்பாடு உடையவர்களாகப் பிள்ளைகள் எல்லோரும் அமைவார்கள் என்பதை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது. சமூக நடமாட்டத்தாலும், நண்பர்களின் கூட்டுறவாலும் பிள்ளைகள் வேறுபட்ட சுபாவம் உடையவர்களாக வாழ்வதை நாம் காண்கிறோம்.

**வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்.**

**ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**

**தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.**

**அழுத பிள்ளை பால் குடிக்கும்.**

**அழுதழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்.**

இந்த ஐந்து பழமொழிகளும் சிறுவர்களைக் கருப் பொருளாகக் கொண்டே உருப்பெற்றிருக்கின்றன. இன்றைய பிள்ளைகள் நாளைய மனிதர்கள். எதிர்காலம் அவர்களுடையது. அவர்களுடைய இன்றைய செயல்கள் ஒவ்வொன்றும் நாளைய உலகை ஆட்டிப் படைக்கும்.

'' இளமையிற் கல்வி சிலையில் எழுத்து '' என்பது மூதாட்டி வாக்கு. சிறு வயதிலே பிள்ளையின் உள்ளத்தில் பதிந்ததை எப்பொழுதும் மாற்ற முடியாது. கல்லில் எழுதிய எழுத்தாக அது நிலைபெற்றுவிடும். ஆகவே சிறுவயதில்

இருந்தே நல்லவற்றையே சிறுவர்களுக்கு ஊட்டவேண்டி யது பெற்ருேர்களினதும், ஆசிரியர்களினதும் பாரிய கடமையாகும். "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதும் இதனையே எடுத்தோதுகின்றது. அன்றியும் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற வினு மூலம் நல்லனவற்றைநாம் பிள்ளைகளுக்குச் சிறுவயதினிலேயே புகட்டி வைக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. பிஞ்சில் பழுத்த பழம் வெதும்பற் பழம். சுவையற்றது; குப்பை மேட்டைப் போய்ச் சேருவது. அவ்வாறே சிறுவர்கள் சின்னஞ்சிறுவர்களாக இருக்கும்பொழுதே சிரற்றவர்களாக மாறிவிட்டால், தம்மையும் பாழ்படுத்தி, சமுகத்திலே பெரியதோர் நச்சு மரமாகக் காட்சி கொடுப்பார்கள். ஆகவே சிறுவயதில் இருந்தே அன்பு, தயவு, பொறுமை, முயற்சி, சுதந்திர வாழ்வு என்பனவற்றை நன்கு அறிய வைக்க வேண்டியது பெரியவர்களின் கடமையாகும்.

''அழுத பிள்ளை பால் குடிக்கும்'' என்பதை உற்று நோக்கினுல் பிள்ளைக்குப் பசி; தாயானவள் தன் சோலிகளில் ஈடுபட்டிருக்கிருள். அப்பொழுது பாலகன் பசியால் வீரிட்டு அழுகின்றுன். உடனே தன் சோலி எத்தகையதாக இருந்தாலும், அதைக் கைவிட்டு, சேய்க்குப் பாலூட்டுகின்ருள். ஆனுல் இதைக் கொஞ்சம் விரிவாக நோக்கினுல் தேவையான நேரத்தில் முயற்சி செய்தால்தான் வாழ்க்கையில் வெற்றியைக் காணலாம். அதை விடுத்து கிடைக்க வேண்டிய நேரத்தில் தானுகவே கிடைக்குமென்று அயர்ந்து இருந்தால், தோல்வியே கிடைக்கும்.

அழுததினுலேயே திருஞானசம்பந்தர் உரிய காலத்தில் ஞானப்பாலைப் பருகி, வீடு பேற்றை அடைய, ஞான குருவையும் கண்ணுரக் காணும் பாக்கியத்தைப் பெற்ருர்.

'' அழுதழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்.'' முற்றிலும் உண்மை. கருவுற்ற நாள் முதல் பாலன் பாரில் உதயமாகும் வரை வேதனைகளைத் தாங்கிப் பிள்ளையைப்

பெற்றெடுப்பவள் தாயே. இதில் வேறு யாருமே பங்கு கொள்ள முடியாது. ஆனால் மருத்துவர்கள் தாயின் உடல் வேதனையைத் தமது வைத்திய சிகிச்சைகளால் சாந்தப் படுத்த மட்டுமே முடியும். நியதியாக அமைந்த கருமத்தில் வேறொன்றும் செய்ய முடியாது. இவ்வாறே ஒரு கருமத் தில் வெற்றி பெற வேண்டுமானால் எம் கையே எமக் குதவியென மனத்திடத்துடன் முயன்றால் பலன் கிடைக் கும்.

மண்ணில் விளையாடுவதென்றால் சிறு பிள்ளைகளுக்குக் கொள்ளை இன்பம். ''வாழும் பிள்ளையை மண் விளை யாட்டில் தெரியும்'' என்பதில் இருந்து தெரிந்துகொள்ளக் கூடியது என்ன? குழந்தை ஒன்று விளையாடுவதில் இன் பம் காண்கிறது. ஒரு பிள்ளை மண்ணைக் காலால் எற்றி, கையில் ஏந்துவதில் மகிழ்கின்றது. இன்னும் ஒரு பிள்ளை மண்ணை வாரி, பக்கத்தில் இருக்கும் பிள்ளையின் மேல் போடுவதில் மகிழ்கின்றது. வேறு ஒரு பிள்ளை மண்ணில் விளையாடும் நேரத்திலேயே அடுப்புக் கட்டிகளை ஆக்குகின் றது. அந்த அடுப்புக் கட்டிகள் பிள்ளையின் தாய் அடுப் பாகப் பாவிக்க உதவுகின்றது. மூன்றாவது பிள்ளைதான் பழமொழியாளன் கண்ட வாழும் பிள்ளை. இரண்டா வது பிள்ளையின் மகிழ்ச்சி மற்றைய பிள்ளைக்குத் துன்பத் தைக் கொடுக்கிறது. முதலாவது பிள்ளையின் செயலில் எதுவுமே காணமுடியாத ஒன்றாக இருக்கின்றது. ஆனால் தன்னளவில் பிள்ளை மகிழ்ச்சி காண்கிறது. மூன்றாவது பிள்ளையின் செயல் விளையாட்டாகத் தேவைக்குதந்த அடுப்பை உருவாக்குகின்றது. இந்த மூன்று பிள்ளைகளின் செயல்களிலும் இருந்து நாம் நல்லதோர் பாடத்தைப் படித்துக் கொள்ளலாம்.

**அப்பன் மாண்டால் தெரியும் அப்பனருமை;**
**உப்புச் சமைந்தால் தெரியும் உப்பினருமை.**

அப்பன் குடும்பத் தலைவன்; பொறுப்பு மிக்கவன். அவன் இறந்தால்தான் தெரியவரும் குடும்பத்தின் கஷ்டம். அந்

நேரத்தில்தான் அவனின் அருமை பெருமையைக் குடும்பத்தவரும் மற்றையோரும் உணருவார்கள்.

உப்பு விலையில் மலிவானது; செயலில் மிக்கது. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே". உப்பு இல்லாப் பண்டம் எத்தனை மதிப்பு வாய்ந்ததாக இருந்தாலும் உண்பதற்கு உதவாது குப்பையிலே போடும் ஒரு கழிவுப் பொருளாகி விடுகின்றது. அவ்வாறே பிள்ளைக்கு அப்பனும், பெண்ணுக்கு அதாவது பிள்ளையின் தாய்க்குக் கணவனும் இல்லாது போனால், சமுதாய நிலையில் தாழ்வு அடைகின்றனர். தாய் விதவை என்ற பெயரைப் பெறுகின்றாள். பிள்ளைக்கும் அறுத(ா)லி வளர்த்த பிள்ளை என்ற பெயரும் கிடைக்கின்றது. தந்தை – தாய் – பிள்ளை மூவரும் கொண்டதே பூரண குடும்பம். பொலிவு நிறைந்தது. நற்கருமங்களில் முதலிடம் பெறுவர். கணவனை இழந்த பெண்ணும் மனைவியை இழந்த ஆணும் சுப கருமங்களில் அதிலும் சிறப்பாகத் தமிழர்களின் குடும்பங்களில் ஒதுக்கப்படுவது பாரம்பரியமாக நடைமுறையில் இருந்துவரும் ஒரு செயலாகும்.

எமது சமூகத்தில் அன்றும் இன்றும் பெண்ணுக்குச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, சமூக வாழ்வில் ஆணுக்கு முதலிடத்தைக் கொடுத்து வருகின்றனர். அதனால் குடும்பத்தில் – ஏன் சமூகத்தில் உலகில் சரிபாதி பங்கு கொள்ள வேண்டிய பெண், குடும்பத்தில் தாழ்வு நிலை, சமூகக் கட்டுப்பாடு, சீதனக் கொடுமை என்பனவற்றால் பாதிக்கப்படுகின்றாள். அதனால் 'நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்' என்று தன்னை நினைந்து தானே ஆற்றுத்துயரக் கடலுக்குள் சதா ஆழ்ந்த வேதனை அடைகின்றாள். அதனாலே பெண் பிள்ளையைப் பெறுவதிலும் பார்க்க, ஆண் பிள்ளையைப் பெற்று வளர்க்க விரும்புகிறாள். 'சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை வேண்டும்' என்று கூறப்பட்டிருக்கின்றது. இதே பழமொழி திரிபு பெற்று வீண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை வேண்டும் எனக் கூறப்படுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

பெண்ணில்லாவிட்டால் ஆணில்லை, ஆணில்லாவிட்டால் பெண்ணில்லை. ஆணும், பெண்ணும் இணைந்ததே குடும்பம். தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு எனக் கொண்டே உலகம் வியாபிக்கின்றது என்பதை ஏன் இந்த மனித சமூகம் மறந்து நடக்கின்றதோ தெரியவில்லை.

இன்றைய உலகில் சகல துறைகளிலும் ஆண்களுக்கு இளைத்தவர்கள் அல்ல பெண்களாகிய நாம் எனப் பெண்ணினம் அறை கூவி நிற்கும் நேரத்திலும் பெண்ணைக் குறைத்து எடைபோடும் நிலை மாறாது இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தாயைச் சந்தையிலே கண்டால்
பிள்ளையை வீட்டிலேயா பார்க்க வேண்டும்?

தாயைப் போலப் பிள்ளை நூலைப் போலச் சீலை

இரண்டு பழமொழிகளும் தாய் வழி மகள் என்பதையே உணர்த்துகின்றன. ''தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு, பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு'' என்பதனால் முன்னைய இரண்டு பழமொழிகளின் கருத்து இந்தப் பழமொழி மூலம் வலுப்பெறுகின்றது. தந்தையை விடத் தாயே பெண் பிள்ளையைக் கவனித்துப் பேணிக் காப்பாள். எனவே தாயின் குண, நடைகளை அறிந்து கொண்டால் மகள் எப்படியிருப்பாள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தந்தை எப்படி நடந்தாலும் பிள்ளையின் பாசம் தாயின் பக்கமே கூடுதலாக இருக்கும். தாய் மனம் கலங்குவதைப் பார்த்தால் சேயின் மனம் கசியும். ''தாய் பொறுக்காததை ஊர் பொறுக்குமா''? என்று வினா மூலம் கேட்கப்படுகிறது. பெற்ற தாயே பொறுமை இழப்பாளேயானால் பிள்ளையின் செயல் மிக இழிவுபட்டதே என்பது புலனாகின்றது.

''தாய் தவிரச் சகலமும் வாங்கலாம்'' என்பது உண்மையிலும் உண்மை. ''தாய்க்குப் பின் தாரம்.'' மனைவி

இறந்தால் மறு மணம் செய்து கொள்ளலாம். ஆனால் பெற்றவளை இழந்தால் எங்கே பெறலாம். தாய் இல்லாத பிள்ளையைத் தலையிலே குட்டலாமா? இதன் மூலம் தாயை இழந்த பிள்ளையின் நிலைப்பாடு எத்தகையது என்பது உணரக் கூடியதாக இருக்கின்றது. தாயில்லாத பிள்ளையை மனித சமூகம் தயவு தாட்சணியத்துடன்தான் நோக்குகின்றது என்பது நன்கு புலனாகின்றது.

தாய் முகம் காணாத பிள்ளையும்,
மழை முகம் காணாத பயிரும்

பிள்ளை அழுகிறது. வீட்டில் உள்ள குழந்தையின் தாயைத் தவிர மற்றையோர் சகலரும் மாறிமாறி அழுகையைத் தவிர்க்கத் துடியாய்த் துடிக்கின்றனர். பலவிதமான விளையாட்டுப் பொருட்களையும் தீன்பண்டங்களையும் கொடுத்துப் பலன் எதுவுமில்லை. அழுகை கூடிக் கொண்டே இருக்கிறது. எங்கிருந்தோ தாயின் குரல் எழுகின்றது. அழுகை தணிகின்றது. தாய் அருகேயே வந்து விட்டால் பேசவும் வேண்டுமா? அழுகை, சிரிப்பாக மாறுகின்றது. இத்தகையது தாய், சேய் பாசபந்தம். வார்த்தைகளால் சொல்ல முடியாதது. அதேபோன்றதுதான் பயிருக்கு மழை நீர். அடிப்பயிருக்கு எப்படி நீர் விட்டாலும் பயிரில் செழிப்பைக் காண முடியாது. மழை கண்டதும் சிரித்து முகம் மலரும் சேயைப் போலப் பூத்துக் காய்த்துப் பொலிவு காட்டி நிற்கும்.

உலக வாழ்க்கையில் தந்தை, தாய், சேய் மூவரும் இணைந்து ஒருமனப்பட்டு வாழ்ந்தாலே வாழ்வு மலரும். நல்ல எதிர்காலப் பிரஜைகள் உதயமாவார்கள் ''தாயும் பிள்ளையுமென்றாலும் வாயும் வயிறும் வேறு'' என்றும் கூறப்பட்டுள்ளதையும் ஒரு கணம் எடுத்துச் சிந்திக்கத்தான் வேண்டும். உண்பது, பேசுவது, செய்வது ஒவ்வொருவரது வயதுக்கும், பழக்கத்துக்கும், அறிவுக்கும் ஏற்ப மாறுபட்டதாக விருக்கலாம், ஆனால்இரத்தவுறவு ஒன்றாகவே இருக்கும்.

●

14

# பாம்பென்றால் படையும் நடுங்கும்

பாம்பில் பலஇனம், பலநிறம், பலவிதம். பற்றைகளி லும், புற்றிலும், காடுகளிலும், செடிகொடிகளிலும், நீர் நிலைகளிலும், ஏன் உவர்நீர்க் கடலிலும் கூட வாழ்கின்றன. எமது நாட்டில் முப்பத்திரண்டின விஷப் பாம்புகள் உண் டென பாம்பு நிபுணர்கள் கூறுகின்றனர். கடற் பாம்பு களிலும் விஷப் பாம்புகள் உள. நாகம், புடையன் ஆகிய இரண்டு இனமும் கொடிய விஷம் உடையவை.

பண்டைக் காலத்தில் குடிசனம் செறிவற்று வாழ்ந்த பொழுது பாம்புகள் எங்கும் வியாபித்திருந்தன. மின் வெளிச்சம் ஏற்பட்டதாலும், பற்றைகள் பல அழிக்கப் பட்டமையாலும் பாம்புகள் குறைவடைந்து வந்தன. ஆனால் இன்று நீர்த்தேக்கங்கள் பல புதிதாக ஏற்படுத்தப் படுவதனால் காடுகளிலும், புற்றுகளிலும் வாழ்ந்து வந்த பாம்புகள் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அதிக மாக நடமாடத் தொடங்கியுள்ளன என ஆய்வு அறிக்கை கள் கூறுகின்றன.

மலைப்பாம்பு உருவத்தில் பெரியது; பலமுடையது; விஷமற்றது. கட்டுமட்டான அளவுள்ள உயிரினங்களைப் பிடித்து விழுங்கும் தன்மை கொண்டது.

மண்ணுண்ணிப்பாம்பு, உருவத்தில் மிகச் சிறியது. நிலத்தில் புதையுண்டு வாழும் இயல்புடையது.

பாம்பின் விஷத்தால் மட்டுமின்றிப் பாம்பின் மேல் உள்ள கிலியாலேயே அதிக மனிதர்கள் இறக்கின்ருர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இன்று பாம்புக் கடிக்கு சிறந்த வைத்திய முறைகள் உண்டு. பண்டைக்கால சுதேச வைத்தியர்கள் பலர் – ஏன் இங்கு கூடச் சிறந்த முறையில் வைத்தியம் செய்து உயிர் பிழைக்க வைக்கின்றனர்,

குறவர்கள் அன்றும் இன்றும் பாம்புகளைப் பிடித்துப் பழக்கிப் பாம்பாட்டித் தொழிலைச் செய்து தாமும் வாழ்ந்து தங்கள் குடும்பங்களையும் பேணிக்காத்து வருகின்ருர்கள்.

எமது நாட்டில் நாகர் என்ற இனத்தினர் பாம்பைத் தெய்வமாக வைத்து பூசித்து வந்தனர். ஏன் இன்றும் சில இடங்களில் நாக வழிபாடு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. நாகதோஷ நிவிர்த்திக்காக பாம்புப் படமும் பொன், வெள்ளிகளால் ஆக்கி அம்மன் கோவில்களில் வைத்து நேர்த்திக்கடன் முடிக்கின்றனர்.

மகா விஷ்ணு பாம்பில் பள்ளி கொண்டார். சிவன் அங்கமெல்லாம் பாம்பை அணிந்தார். பல கோவில்களில் பாம்பு வாகனங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. துரியோதன மன்னனின் ஆட்சிக் கொடியில் பாம்பு பொறிக்கப்பட்டிருக்கிறது. தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக்கடைய வாசுகி என்ற பாம்பை நாணுக உப யோகப்படுத்தி இருக்கின்றனர்.

இப்படியாகப் பாம்பு பலவிடங்களில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது!

உலகில் பாம்புகளின் அமைப்பு, உருவம், நிறம், விஷத் தின் தன்மை சீதோஷ்ண நிலைக்கேற்ப வித்தியாசப்படுகின் றது. சிறிய பாம்புகள், பெரிய பாம்புகளுக்கு உணவா கின்றன. சில கிழக்காசிய நாடுகளில் வாழ்வோர் பாம்பு களை உணவாகவே உட்கொள்ளுகின்றனர். பாம்பின் விடம் சில மருந்துகளில் சேர்க்கப்படுகின்றது. இத்தகைய பாம்பு

கள் பற்றிப் பண்டைய தமிழர் கொண்டிருந்த கருத்துக்களைப் பழமொழி வாயிலாகவும் எமக்குத் தந்தே சென்றிருக்கின்றனர்.

'பாம்பென்றால் படையும் நடுங்கும்'. படை, நாட்டையும், ஆட்சியாளரையும் நாட்டின் கண் வாழும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு உடையது. அஞ்சாநெஞ்சமுடைய பயிற்சி பெற்ற போர் வீரர்களைக் கொண்டது. ஆயுதமேந்திய கரங்களையுடையவர்கள் படையினர். அத்தகையவர்களே 'பாம்பு' என்றதும் நடுங்குவர். அப்படியாயின் அரவம் என்றதும் நிராயுத பாணிகளான மக்கள் கிலிகொள்வதில் தவறு என்ன? பெரியதோர் மக்கள் கூட்டத்தைக் கலைக்க ஒரு சிறிய பாம்பு போதுமானது. நம்மில் சிலர் தமக்குப் பிடிக்காத பொதுக் கூட்டங்கள் நடைபெறும் வேளைகளில் மக்களுக்கு மத்தியில் பாம்புகளை வீசி எறிந்து, கிலிகொண்டு கதறி ஓட வைப்பதைக் கண்ணாரக் கண்டிருக்கின்றோம்.

ஊர்ந்து செல்வது பாம்பு. அது கால் அற்றது. இருந்தும் 'பாம்பறியும் பாம்பின் கால்' என்று கூறப்பட்டிருப்பதால் பாம்பு ஊர்ந்து சென்ற பாதையைப் பாம்பு தான் அறியும். ஆனால் பாம்புடன் சதா பழகிய மனிதர்கள் பாம்பு சென்ற பாதையை (அசைவுகளைக்) கண்டு அறிந்து விடுவார்கள். மோப்பம் பிடிக்கும் நாய் போன்ற மிருகங்கள் பாம்பு சென்ற பாதையை மிக இலகுவாகக் கண்டு பிடித்துவிடும்.

''பாம்புக்குப் பால் வார்த்தது போல'' என்ற வாக்கியத்தை எடுத்து நோக்கினால் பாம்பு விஷ ஜந்து. பாம்பை வளர்ப்பவன் பாம்புக்குப் பாலூட்டிப் பாதுகாத்து வருகிறான். ஆனால் அந்தப் பாம்பு பாலையூட்டியவன் என்று பாராமல் கொடிய விஷத்தை அவன் மேலேயே பாய்ச்சி விடுகிறது. பகுத்தறிவற்ற பாம்பின் செயலிது. இந்த உலகில் சில மனிதர்கள் பகுத்தறிவை அடகு வைத்துத்

தமக்கு நன்றி செய்தவர்களைக் கூடக் கொடும் செயல்களால் அழித்தொழித்து விடுகின்றனர். இத்தகையவர்களையே எடுத்துக் காட்டி வைத்திருக்கின்றனர் நம் மூதாதையர்கள். இதில் இருந்தே அவர்களின் ஞானம் எத்தகையது என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

**பாம்பாட்டிக்குப் பாம்பாலே சாவு;**
**கள்ளனுக்குக் களவாலே சாவு.**

ஒரு தொழிலை நீண்ட நாட்களாகச் செய்து வருகின்ற ஒருவன், தான் அத்தொழிலில் பெரிய அனுபவசாலி – பெரிய மேதை என்ற இறுமாப்பால் மிக அசட்டையாகவும், கவனக் குறைவுடனும் செய்யத் தலைப்படுவான். அதன் விளைவு நட்டமே ஒழிய நன்மை இல்லை. அவ்வாறே பாம்பாட்டி பாம்பைப் பிடித்துப் பல்லைப் பிடுங்கி, அதனை மகுடி கொண்டு ஆட்டி ஜீவனம் செய்து வருபவன். 'பாம்பு எனக்குப் பழக்கப்பட்டது. இந்தப் பாம்பல்ல, எந்தப் பாம்பும் என்னை அசைக்க முடியாது' என்ற இறுமாப்புடன் புதிய பாம்பைப் பிடிக்கும்பொழுது பராகண்டமாகத் தொழிற்படுவதால் பாம்பு தீண்டி உயிர் துறக்க நேரிடுகிறது. அவ்வாறே முதலில்லா வியாபாரியாகிய கள்வனும் ஒரு நாள் அகப்பட்டு உயிர் துறக்கவும் நேரிடும். பலநாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுத்தானே தீர வேண்டும்.

**பாம்புக்குத் தலையைக் காட்டி மீனுக்கு வாலைக் காட்டுவது.**

இந்தப் பழமொழிக் கேற்ற உருவம் பெற்று நீரில் வாழ்வது விலாங்கு. இந்த நீர்வாழ் ஐந்தின் தலை பாம்பைப் போன்றது. வால் மீனை ஒத்தது. அதனால் இது சூழ்நிலைக்கு ஏற்ப மீனுடனும் பாம்புடனும் பழகும் இயல்பைக் கொண்டது. இந்த விலாங்கை ஒத்த இயல்புடைய மற்றைய ஒரு மிருகம் வெளவால் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வாழ்க்கை வாழும் சில மனிதர்கள் நம்மிடையே இருப்பதை நாம் தினமும் காணலாம். கொள்

கையற்ற இந்த மனிதர்கள் தமது நலனுக்குப் பாதகம் ஏற்படும் நேரத்தில் சார்ந்து நின்ற பக்கத்தையும் பகைக்காமல் இங்கு மங்குமாக விலாங்காக நடிப்பதைக் காணலாம். உண்மையில் இத்தகையவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாம்புக்கு விஷம் பல்லிலே;
பரத்தைக்கு விஷம் உடம்பெங்கும்.

பாம்பு இயல்பாகவே விஷத்தையுடையது. இருந்தும் அது பல்லாலே மாத்திரமே தன் விஷத்தை மற்றவர்களுக்குப் பாய்ச்சுகின்றது. பல்லால் பாம்பு தீண்டாவிட்டால் அதன் விஷம் மற்றைய உடலைப் பற்றாது. ஆனால் பரத்தைக்கு விஷம் அவளது உடலெங்கும் உதிரத்துடன் பரந்து இருக்கும். உமிழ்நீரிலும் காணப்படும். கண்ணுக்குத் தெரியாத மேகநோய்க் கிருமிகள் அவளைத் தொட்டாலே மற்றவரை ஒட்டிக்கொள்ளும். துர் நடத்தை காரணமாக ஒருத்தி தேடிக்கொண்ட இந்த நோயால் பலர் நோயாளராகச் சமுதாயத்தில் நடமாட வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மேக நோய் மாற்றக்கூடியதொன்று. ஆனால் பலர் தாம் செய்த தவறைக் கண்டு மற்றவர்கள் ஏளனம் செய்வார்கள் என்ற நினைப்பால் மூடி மறைத்து மரணத்துக்கு ஆளாகின்றார்கள்.

பாம்பு தின்கிற ஊருக்குப் போனால் நடுக்கண்டம் நமக்கு.

என்று நாம் இருக்க வேண்டும். பாம்பையும் உண்பதா? நடுக்கண்டம் எந்த மாமிச உணவிலும் கழிவற்றது; சதைப் பிடிப்புக் கூடியதாகவும் காணப்படும். எனவே கிடைப்பதில் நல்லதை நமக்கு ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது இப்பழமொழி மூலம் புலனாகின்றது. தனித்துவத்தைக் காக்கப் புறப்பட்டால் சமூகத்துடன் ஒட்டி உறவாடி வாழ முடியாத நிலை ஏற்படும். எனவே இடத்துக்கு ஏற்றவாறு வாழ எம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறாமலே கூறி வைக்கின்றது இந்தப் பழமொழி.

பாம்பு விஷ ஜந்து. எனவே எமது பகை ஜந்துவாகவே கருதி வாழுகின்றோம். கண்டால் விரட்டியடிக்கின்றோம். ஆனால் பாம்பின் தோலை எடுத்து அழகிய பட்டிகள் செய்து உபயோகப்படுத்துகின்றோம். இவ்வாறே கொல் புலியின் தோலும் எம்மால் பாவிக்கப்படுகின்றது. இந்தப் பழமொழியை எமது சமூகவுறவுடன் ஒப்ப நோக்கில் பலரது செயற்பாடுகள் வெளிவரும்.

சிலர் இரத்த விருத்தியினருடன் வாழ்விலும் தாழ்விலும் பகைமை பாராட்டி வாழ்ந்துவிட்டுப் பரம்பரையில்லாது இறந்துவிட்டால் சொத்துரிமை பெறுவதில் மட்டும் பங்குபெறத் தலைப்படுவர். வேறு சிலர் பிள்ளைகளைப் படிப்பிக்கப் பணத்துக்குக் கஷ்டப்படும் வேளைகளில் உறவு முறை கொண்டாடினால் பணம் கொடுத்து உதவ வேண்டும் என்ற காரணத்தால் பகைவர்களைப்போல் விலகி நடப்பர். ஆனால் பிள்ளை படித்து நல்லாய் வந்துவிட்டால் மாப்பிள்ளையாக எடுக்க நாடி வருவர். இவற்றை உற்று நோக்கினால் சுய நலம் தலையெடுக்கும்பொழுது பகை உறவாகி விடுகின்றது.

பாம்புக்கும் நோகாமல் பாம்பு அடித்த கோலுக்கும் நோகாமல் இருக்க வேண்டும்.

இந்தப் பழமொழியை எடுத்துநோக்கினால், ''அடிக்குமாப்போல் அடிக்கிறேன், அழுமாப்போல் அழு'' என்ற பழமொழிக்கு ஒப்பத் தோன்றுகிறது. முன்கூட்டியே ஒருவரைத் திருப்திப்படுத்துவதற்காக மற்றையவருடன் கதைத்துப் பேசி, யார் பிழை - யார் சரி என்பதை ஆராயாமல் தண்டனை கொடுத்துத் திருப்திப்படுத்துபவர்களை அம்பலப்படுத்துவதாக விருக்கின்றது. குழந்தையொன்று நடக்கும் பொழுது கால் தடுக்கி நிலத்தில் விழுந்துவிட்டது. எழுந்து நின்று ஓலமிட்டு அழுகின்றது. அப்பொழுது பெரியவர் ஓங்கி நிலத்துக்கு அடித்துவிட்டால் குழந்தை திருப்திப்பட்டு அழுகை மறந்து சிரிக்கின்றது. குழந்தை கள்ளங்

கபடமற்றது; வெள்ளை உள்ளம் உடையது. தனக்கு நோவை ஏற்படுத்திய நிலத்துக்கு அடிவாங்கிக் கொடுத்து விட்டேன் என்ற மனத் திருப்தியுடன் திரும்பவும் நடையைத் தொடருகின்றது.

பாம்பை முட்டையிற் கொல்லவேண்டும். பாம்பு விஷ ஜந்து. தனது விஷத்தால் உயிரினங்களை அழிக்கக் கூடியது. அதை முட்டையில் அழிப்பதால் எதிர்காலத்தில் பல பாம்புகளே உற்பத்தியாகி உயிர்களுக்குத் தீங்கு ஏற்படுவதைத் தடுத்துக் காக்க ஏதுவாக அமைகிறது. பாம்பின் குட்டி பாம்பு, அதன் குட்டி நட்டுவக்காலியா?' ஒரு வினுவாகவே எழுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பழமொழி பரம்பரைக் குணம் சந்ததியைத் தொடர்ந்தே வரும் என்பதை இவ்வினு அகிலத்துக்கும் எடுத்தோதவே இடம்பெற்றிருக்கின்றது. தந்தை பாம்பு. மகன் பாம்பின் குட்டி, பேரன் குட்டியின் குட்டி. 'வேரோடி விளாத்தி முளைத்தாலும் விந்து வழி தப்பாது' என்ற பழமொழியை நோக்கவேண்டியிருக்கின்றது. பரம்பரை தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

பாம்பு தன்பசியை நினைக்கும்போது
தேரை தன் விதியை நினைக்கும்

பாம்பின் வாயில் தேரை அகப்பட்டுக் கொண்டால் அந்தத் தேரையை மெல்லவும் மாட்டாது விழுங்கவும் மாட்டாது தொல்லைப்படும். அதை விட்டால் எப்படித் தன் பசியை ஆற்றுவது என்ற கவலை பாம்புக்கு. ஆனல் தான் பாம்பின் வாயில் அகப்பட்டுவிட்டேனே! அது தன்னை என்ன பாடுபடுத்துகிறது என்று நினைத்துத் தவளை தன் விதியை நினைத்துக் கவலைப்படும். இப்படியாகச் சில பெண்கள் சீரற்ற கணவன்மாருக்கு வாழ்க்கைப்பட்டு, தங்கள் நிலையை நினைத்து வாழ்நாள் முழுவதும் மனக் கவலையுடன் பிறருக்குச் சொல்ல முடியாதவர்களாக உள்ளங்களில் அமுக்கி வைத்திருந்து இறுதியில் செத்து மடிகின்றனர். இத்தகைய நிலைவரம் அன்றுமட்டும்

காணப்படவில்லை. இன்றும் பல குடும்பங்களில் நிலைபெற்றிருக்கின்றது.

தேரை, பாம்பை எதிர்த்துப் போராடவலுவற்றது. தேரை, பாம்பை எவ்வாறு எதிர்த்துப் போராட முடியாதோ அதேபோலவே பெண்ணும் சமுதாயக் கொடுமைகளை எதிர்த்துப் போராட வலுவற்றவள். சமநீதி சமுதாயத்தில் நிலைபெற்றால், பாம்பின் வாய்த் தேரை போல பெண் இனம் வாழாது. சமத்துவம் நிரம்பிய சுதந்திரமுள்ளவர்களாக வாழக்கூடிய நிலை ஏற்படும்.

இன்று எம் நாட்டுப் பெண்மணிகள் தாம் எந்த வகையிலும் மேலை நாட்டுப் பெண்களை விட வீர தீரத்திலும், அறிவாற்றலிலும் குறைந்தவர்களல்லர் என்ற வகையில் முன்னின்று உழைக்க தம்மைத்தாமே தயாராக்கி வருகின்றனர். அன்றியும் இன்று ஒரு சில பெண்மணிகள் இனவிடுதலைக்காகத் தங்களைத் தியாகம் செய்ய முன்வந்த நிகழ்வையும் நாம் அறிவோம்.

பாரதி கண்ட புதுமைப் பெண்கள் எமது சமூகத்தில் இன்று காட்சி கொடுப்பது எமது விடிவுக்கு ஒரு வித்தாகும். எனவே பெண்களும் சரிநிகர் சமமாக வாழ நிகழ்காலம் பாதை வகுக்கும் என்பதில் ஐயமில்லை. பழைய எமது சமுதாயக் கருத்தை நாம் இன்றைய காலப்போக்குக்கேற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ள முன்வர வேண்டும். அத்தகைய நிலைமையில் புதிய மாற்றங்களை நாம் மனதார வரவேற்றுக்கொள்ளாவிட்டால் எமது அடிமை விலங்கை எந்த வகையிலும் அறுத்தெறிய முடியாது.

15

# இறகு முற்றிப் பறவையானல்..........!

மனித சமுதாயத்தில் இன்று இருப்பதுபோல அன்றும் வெளிப்பகட்டுக்குத் தனிமதிப்பு இருந்துதான் வந்திருக்கிறது. இல்லாவிட்டால் ''நாறல் வாயன் தேட, நல்ல வாயன் உண்ண'' என்ற கருத்துப்பட, பழமொழி உதயமாக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கவே முடியாது. பாடுபட்டு உழைப்பவன் உருக்குலேந்து தன்னைத் தானே பேணுது, தான் செய்யும் தொழிலிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்துவான்.

ஒரு தோட்டக்காரன் சதா தனது தோட்டத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பதனுலேயே பயிரில் இருந்து நல்ல பலனைப் பெறமுடிகிறது. இல்லாவிட்டால் பாடுபட்டதற்கு பலனும் கிடையாது; இட்ட முதலுக்கு லாபமும் கிடையாது.

பாடுபட்டு உழைத்த விவசாயி, மாலே வீட்டுக்கு வந்ததும் உடல் அலுப்பால் நித்திரையாகி விடுகின்முன். இத்தகையவனுல் எப்படித் தனது வனப்பையோ, உடையலங்காரத்தையோ கவனிக்க முடியும்? மினுக்கும், குலுக்கும் இல்லாதவன் நாறல் வாயன். பாடுபடுபவனுக்குக் கிடைக்கும் பெயர் இது?

அவன் உடன் பிறப்பு நேரந்தவறுமல் உண்டு உடுத்து ஊர் சுற்றித் திரிகின்முன். இந்தச் சோம்பேறி நல்ல வாயன்.

எப்படி இருக்கிறது? சொந்த வருமானமில்லை. ''முருங்கை பருத்தும் தூணுக்கு உதவாது'' என்பதைப்போல இவருக்கு ''இட்டு வைத்தால் தின்னவும், எடுத்து வைத்தால் அமுக்கவும் தெரியும்'' என்ற பழமொழியாளரின் வாக்கிற்கேற்ப இத்த கையவன் எதிர்காலத்தில் தனக்கும் உதவான், பிறருக்கும் உபயோகப்படமாட்டான். சமூகத்தில் நலிவுற்று அன்ன சத்திரத்திலே பொழுதைப் போக்கும் ஆண்டியாகவோ, அல்லது கள்வனாகவோ மாறி அடிக்கடி அரச விருந்தாளி யாக இருக்கவேண்டிய நிலைக்கு ஆளாவான்.

நடந்த கால் சீதேவி இருந்த கால் மூதேவி

என்பதில் இருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது ''முயற்சி திருவினையாக்கும்'' ''முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்'' ''பாடுபட்டவன் பட்டத்துக்கு இருப்பான்'' கையில் உள்ளதை வைத்து எவ்வளவு காலத்துக்கு வாழ முடியும். கைப்பொருள் இழந்தபின் கடன்காரனாகி கடன் திருப்பிக் கொடுக்கமுடியாத வேளையில் நாணயம் அற்ற மனிதனாகிறான். தொல்லைமேல் தொல்லை வந்து சேரும். மனக்கவலை உடலையும், உள்ளத்தையும் வாட்டும். வீடு வெறுமையடையும். சீதேவி வாழ்ந்தவிடம் மூதேவியின் உறைவிடமாகிவிடும். பசி வாட்டும். குடும்பத்தில் நிம்மதி இருக்காது. கட்டிய மனைவி கூட வெறுப்பாள். சமுதாயம் அவமதிக்கும். இத்தனையும் முயற்சியின்றி இருந்தமையின் பெறுபேறே.

முயற்சி செய்பவன் இன்று இல்லாவிட்டாலும் நாளை யாவது சீதேவியைத் தேடிக்கொள்வான். சீதேவி வந்த டைந்தால் அஷ்ட ஐசுவரியங்களும் வந்தடையும். அவனது அகத்திலும், புறத்திலும் சீதேவி திருநடனம் புரிவாள். சமுதாயம் அவனுக்கு மதிப்பளிக்கும். செல்வாக்குப் பெருக் கெடுக்கும். பெருமையும், புகழும் தேடிவரும்.

அறக்கப் பறக்கப் பாடுபட்டும் சிரட்டையும் கஞ்சியும். இந்த நிலைமை சிலரது வாழ்க்கையில் சர்வசாதாரணமாக இடம் பெறுகின்றது. காரணம் என்ன? கூலி கிடைப்பது

குறைவா? கிடைப்பதைப் பக்குவப்படுத்தி வரவுக்குத்தக்க வாறு செலவுசெய்யத் தெரியாமையா? இரண்டு நிகழ்வு களும் ஏதுவாகலாம்.

ஒரு சிலர் சமுதாயத்தில் நெகிழ்ந்தவர்களைப் பார்த்து வேலைக்கு அமர்த்திக் கொள்வர். அவர்களை வாட்டி வதைத்து வேலை வாங்குவர். வேலை செய்து முடிந்தபின் கூலிக்கு கடன் சொல்வதும், அற்பசொற்பமாகக் கூலி கொடுப்பதுமுண்டு. கையில் கிடைத்ததைக் கொண்டு குடும்பச் செலவைச் சமாளிக்கும் பொழுது, பிள்ளைகள் உண்டபின் சிரட்டைக் கஞ்சிகூடக் கிடைப்பது மிகக் கஷ்ட மாகவே இருக்கும்.

வேறு சிலர் எவ்வளவுதான் உழைத்தாலும் திட்டமிட் டுத் தங்களது வரவுக்கு ஏற்றவாறு செலவு செய்யப் பழகிக் கொள்ளாமையினால் சிரட்டையும் கஞ்சியுமாக சதா வாழு கின்றார்கள்.

உழைப்பனவால் மிஞ்சாது; ஒறுப்பனவால் மிச்சம் பிடிக்கலாம் என்ற உண்மையை உணராதவர்கள், அதிலும் அன்றாடம் உழைத்துச் சீவிப்பவர்கள், ''அறக்கப்பறக்கப் பாடுபட்டாலும் தமது செயல்களால் என்றும் சிரட்டையும், கஞ்சியும்'' தான் தஞ்சமென இருக்கவேண்டியிருக்கும்.

வருவாய் குறைந்த குடும்பங்கள் சில நல்ல வசதி படைத்தவர்களைப்போல ''கண்ட பாவனையில் தாமும் கொண்டை முடிக்கப் போய்'' வாழ் நாள் முழுவதும் கடன் பழுவுடன் வாழுகின்றார்கள். இந்த நிலையில் இருந்து எமது சமுதாயத்தை மீட்சி பெறச் செய்யவேண்டுமேயா னால் வீண் ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பதுடன் திருமண வீடுகளிலும், மரண வீடுகளிலும், பொது வைபவங்களி லும் தேவையற்ற முறையில் அனாவசியமாகச் செலவு செய் செய்வதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது சிறந்த வழியாகும்.

கோமுட்டியைப்போல கோவணத்துண்டி வாழ நினைப்பது தன்னைத்தானே அழிக்கும் தற்கொலைக்கு ஒப்பான செய லாகும். விரலுக்கு ஏற்ற வீக்கமாக இருப்பதே என்றும் நன்மை பயக்கும்.

இறகு முற்றிப் பறவையானால்
எல்லாம் தன் வயிற்றைத் தான் பார்க்கும்.

பார்க்கும் என்ற வினைமுற்றுச் சொல் இத்தப்பழமொழி வாக்கியத்தினை மிக வலுப்படுத்தி நிற்கின்றது. இந்த நிகழ்வு உண்மை. பறவை பகுத்தறிவு அற்றது. இறகு முற்றிக் கூட்டை விட்டுப் பறவைக் குஞ்சுகள் பறந்ததும் தாம் சுயாதீனமாக வாழ்கின்றன. இது இயற்கை நியதி என்று கூடக் கூறலாம். ஆனால் மனித சமுதாயத்தைச் சாடி நிற்கும் பொழுது இந்தப் பழமொழி எதைப் புகட்டு கின்றது?

பெற்றுப் பேணி வளர்த்து சமுதாயத்தில் தம் பிள்ளை களை நடமாட விட்டிருக்கும் தாய், தந்தையர்களையும், பிள்ளைகளையும் தான் சாடி நிற்கின்றது. பெற்ற பிள்ளைகளை, வளர்த்தெடுக்கப் பெற்றோர் தம் வாழ்நாளில் பெரும் பகு தியை அவர்களுக்காகவே செலவு செய்கின்றனர். அதனால் பல தொல்லைகளை அனுபவித்திருப்பர். எதிர்காலத்தில் பிள்ளைகள் தமக்கு உறுதுணையாக இருப்பர் என்ற நம்பிக் கையும் வைத்துச் செயற்பட்டிருப்பர். இதுவே மனித சமு தாய அமைப்பு. அதன்படி வயோதிபர்களாகும் பெற்றோர் களைப் பேணிக் காக்கவேண்டிய கடமைப்பாடு உடையவர் கள் பிள்ளைகள். இதை மறந்து சில பிள்ளைகள் பழமொழி யாளர்களின் கூற்றுக்கிணங்க ''இறகு முற்றிப் பறவை யானால் எல்லாம் தன் வயிற்றையே பார்க்கும்'' என்ற தன்மைக்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றனர் என் பது உண்மைதான். பலர் தமது பெற்றோர்களினது கட மைகளை இறுதி வரை செய்து வருவதையும் கண்ணாரக் காண்கின்றோம். இந்த உண்மையையும் பழமொழியாளர்கள் அன்றே உணர்ந்துள்ளார்கள் என்பதைப் ''பெற்றதெல்

லாம் பிள்ளையா? இட்டதெல்லாம் பயிரா?'' என்ற பழமொழியை எடுத்து நோக்குவதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

ஒரே கரத்தில் உள்ள ஐந்து விரல்களும் ஒருமித்து இருந்தாலும் உருவத்திலும், செயற்பாடுகளிலும் வேறுபடுவதை ஒவ்வொரு விநாடியும் காண்கின்றோம். ஆனால் அதையிட்டு அதிகளவில் பிரமாதப்படுத்துவதில்லை. அவ்வாறே ஒரு வயிற்றில் பிறந்த பிள்ளைகளில் வேறுபாடு அமைவதில் ஆச்சரியப்படவேண்டியதில்லை. அந்தப் பிள்ளைகள் புகுந்து கொண்ட குடும்பங்களின் சமூக ஈடுபாடுகள் நல்ல பாதையிலும், கெட்ட பாதையிலும் இட்டுச் செல்லுகின்றதென்பது மட்டும் உண்மை.

எனவே பிள்ளைகளை மட்டும் முழுதாகப் பெற்றோர்கள் தமது வயோதிப வாழ்வுக்கு நம்பியிராமல் தமது கையிலும் செல்வாக்கோடு இருப்பது நன்று.

சமூகத்தில் ஒரு சிலரிடம் பணம் இருக்கும். ஆனால் அதனை மற்றவர்களுக்குக் கொடுத்துதவும் மனம் இருக்காது. ஆனால் மற்றவர்களின் பழிச் சொற்களுக்குப் பயந்து பெற்றோர்களுக்கு உதவி செய்ய முற்படும் நேரத்தில் புகுந்த வீட்டில் தடையிருக்கும்.

ஒரு சிலரிடம் பணமிருக்காது. ஆனால் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற நல்ல மனமிருக்கும். அதுவும் பெற்றோர்கள் இன்னற்படுகிறார்கள் என்பதைக் கண்டால் தன்னையும் தன் குடும்பத்தையும் எதிர்நோக்காமல் கடமைகளைக் கடன்பட்டாவது செய்து முடிப்பர்.

புகுந்த வீட்டுக்கு அடிமைப்படாத ஆண்பிள்ளைகள் ஒரு சிலர் தமது பெற்றோர்களைக் கடைசிவரை கைவிடாது பேணிக்காத்து வருவதையும் சமூகத்தில் காணலாம்.

பணம் நிலையற்றது. இன்று இருக்கும் நாளை இராது. அத்தகைய நேரத்தில் மனமிருந்தாலும் வசதியில்லாது இருந்தால் பெற்றோர்களை எப்படிக் கவனிக்க முடியும்? எதற்கும் பிள்ளைகளை மட்டும் நப்பியிருக்க முடியாது. எனவே என்றும் எம் கையை நாம் வெறும் கையாக வைத்திருக்கக் கூடாது. கையிற் பணமிருந்தால் காலடியைச் சுற்றிப் பலர் நிற்பர்.

# 16

# செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்

ஆ. ஜெயகாந்தன்

செட்டிகள் தமிழ் மக்களிடையே தனியாகத் தமக்கென ஒரு இனம் வகுத்து வாழ்ந்துவரும் பகுதியினர். பொதுவாக செட்டியார் என்றதும் பெரியதோர் தனவந்தன் என்று கருதப்படுகின்றது.

செட்டிய மக்கள் சிறுசிறு கூட்டமாக இலங்கையில் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இற்றைக்கு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இவர்கள் தமக்கென தனியான ஒரு நிலைப்பாடு உடையவர்களாகத் தாம் வாழும் பகுதிகளில் இந்துமத ஆலயங்களை, பாடசாலைகளை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு செட்டித்தெரு சிவன் கோவில், வண்ணைச் சிவன் கோவில், வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், பெருமாள் கோயில் என்பன இவர்கள் நிறுவியுள்ள குறிப்பிடத் தக்க முக்கிய ஆலயங்களாகும்.

கொழும்பு வாழ் செட்டிகளில் சிலர் பணத்தை வட்டிக்கு முதலீடு செய்வதில், கடல் வர்த்தகத்தில் அதிக அளவில் ஈடுபாடு உடையவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர். கொழும்பு நகரில் உள்ள பெரிய வைர ஆபரண மாளிகைகள் இவர்களினது கையிலேயே இருந்துவருகின்றன.

இன்று இவர்கள் இலங்கைவாழ் சகல மக்களோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மேற்கு, நல்லூர், பூநகரி, வேலணை, சுழிபுரம், மட்டுவில் ஆகிய இடங்களில் சில செட்டிய குடும்பங்கள் நெடுங்காலமாகவே வாழ்ந்து வருகின்றன. இவர்கள் முன்பு மிக நைத்திய சைவர்களாக குடும்பவுறவிலேயே திருமணங்களையும் செய்து தனித்துவமான வாழ்க்கையை நடைமுறைப்படுத்தி வந்தனர். ஆனால் இன்று காலப் போக்குக்கேற்ப தமது தனித்துவத்தையும், நைத்தியமான வாழ்க்கை முறையையும் தளரவிட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்கும் கொழும்பு வாழ் செட்டி மக்களுக்குமிடையே எவ்வித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனைக்கோட்டையிலும் யாழ்ப்பாணம் கொட்டடியிலும் ஒரு சில செட்டிய குடும்பங்கள் வாணிபத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தாலும், சிலர் எண்ணெய் ஆலைகளை நிறுவி இயக்கி வருகின்றனர். யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலைச் சூழவுள்ள பகுதிகளில் ஒரு சில செட்டிய குடும்பத்தினர் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இவர்களின் பிரதான தொழில் நெசவாகும். இச் செட்டி குடும்பத்தினர் தாம் தென்னிந்தியாவிலுள்ள பட்டுக்கோட்டை நகரில் இருந்து வந்து குடியேறியவர்கள் எனக் கூறுகின்றனர்.

### செட்டி நட்டம் ஊர் மேலே

செட்டி பெரிய முதலீடு செய்து தன் தொழில்களை இயக்குபவர். நட்டம் அடைந்தவன் பெரிய முதலாளி. முதலாளிக்கு ஒரு முறை நட்டம், பலமுறை இலாபம் கிடைக்கும். ஆனால் நட்டத்தைப் பற்றிய பேச்சு வெளியில் வரும். இலாபத்தைப் பற்றிய பேச்சு யாருக்குமே தெரிய வராது. இது பொதுவான இயல்பு. வணிகத்தில் சிலகால் நட்டம் ஏற்படலாம். இதனால் செட்டிக்கு ஏற்பட்ட நட்

டம் ஊர்மேலே என்று மிக அழுத்தம் திருத்தமாகக் கூறி வைத்துள்ளனர். மறுமுறைகளில் நுகருவோர் மேல் வரிக ளாகவும் விலைகளைக் கூட்டியும் விற்பதினுல் செட்டி தனது நட்டத்தை ஈடுசெய்து கொள்ளுகின்ருர்.

**கெட்டாலும் செட்டி செட்டியே;**
**கிழிந்தாலும் பட்டுப் பட்டே.**

இந்த நிலைமை ஏற்படும் நேரத்தில் சிறிதளவு தளர்வு ஏற் படலாம். பெரிய தனவந்தனை செட்டி கொஞ்சம் பண நிலைமையில் மாறிவிட்டால் கையில் உள்ளதிலிருந்து பழைய நிலைக்கு வரவே முயல்வான். அதை விட்டு செட்டி என்ற பெயருக்கு மாசு வர விடவே மாட்டான். அவ்வாறே பட்டும் பட்டுத்தான். பட்டு கிழிந்து போனுல் பாவனைக்கு உதவாமலிருக்குமே ஒழிய பட்டு என்ற பெயரிலேயிருந்து மாற்றம் அடையாது. அதுவும் சரிகை உடைய பட்டுத் துணியாகவிருந்தால் சரிகைக்காக கிழிந்த பின்பும் விலை போகும்.

**எண்ணிச் செய்கிறவன் செட்டி;**
**எண்ணுமற் செய்கிறவன் மட்டி.**

ஆனுல் செட்டி ஒரு கருமத்தைச் செய்யமுன் நன்கு அலசி ஆராய்ந்து, காலமறிந்து, இடமறிந்து, முதலறிந்து, இலாப நட்டம் கணக்கிட்டு, அதன்பின்பே காரியத்தைச் செய்யத் துணிவான் – செய்வான் – வெற்றி காண்பான். இதனு லன்றே **"செட்டிக்கும் மட்டிக்கும் ஜென்மப் பகை"** என்ற பழமொழியும் காணப்படுகிறது போலும். இலாபத்தைக் கருத்தில் கொண்டு வாழும் சுபாவமுடையவன் செட்டி.

**செட்டிக்கு வேளாண்மை ஜென்மத்துப் பகை.**

ஆதாயத்தைக் கருத்தில் கொண்டு கருமங்களை ஆற்று பவர்கள் எப்படி ''வாய்ப்பான பிழைப்பான'' கருமத்தைச் செய்யத் துணிவார்கள். விதைத்து, அறுவடை செய்யும் வரை முதலீடு செய்ய வேண்டிய பணத்தையும் முயற்சி யையும் கணக்கிட்டுப் பார்த்த பிற்பாடு இதனை வெறுத்

திருக்கலாம். ஆனால் பூநகரி, கொழும்புத்துறை வாழ் செட்டி மக்களில் அனேகர் விவசாயம் செய்து வருவதை இன்றும் காணலாம். இவர்களில் சிலர் அரசாங்க உத்தியோகமும் வகித்து வருகின்றனர்.

செட்டி மிடுக்கோ சரக்கு மிடுக்கோ
மிடுக்கன் சரக்கு இருக்க விலைப்படும்

என்பனவையும் பழமொழிகளே. பாவனையாளனுக்கு வேண்டிய சரக்கை ஒரு செட்டி மட்டும் கையிருப்பில் வைத்திருக்கும்பொழுது, சரக்கும் மிடுக்குப் பெறும். செட்டியும் மிடுக்கனாக இருப்பான்.

ஆதாயமற்ற செட்டி ஆற்றைக் கட்டி இறைப்பானா?

என்று வினாவாக எழுப்பப்பட்டிருக்கும் பழமொழியை எடுத்து நோக்கும்பொழுது, ஆற்றைக் கட்டி நீரை இறைக்கும்பொழுது, ஆதாயமற்ற வேலையென்றால் செட்டி செய்யவே துணிந்திருக்க மாட்டான். அதுவும் நவீன யந்திரங்களைக் கொண்டு கூட இன்று இலகுவில் செய்து முடிக்க வியலாது. அத்தகைய வேலையை அன்று செய்தானென்றால் பெரியளவான ஆதாயம் கிடைக்கும் என்ற துணிவே.

செட்டியாருக்கு ஒரு காலம் சேவகனுக்கு ஒரு காலம்.

மேடு பள்ளமாகும்; பள்ளம் மேடாகும். காலம் மாறி மாறி வரும். பெரியவன் கஷ்டப்பட, கஷ்டப்பட்டவன் பணக்காரனாக மாறி இராசநடை போடலாம். இது காலம் செய்யும் கோலம். அன்றி தன்னுடைய இடத்தில் தான் பெரியவன்.

செட்டி வீட்டில் பணமிருக்கிறது;
ஆலமரத்தில் பேய் இருக்கிறது.

பணம் செட்டி வீட்டு இரும்புப் பெட்டியில் முடங்கிக் கிடக்கிறது. அதேபோல களைத்து வேர்த்து வருபவர்களுக்கு நிழலைக் கொடுக்கும் ஆலமரத்தில் பேய் குடி கொண்டு

இருக்கிறது. எனவே செட்டி வீட்டுப் பணமும் பேய் குடி கொண்டிருக்கும் ஆலமரநிழலும் மனித சமூகத்துக்கு ஆபத்துக்கு அதாவது தேவையான நேரத்தில் உதவ மாட்டாது என்பதை பழமொழியாளர் அன்றே அறிவுறுத்தியுள்ளனர்.

செட்டி படை வெல்லுமா? சேற்றுத் தவளை கடிக்குமா?

முருக்குப் பருத்தும் தூணுக்கு உதவாது.

என்றவாறே தாமுண்டு தமது பணமுண்டு என்று வாழு பவரிடம் நெஞ்சில் உரமிருக்காது. அவ்வாறே தவளையும் சேற்றில் புதையுண்டு ஆட்டமோட்டமில்லாது வாழ்ந்து வருவது. கடிக்கும் சுபாவம் அற்றது. செட்டியார் காசுக்கு படை வந்தால் படை வீரர் வீணில் சாக விரும்பமாட்டார்கள். சாகத் துணிவற்ற படை எப்படி வெற்றி பெறும்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாது. குலவித்தை கற்றுப் பாதி, கல்லாமல் பாதி. எனவே செட்டிப் பிள்ளையோ, கெட்டிப் பிள்ளையோ என்று கூறியுள்ள பழமொழி மூலம் நாம் தெரிந்து கொள்ளக் கூடியது, அந்தப் பிள்ளை மிகச் சாதுரியமாகவும் சிக்கனமாகவும் கணக்குப்பிழையின்றியும் பணத்தைக் கையாளும் முறையிலிருந்து யார் பிள்ளை என்பதை அறிந்து கொள்ள முடியும். இத்தகைய குணபாவங்களுடைய ஒரு பிள்ளை செட்டியப் பிள்ளையாக இருக்கவேண்டும்; இல்லையேல் கெட்டிக்காரப் பிள்ளையாகவிருக்க வேண்டும்.

மரணம் வாழ்வின் இறுதி. மரணத்தில் தான் ஒருவனது வாழ்நாள் செயல்கள் அம்பலத்துக்கு வரும். பலரும் பல கதைப்பார்கள். சுடலை ஞானம் படலை மட்டும், ஆனால் மரண வீட்டில் பொது மக்கள் நடக்கும் நடையிலிருந்தே இறந்தவர் மனித சமூகத்துடன் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை எடைபோட்டுக்கொள்ள முடியும்.

செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்

செட்டியார் தானுண்டு தன் தொழிலுண்டு என்று வாழ்ந்து வந்தால் பணம் கொடுத்துத்தான் பந்தற்கால் கூட

நடவேண்டிய நிலைமை இருக்கும். பணம் வரும் போகும். ஆனால் பிற மனிதர்களுடைய மதிப்பையும், செல்வாக்கை யும் நாம் நடக்கும் நடையாலேயே தேடிக்கொள்ளுகின்றோம் என்பதை மரணவீட்டில் இருந்தே நன்கு அறிந்துகொள்ள லாம். அறியும்பொழுது நாமே நம்முள் இறந்தவரையிட்டு நன்கு கணக்கிட்டுக் கொள்ளலாம்.

சமூகத்தில் வாழ்ந்து இறக்கும் ஒருவனை அவனது மர ணத்தில் பங்கு கொண்ட மக்களைக் கொண்டு கணக்கிட் டுக் கொள்வதால் எந்த விதப்பலனும் ஏற்படப் போவ தில்லை. ஆனால் வாழும் காலத்தில் அவனது தவறை அவனே உணர்ந்து கொள்ளத்தக்கவாறு நாம் நடந்து கொள்ள முன்வரவேண்டும். அதுதான் மனிதப்பண்பு.'

அதை விடுத்து தவறு புரிபவர்களை நேருக்கு நேர் தட்டிக் கேட்க வக்கற்றவர்கள், ஒருவனைப் போகவிட்டு புறம் சொல்வதும், இறந்த நேரத்தில் மனக்குரோதங்களை எடுத்து பெரிதாக்கி மரணவீட்டுக்குப் போகாது விடுவதும் மிக அருவருக்கத்தக்க ஒரு செயலாகும்.

செட்டியின் தொழிற் தொல்லைகள் அவனுக்குத்தான் தெரியும். அதனால் அவன் மரணவீட்டுக்கு சமூகம் கொடுக்க முடியாத நிலைமைக்கு ஆளாகியிருப்பான்.

அதைப் பெரிதாக்கி அவரது தொழிலோடு சம்பந்தப் படுத்தி 'செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு' எனப் பழமொழியாளர்கள் கூறி வைத்திருப்பது ஏனோ? புரிந்து கொள்ள முடியாதிருக்கிறது.

இன்று நம்மில் சிலர் ஆளைப்பார்த்து சுயதேவைகளை அந்த வீட்டில் இருக்கும் மற்றவர்களின் உறுதுணைகொண்டு இலகுவில் செய்து முடிப்பதற்காக ஓடியாடிப் பாடுபடுபவர் களாக நடப்பதைக் காண்கின்றோம்.

மனிதன் பகுத்தறிவுள்ளவன். சிந்தனையில் மற்றவன் செய்த தவறுகளை எடுத்து வகுத்துப்பாராமல் துன்ப நேரத்தில் துணைநின்றுதவ முன்வரவேண்டும்.

17

# மாமி உடைத்தால் மண்கலம்! மருமகள் உடைத்தால் பொன்கலம்!

கல்வி கேள்வியிலும் சமூக ஊசாட்டத்திலும் நம் தமிழ்ப் பெண்கள் மிகப் பின்தங்கிய காலத்திலேயே இந்தப் பழமொழிகள் உதயமாகின. அக்காலத்தில் குடும்பங்களின் அதிகாரப் பொறுப்புக்களை வயதில் முதிர்ந்த ஆண்களே ஏற்று வழி நடத்தி வந்திருக்கின்றனர். பெண்களின் அந்தரங்கமான பாதுகாப்பான விடயங்களில் வயதில் மூத்த பெண்மணிகள் தலையிட்டு வழிகாட்டி வந்துள்ளனர். எனவே அதிகளவில் வயதில் முதிர்ந்தோர் மற்றையவர்களால் கணிக்கப்பட்டு வந்தனர். அவர்கள் கூற்றே குடும்பங்களை வழிகாட்டியதுடன் சமூகக் கோட்பாடுகளை அமைப்பனவாகவும் இருந்தன. ஏனையோர் அவற்றை சிரமேற்கொண்டு சமுதாயப் பாரம்பரிய நிலைப்பாடுகளுக்கமைய வாழ்ந்தும் வந்திருக்கின்றனர்.

எந்த வகையிலும் மாமியாகிய பெண், மருமகளை விட அதிகாரம் உடையவளாக இருந்திருக்கிறாள். அதனால் அவள் தன் அதிகாரங்களை இன்னொரு பெண்ணாகிய மருமகள் மீது அதிகளவில் பிரயோகிக்கக்கூடிய வாய்ப்பு பண்டைய காலத்தில் நிலைபெற்றிருந்திருக்கிறது என்பதைப் பழமொழியாளர்களின் கூற்றில் இருந்து தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

வந்தாற்போல் மாமி பந்து அடித்தாள்,
வர வர மாமி கழுதை மேய்க்கிறாள்.

பழகப் பழகப் பாலும் புளிக்கும்

ஆரம்பம் நல்லது. காலப்போக்கில் பழகப்பழக ஒருவரது செயற்பாடுகளைக் காணவும், தெரிந்து கொள்ளவும், மற்றையவர்களிடம் இருந்து அறிந்துகொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. மருமகள் புதிதாக வந்த காலத்தில் மாமியும் மருமகள் மீது பாசாங்குக்காவது பரிவுடன் நடந்து வருவாள். இது மனித இயல்பு. நாட் செல்லச் செல்ல மாமியார், மருமகள் செய்யும் சிறிய தவறை எடுத்து "துரும்பைத் தூணாக்கி" அவள்மேல் கழுதை மேய்க்கத் தொடங்கி விடுவாள்.

சென்ற சில வருடங்களுக்கு முன் தானும் ஒரு வீட்டு மருமகளாகவிருந்ததை மறந்து விடாமல், தான் தனது மாமியிடம் பெற்றுச் கொண்ட பாரிய உபத்திரவச் சுமைகளைப் பாடமாக ஒப்படைக்க வேண்டுமென்ற மன நோக்கோ... ?

அன்று என்னை என் மாமி அதிகாரம் செய்தாள்.
இன்று நான் எனது மருமகளை அதிகாரம் செய்கிறேன்.

இவ்வாறு நடந்து கொள்வது பாரம்பரியக் கடமையென்ற நினைப்போ ?

அன்றி தான் மருமகளாகவிருந்த காலத்தில் தனது மனத்தில் பதிந்த வேதனை நினைவுகளை மறவாத இன்றைய மாமி, எதிர்காலத்திலாவது தன்னுடைய மனம் சாந்தி அடையப் புரியும் மனோதத்துவக் கோளாறோ ?

எது சரியெனக் கூறமுடியாத ஒரு தொடர்கதையாக மாமி மருமகள் பற்றிய தகராறுகள் பல நூல்களிலும், நாடகங்களிலும் இடம் பெற்றிருப்பது ஒரு விடயமாகும்.

மாமியார் உடைத்தால் மண்கலம்
மருமகள் உடைத்தால் பொன்கலம்

மாமியும் சரி, மருமகளும் சரி, தாம் உபயோகிக்கும் பொருட்களைத் தவறுதலாகக் கைதவறவிடுவதால், அவை நிலத்தில் விழுந்து உடைவது சகஜம், ஆனால் ஆண் மகனின் தாய், வீட்டிற்கு வந்திருக்கும் மருமகளின் ''எஜமானி'' என்ற நினைவுகொண்டிருக்கும் மாமி உடைத்தால் அந்தப் பொருள் எத்தகைய பெறுமான முடையதாக இருந்தாலும், அது மண்கலம். தேவையற்றது. பெறுமானம் குறைந்தது.

அதையே மருமகள் உடைத்தால் ''பெறுமானம் மிக்கது. தேடினாலும் வாங்கக் கிடைக்காது, யானை விலை குதிரையுடையது'' என மாமி வாதிட்டு மருமகளின் உள்ளத்தை நோகவைப்பாள், ''ஊதாரி ஒருத்தி என் மகனுக்கு வந்து கிடைத்தாளே'' எனப் பேசி சிறிய விடயத்தைப் பெரியதோர் மலையளவாக்கி குடும்பத்தில் தேவையற்ற மனக் கசப்பை ஏற்படுத்தி வைப்பாள். இதனால் கணவன் மனைவி உறவிலும் சில கால் தேவையற்ற குரோதங்கள் ஏற்படவும் கூடும்.

வயது முதிர்ந்தவர்கள் அனுபவமிக்கவர்கள் குடும்பத்தைச் சீர்குலைப்பதைவிடுத்து பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு வழி அமைக்கவேண்டும். அதுவே பொறுப்புள்ள பெற்றோர்களின் கடமை. அதை விடுத்து மாமியாகிய நான் உடைத்தால் மண் பெறுமதி; தன் மகனின் மனைவி அதாவது மருமகள் உடைந்தால் பொன் பெறுமதி என்று வாதிடும் ஆண்களே ஏற்று வழி நடத்துவது நியாயமா? நீதியா?

மகனின் வாழ்விலும் தாழ்விலும் மருமகள் சமபங்காளி என்பதைச் சற்றும் மாமி உணர்ந்து நடக்கத் தெரியாதவள் என்றால், மருமகள் வாழ்வில் மகிழ்ச்சி ஏது? நிம்மதிதான் கிடைக்குமா? என்றும் அவள் ''கண்ணீரும் கம்பலை'' யுமாகத் தானே தம் வாழ்வை ஓட்டுவாள். மனக்கவலை மனித வாழ்வைச் சீரழிக்கும். தனது கணவனது கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாது தத்தளிப்பாள். பிள்ளைகளைக் கூடச் சீராகவும், சிறப்பாகவும் கவனிக்க முடியாது

துயருறுவாள். இதனால் மாமி, மருமகள் உறவில் நீண்ட இடைவெளி நாளுக்கு நாள் ஏற்பட்டுக் கொண்டே வரும்.

வளர்ந்து வரும் மனக்குரோதங்கள் மருமகளின் உள்ளத்தில் மிகக்குறுகிய எண்ணங்களை உதயமாக்கும் என்பதைப் பழமொழியாளர் கூறாமல் விடவில்லை.

மாமியார் சாகாளோ என் மனக்கவலை தீராதோ.

மாமியார் செத்த ஆறும் மாதம்
மருமகள் கண்ணில் கண்ணீர் வந்தது.

மருமகளின் உள்ளத்தை மிக அருமையாகப் படம் பிடித்துக்காட்டி இருக்கின்றன இந்த இரண்டு பழமொழிகளும்.

மருமகள் மாமியாரின் கொடுமையினால் உளம்நொந்து வேதனைப்பட்டாலும், தங்களுக்குப் பிறந்த பிள்ளைகள் மேல் வைத்திருக்கும் பாசத்தினால் பொறுமையைக் கடைப்பிடித்து ஒருவாறு குடும்பத்துடன் ஒத்து வாழ்ந்து வருகின்றாள். இருந்தாலும் அவளினது உள்ளத்திலே இத்தகைய கோர எண்ணங்கள் உருவெடுத்துக்கொண்டிருப்பதில் தவறுமில்லை. இளமையைச் சுவைத்து இன்பமாகக் கூடி வாழ வேண்டியவள், சதா துன்பக் கடலில் நீந்த வேண்டியிருந்தால், ''மாமியார் சாகாளோ; என் மனக் கவலை தீராதோ'' என வாயாற் கூறவிட்டாலும் உள்ளத்தில் நினைவு கொள்வாள் என்பது உண்மைதான். மாமியும் தான் ஒருகால் மருமகளாக இருந்த காலத்திற்கூட இத்தகைய நினைவையே கொண்டிருப்பாள்.

உள்ளத்தில் ஒருவர் மேல் பாச பந்த மிருந்தாற்றான் மரணவேளையில் மனமுருகிக் கண்ணீர் வரும். இல்லாவிட்டால் ஆறுமாதமல்ல, அறுபது மாதம் சென்றாலும் ஒரு துளி கண்ணீர் கூட விடமுடியாது இருக்கும்.

அதிகமாக பெண் வாழ பெண் பொறுக்க மாட்டாள்.
பெண்கள் கூடினால் சண்டைகள் மலிந்திடும்.

இவ்வாக்கியங்களும் பெண்களின் இயல்பான தன்மைகளை எடுத்துக்காட்டுகின்றன. மாமியும், மருமகளும் இந்தப் பெண்கள் வர்க்கத்தைச் சேர்ந்த ஜீவன்கள் தானே!

மாமியார் வீடு மகா சௌக்கியம்
நாலு நாள் சென்றால் நாய் படாப்பாடு.

இந்தப் பழமொழி பெண்ணாகிய மருமகளுக்கு மட்டுமல்ல, ஒரு சில மருமகனுக்கும் ஏற்புடையதாகும். மருமகனைத் தேடி எடுக்கும்பொழுது சில பெண்ணின் பெற்றோர்கள் இயமகண்ட கலியாணத் தரகர்களை முற்று முழுதாக நம்பி 'மாப்பிள்ளை கிடைத்தாலே போதும்' என்ற நிலைப்பாட்டுடன் ஆராய்ந்து பாராமலே திருமணத்தைத் திடீரெனச் செய்து வைப்பர்.

ஒருசிலநாட் செல்லத்தான் மருமகனது, நடை, உடை, பாவனை, படிப்பு, வருவாய் என்பனவற்றை உள்ளதையுள்ளவாறு தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பெண் ஒருத்தி சீதனமற்று மருமகளாக வரும்பொழுது அன்று அதைக் கேட்காதவர்கள் காலப்போக்கில் தமக்கு பொருளாதார இடைஞ்சல் ஏற்படும் காலத்தில் சீதனத்தையிட்டுப் பேசி மருமகளின் உள்ளத்தை நோகவைப்பர்.

ஒரு சில ஆண் மக்கள் "சீதேவி நாச்சியார் கிடைத்தாலே போதும்" என்ற நோக்குடன் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். காலப்போக்கில் கேட்பார் சொற்கேட்டுச் சீதனம் என்ற பிரச்சினையை எழுப்பி ஏழைப் பெண்களை நாய்படாப்பாடு படுத்தி விவாகரத்து வரைபோய் நிற்கின்றனர். மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட கண்ணியமான ஆண்மகன், மற்றவர்களின் சொற்கேளாது "தாய்க்குப்பின் தாரம்" என்ற தாரக மந்திரத்தை ஏற்று கட்டிய மனைவியைக் கைவிடாது வாழுகின்றான். இதனால் மாமியும் தன் கொட்டமடங்கி தானும் தன் வேலையுண்டு என வாழத்தலைப்படுகின்றாள். குடும்பத்தில் அமைதி நிலவுகின்றது. பிறக்கும் பிள்ளைகளும் சீராகவும் சிறப்பாகவும் வாழுகின்றனர்.

ஒரு குடும்பம் நல்ல அமைப்புப் பெருவிட்டால், எதிர் காலச் சந்ததியினராகிய பாலர்களின் வாழ்வு பல வழிகளி லும் பாதிப்படையும். ஆகவே இத்தகைய நிலைமை ஏற் படாமல் வீட்டில் உள்ள வயது முதிர்ந்தவர்கள் யாவரும் கவனமெடுக்க வேண்டியது அவர்களது தலையாய கடமை யாகும். இதனை மாமியார் நன்கு புரிந்து கொண்டால் மாமி, மருமகள் உறவிலும் நல்ல நிலைப்பாடு ஏற்படும்.

இன்று கல்வி வளர்ச்சியாலும் சமுக ஊசாட்டத்தின் அதிகரிப்பினுலும், வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் தொடர்புகளினுலும் சமூக வாழ்விலும், குடும்ப வாழ்வி லும் கூட பல மறுமலர்ச்சிகள் ஏற்பட்டு வருவதை நாம் காண்கின்றேம். அதில் ஒன்று மாமி, மருமகள் ஒருமைப் பாடு. மாமியை மருமகளும், மருமகளை மாமியும் புரிந்து கொள்ளுகின்றனர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அதற்கேற்ப வாழ்க்கையை வளமாக்கி வாழுகின்றனர். குடும்ப உறவுகள் பலப்பட்டு நிம்மதியான வாழ்க்கை ஏற் படுகின்றது. மாமியார் சிலர் மருமகளை தாம் பெற்ற பிள்ளைகளைப் பார்க்கிலும் மிக அன்பாகப் பேணி வருகின் றனர். அவ்வாறே மருமகளும் பலர் நடந்து வருகின்றனர். இவை இன்றைய காலகட்ட நிகழ்வுகளாகும்.

மாமியார் மெச்சிய மருமகள் இல்லை;
மருமகள் மெச்சிய மாமியார் இல்லை.

இதுவும் பழமொழிகளில் ஒன்று. முற்று முழுதாக அன்றைய நிலைப்பாட்டில் எழுந்தது. இன்று இது முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல. ஆனுல் இன் றும் மாமி, மருமகள் சண்டையால் சில குடும்பங்கள் சீரழிந்து போவது உண்மை. வாழப் பிறந்த நாம் பொறுமையைக் கடைப்பிடித்து வாழப் பழகிக்கொண் டால் அமைதியான நல்ல குடும்பங்கள் உதயமாகும். நற் செயல், நற்பண்புகள் எம் சமூகத்தில் எமது ஊரை—ஏன்? எங்களது நாட்டையே நல்லதாகக் கட்டி எழுப்ப வழி காட்டியாக அமையும்.

# 18

# ஈரூரில் உழுதவனும் கெட்டான்! இரண்டு பெண்டாட்டிக்காரனும்......

ஆ. ஜெயகாந்தன்

ஒருவனுக்கு ஒருத்தி. இந்த நியதி ஒழுக்கவரம்புக் குட்பட்டது. தமிழர் சமுதாயம் அன்று வகுத்துக்கொண்ட வாழ்க்கைத் தத்துவமிது. திருமணம் சொர்க்கத்தில் நிச்ச யிக்கப்படுவது என நம்பிக்கை கொண்டு நம்மவர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

ஒருவன் ஆண்டவன் சந்நிதியில் பெண்ணின் கழுத் தில் மஞ்சள் கயிற்றையாவது கட்டி தமது பிணைப்பை வலுப்படுத்தி வெளிப்படுத்துவர். வேறுசிலர் பந்தல் அமைத்து, பலரை வரவழைத்து, அந்தச் சபையின் நடுவே குரு வேதமோத சத்திய வாக்குக் கொடுத்து வாழ்விலும், தாழ்விலும் இவளே என் மனைவி எனக்கூறி பொன்னுற்ருலி கட்டிக்கொள்ளுகின்ருர்கள். இத்தகைய சகல பிணைப்புக் களும் எமது ஆண்டவனின் கட்டளைப்படியே நிறைவேறு கின்றன எனப் பேசிக் கொள்வதை நாம் கேட்கின்ருேம்.

நாம், நவநாகரீகம் உடையவர்கள், கல்வி கேள்விகளில் முதிர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் மேலைத்தேசத்த வர்கள் உடலில் உள்ள உடைகளை மாற்றுவதுபோல மின் னுமல் முழங்காமல் திருமணப் பிணைப்பை ஆணும், பெண் ணும் ஏற்படுத்துகின்றனர். அவ்வாறே விட்டுப்பிரிகின்றனர். பின், காலந்தாழ்த்தாமலே வேறு கரம் பற்றிக் கொள்ளு

கின்றனர். இதை அந்த நாடும் சமூகமும் ஏற்றுக்கொள்ளு கின்றன. இதுவே அந்த நாட்டின் பண்பாடு.

தமிழன் தனக்கெனத் தனியான கலை, கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கநெறி கொண்டு வாழ்ந்தவன் - வாழுகின் றவன். அத்தகைய தமிழர் சமுதாயத்தில் பிறந்த சிலர் அன்றும் இன்றும் சொர்க்கத்தில் எழுதியிருந்தாலென்ன! பூலோகம் எதைக் கூறினாலும் எமக்கென்ன? திருமணம் தனியாள் சுதந்திரம். நாம் விரும்பியதைச் செய்வோம்! என வாதாடுவதைக் கேட்கின்றோம். சமுதாயம் பரந்தது. ஆனால் தனக்கென ஒரு கட்டுக்கோப்பை அன்று தொடக் கம் இன்றுவரை ஏற்படுத்தி, நிர்வாகச் சட்டதிட்டங்க ளுக்கும் தேசவழமைக்கும் ஏற்ப நடைமுறைப்படுத்தி வரு வதைத் தெரிந்திருந்தும் அதற்கு மாறாக சிலர் நடந்து கொண்டால் சமுதாய அமைப்பை சீர்குலைத்தவர்கள் என்ற பெயருக்கு இலக்காகின்றார்கள்.

இவற்றைச் சிறிதளவுகூடக் கருத்திற் கொள்ளாமல் தமிழர் சமூகத்தில் பிறந்த சிலர் அன்றும் இன்றும் சமூகக் கட்டுப்பாடுகளை மதிக்காது தமது மனமென்ற குரங்கு ஆட் டும் ஆட்டங்களுக்கு இடங்கொடுத்து, பிற ஏதுக்களுக்கு வயப்பட்டு ஒருவனுக்கு ஒருத்தி என்ற நியதியிலிருந்து விலகி, ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை இல்லக் கிழத்திக ளாக்கி வாழ்ந்திருக்கிறார்கள் - வாழுகின்றார்கள். இத்தகைய வர்கள் இல்லாதிருந்தால் கீழ்வரும் பழமொழிகள் தோற்ற மெடுக்க வேண்டிய அவசியம் அன்று ஏற்பட்டிருக்காது.

இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம்.

இரண்டு ஓடத்தில் கால் வைப்பதா?

ஈரூரிலே உழுதவனும் கெட்டான்
இரண்டு பெண்டாட்டிக்காரனும் கெட்டான்.

இந்த மூன்று பழமொழிகளும் ஒரே கருத்தை வெளிப் படையாகத் தருவனவாக இருந்தாலும் தனித்தனியாக

எடுத்து நோக்கப்பட வேண்டியனவாக அமைப்புப் பெற்றிருக்கின்றன.

''இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம்'' என்ற வாக்கியத்தின் பொருளை நாம் எமது சமூக வாழ்வில் நாளாந்தம் கண்ணாரக் காண்கின்றோம். இரண்டு பெண்களைப் பெண்டாட்டிகளாக்கி வைத்திருந்தால், அதனால் தாங்கொணாத் துன்பத்துக்குள்ளாவது அந்த ஆடவன் மட்டுமல்ல; அவனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கும் பெண்களுமே சதா அல்லற்படுவர்.

எதிரும் புதிருமாக இரண்டு பெண்டாட்டிகளைக் கொண்டிருப்பவன் ஒருகாலை ஒரு வீட்டிலும் மற்றைய காலை மறு வீட்டிலும் வைத்துக்கொண்டு ஓட்ட முடியாது தத்தளித்தால் குடும்பம் என்ற படகு எப்படி நகரும்? சிலகால் இரண்டு படகுகளும் முட்டி மோதிக் கொண்டால் படகோட்டியாகிய அந்த இரண்டு பெண்டாட்டிக்காரன் மிகத் திண்டாட்டத்துக்குள்ளாகி மனித சமூகத்தில் இருதலைக் கொள்ளி எறும்பினைப்போல போக்கற்று மிக அல்லற்படுவான்.

வாலிபப் பருவம் பொறுப்பற்றது. சுதந்திர புருடனாகத் திரிய வாய்ப்பானது. குடும்பப் பிரச்சினைகளை பெற்றோர் கண்காணிப்பர். அதேபோலத்தான் ஒரு கன்னிப் பெண்ணின் வாழ்வும் அமைந்திருக்கும். திருமணத்தின் பின்தான் வாழ்க்கையில் உள்ள சிக்கல்களை உணரத் தொடங்குவர். ஒருவன் ஒருத்தியை வைத்துக்கொண்டே தனது வாழ்க்கைப் படகைச் செலுத்த முடியாது தத்தளிப்பதைக் கண்ணாரக் காண்கிறோம். பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் நேரத்திலும், சிக்கல் மிக்க கருமங்களை நிறைவேற்றக் கஷ்டப்படும் வேளைகளிலும் அனுபவ வாயிலாகவே காண்கின்றோம். கையில் உள்ளதை விற்றுச் சுட்டு குடும்பச் சுமைகளைத் தீர்ப்பதையும், பற்றுக்குறைக்குக் கடன்காரனாகித் தாங்கொணாத் துன்பத்தை அனுபவிப்பதுமுண்டு. அத்தகைய இந்தக்காலத்தில் ''ஈரூரில் உழுதவனும் கெட்

டான்; இரண்டு பெண்டாட்டிக் காரனும் கெட்டான்" என்ற பழமொழிக் கூற்றின்படி அனுபவரீதியாகக் கண்டிருக்கின்றனர் எமது மூதாதையர்.

கார் காத்த எமது பூமியில் விவசாயம் மழையை நம்பியே செய்கை பண்ணப்படுகிறது. அந்தக்காலம் சில குறிப்பிட்ட மாதங்களைக் கொண்டதாகவே இருக்கும். அந்த மாதங்களுக்குள்ளேயே விவசாய நிலத்துக்குரிய பணிகளைக் கவனிக்க வேண்டியவன் நிலச்சொந்தக்காரன் ஒருவனே. அவனுக்கு நிலம் உழுத நாட்தொடக்கம் நெல்லை அறுவடை செய்து, வீடு கொண்டுபோய்ச் சேர்க்கும் வரை வயல் நிலத்தில் வேலை இருந்துகொண்டே இருக்கும். அத்தகைய பொறுப்புள்ள விவசாயி ஈரூரில் உழுதால் அவனும் இரண்டு பெண்டாட்டிக்காரனைப்போல் ஏக காலத்தில் இரண்டு ஊரிலும் உள்ள தனது விளை நிலங்களையும் சரிவரப் பார்த்துப் பராமரித்துக் கொள்ள முடியாது. நஷ்டமே அடைவான்.

அது அன்று. இன்று சகல வசதிகளையும் யந்திர சாதனங்களைக் கொண்டு மிக இலகுவாகச் செய்து முடிக்கலாம். எனவே இரண்டூரில் இல்லை. நாலு, பத்து ஊரில் கூட பயிரிட்டு அறுவடை செய்து கொள்ளலாம் என எதிர் வாதமிடவும் சிலர் முன்வரலாம்.

ஆம்! அது சரிதான். தானே பார்த்து மேற்பார்வை செய்யாது, ஆள் வைத்து மேற்பார்வை செய்வதால் நிகழ்வதையும் பழமொழியாளர் கூறித்தான் வைத்திருக்கின்றனர்.

தான் போகிற காரியத்துக்கு ஆள் போனால் ஒரு சொட்டு

இதில் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது செலவழித்ததற்குரியது சரிவர வீடு வந்து சேராது என்பதே. அப்படிச் செய்து மனக்கவலை அடைவதிலும் பார்க்க மட்டாக வாழ்ந்து மன நிறைவடைவது மேல். விவசாயப் பிரச்சினை பணத்தோடு மட்டும் நின்று விடுகிறது.

ஆனால் குடும்ப வாழ்வால் வரும் தேட்டமும், நட்டமும் பரம்பரையைப் பின் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

ஆண் மகனை நம்பி வந்த பெண்கள் தாம் தாம் சீரும் சிறப்புமாக வாழத்தான் விரும்புவார்கள். இது மனித இயல்பு. முறையும் கூட. சட்ட பூர்வமாக பதிவுத் திருமணத்துக்கிலக்காகிய பெண்ணே முதலிடத்தைப்பெற்று சமூக நடமாட்டத்தில் நடமாடுவாள். மற்றையவள் ஆசை நாயகியாக வாழ்ந்து வரவேண்டியவளாகின்றாள். இந்த நிலைமையிற்றான் பிரச்சினைகள் உருப்பெறத் தொடங்கும். சிரங்கு முற்றிப் பவுத்திரமாவதுபோல நாளுக்கு நாள் பிரச்சினைகள் தோன்றி வாழ்வில் அமைதியைக் குலைக்கும். இருந்தாலும் அவனிடம் கையில் நாலு பணம் இருக்கு மளவுக்கு குடும்பமிரண்டையும் ஓட்டிச் செல்வான். அதன் பின்...........?

குடும்பம் இரண்டு; பிள்ளைகள் அநேகர்; நோய் நொடி பலரை வாட்டும் நிலைமை; வயோதிபத் தாய், தந்தை, மாமன், மாமியர்களின் பொறுப்பு; பிள்ளைகளின் பாடசாலைச் செலவு ஆகிய யாவும் பெருக்கெடுத்து நெருக்கும். அந்த ஆடவனும் சிந்திக்கத் தொடங்கி விடுகின்றான். இருந்தாலும் இதுதான் என் தலைவிதி என நினைந்து வேதனைப்படுகின்றான். என் செய்வான்! தான் சுமந்து கொண்ட சுமையைத் தானே காவி இறக்கவேண்டும் என்ற மன வைராக்கியத்துடன் வாழ முயலுகின்றான்.

**இரண்டு பெண்டாட்டிக்காரன் வீட்டில் நெருப்பேன்?**

ஒரு கேள்வியாகவே எழுந்திருக்கும் இந்தப்பழமொழி. நமது சமூகத்தில் இரண்டு பெண்டாட்டிக்காரன் வீட்டில் கண்டனவற்றையும், பிறர் சொல்லக் கேட்டனவற்றையும் காட்சிகளாகவே மனத்திரையில் கொண்டுவந்து நிறுத்தி வைக்கும்.

அவன் வாழ நினைக்கின்றான். பெண்கள் நடந்து முடிந்தனவற்றை மறந்து எதிர்காலத்தையிட்டுச் சிந்திக்காமல்

திரியும் பாம்புமாக வாழ்க்கை ஓட்டுகின்றனர். மனச் சுவாலைகளைக் கொட்டித் தீர்க்க முயலுகின்றனர். ஒரே வீட்டில் நாயும் பூனையும் கூடி வாழ்ந்தாலும் உணவுண்ணும் வேளையில் நாய் பூனையைத் தனதண்டை அணுக விடாது. அவ்வாறே இரண்டு பெண்களும் கூடி வாழ மனம் ஒருப்படமாட்டார்கள். அன்றி எந்த ஒரு பெண்ணும் தன் கணவன் பிறிதொரு பெண்ணுக்கும் கணவனுக இருப்பதை மனதார ஏற்றுக் கொள்ளவே மாட்டாள். வாழ்க்கை சினிமாக்கதையல்ல. ஒழுக்கநெறிக்குட்பட்டது என்பதை விசுவாசித்து நடப்பவர்கள் தமது உயிருக்கே உலை வைத்து விடுவதுமுண்டு. வேறு சிலர் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை எண்ணி எதையும் சகித்துக் கொண்டு வாழ்ந்து வருவதுமுண்டு. ஆனுல் இரண்டு பெண்டாட்டிக்காரனை நம்பி வந்த பெண்கள் சிலகால் தங்களது கணவன்மாரின் தகாத முடிவால் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய வயதிலேயே பொட்டிழந்து, பூவிழந்து விதவைகளாகின்றனர்! தாமே கையடித்து, வயிறு வளர்க்கவேண்டியவர்களாகின்றனர். அன்றி அவர்களின் குழந்தைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். உண்டு, உடுத்து, ஆடிப்பாடித் திரியவேண்டியவர்கள் படிப்பையும் நிறுத்தி, உடலை வருத்தி ஊதியம் தேட வேண்டியவர்கள் ஆகின்ருர்கள். இத்தகைய நிலைமையால் எத்தனையோ கோரக்காட்சிகளை நாம் தினம் தினம் இந்த மண்ணில் காண்கின்ரேம்.

### அறுவடை காலத்தில் எலிக்கு ஐந்து பெண்டாட்டி

எலி மனித சமூகத்துக்கு பாரிய இழப்புகளை ஏற்படுத்தும் ஒரு சிறிய ஜந்து!

வருடம் முழுவதும் பாடுபட்ட விவசாயி, பலன்பெறும் காலம் அறுவடைக் காலம். அந்தக் காலத்தை எதிர்பார்த்திருந்து ஆண் எலி தன் மனம் போனபோக்கில் பல பெண் எலிகளைத் தேடிப் பிடித்து பெண்டாட்டிகளாக்கி வயல் நிலத்தில் பல வளைகளை அமைத்து குடிபுகுந்து கொள்ளு

கின்றது. ஒரே சூலில் பல குட்டிகள். ஏக காலத்தில் ஐந்து பெண்டாட்டிகளும் பெற்றுப் பெருக்கிய பெருந்தொகைக் குட்டிகள் அத்தனையும் தம் வயிறு வளர்க்க அந்த வயல் நிலத்தையே பரிநாசப்படுத்துகின்றன. இதனைக் கண்ணுற்றால் விவசாயியின் வயிற்றெரிச்சல் எப்படியிருக்கும்? முதலிட்டவன் அவன். பாடுபட்டவன் அவன். தனது எதிர்கால வாழ்வுக்காக வருமானத்தை எதிர்நோக்கியிருப்பவன் அவன். பாடுபட்டவனுக்கல்லவா வேதனை தெரியும். பாழ்பட்ட ஆண் எலி தனது உடலின் பத்துக்காக ஏழை விவசாயியின் எதிர்காலத்தை நாசம் செய்வதானால், வேதனைக்குரிய விடயமே எலியின் செயற்பாடு. இந்த எலியைப் போன்றவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஐயோ தாமும் கெட்டு தம்மை அண்டியவர்களையும் குட்டிச் சுவராக்கி சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்குப் பெரியதோர் வழி மறி பாறுங்கல்லாக இருந்து வருகின்றார்கள்.

போனது போக வயல் நிலத்தில் மிகுதியாக இருப்பதையாவது அறுவடை செய்ய விவசாயி தனது வேலையை ஆரம்பிக்கின்றான்.

விழிப்படைகிறது அந்த ஆண் எலி. ஊரான் வீட்டில் குடிபெருக்கி பெருவாழ்வு வாழ்ந்த நிலைமையைத் தொடர முடியாது என்பதை உணருகின்றது. தான் தப்பிப் பிழைத்தாற்போதும் என்ற எண்ணத்துடன் தன்னுடைய பழைய வளையைத் தேடி ஓடி வருகின்றது. அங்கு தன்னுடைய மனைவியுடன் சேர்ந்து கவலை மறந்து குதூகலமாக வாழ்வை ஆரம்பிக்கின்றது. தான் கூடி வாழ்ந்த பெண் எலிகளைப் பற்றியோ அன்றி பிள்ளைகளைப்பற்றியோ எள்ளளவும் சிந்திக்கவில்லை எனறால் என்னென்று கூறுவது? இது எலியின் செயல். பகுத்தறிவு துளியும் இல்லாத அற்ப எலி. இதை நாம் பிரமாதப் படுத்துவதில் பிரயோசனமில்லை. ஆனால் எலி ஓடி மறைந்ததும் வெளியுலக அனுபவமற்ற பெண் எலிகளும் குட்டிகளும் ஆளுக்கொரு

பக்கமாக ஓடி ஆத்தலைந்து பாம்புக்கும், பருந்துக்கும், பூனைக்கும் இரையாகின்றன. இதனைக்காணும் மனித சமூகம் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் எலிகள் செத்து மடிகின்றனவென்று ஆனந்தமடைகின்றது. இதுவரை எடுத்து நோக்கிய எலியைப் போன்ற ஆண்கள் சிலர் இன்றும் எமது மனித சமூகத்தில் இல்லாமல் இல்லை. இவ்வாறு பலதார மணம் பலத்த நாசத்தையே விளைவிக்கும் என்பது உண்மை. பிள்ளைகள் வாழப் பிறந்தவர்கள். எனவே அவர்களுக்கு எதிர்கால அமைப்பு அவசியம். அதைத் தேடிக்கொடுக்க வேண்டியது பிள்ளைகளைப் பெற்றவர்களினது பெருங் கடமையாகும். தாம் செய்து கொண்ட தவறுகளுக்காகப் பாலர்களைப் பரிதவிக்க விடுவது மிகமிகத் தவறு. பிள்ளைகள் பெருமையுடன் வாழ்ந்தால் பெற்றோர்களின் பெயர்களும் பெருமை பெறும். ●

## 19

# காற்றைக் கண்டால் படகை அகலக் கட்டு

அ. ஜெயசாந்தன்

பண்டைய மக்களிடையே சாதிப்பாகுபாடு தொழில் வாயிலாக இடங்கொண்டிருக்கிறது என்பதைப் பழமொழிகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. ''தன் தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன்'' என்ற பழமொழியைக் கொண்டே அவர்களின் மனப்பாங்கை அறிந்து கொள்ளலாம்.

கடற்கரைப் பிரதேசத்தில் ஒரே கட்டுக் கோப்புடன் வாழ்ந்து மீன் பிடித்து வருபவர்கள் மீனவர்கள். கடலில் தொழில் செய்வது இலகுவான காரியம் அல்ல; மிகவும் இக்கட்டான நிலையில் காற்றுடனும் கடலின் அலையுடனும், கடல்வாழ் விலங்குடனும் தமது மனோதைரியத்தால் போராடி பொருள்தேடி வாழ்பவனே மீனவத் தமிழன். இத்தொழில் சம்பந்தப்பட்ட பல பழமொழிகள் உதயமாகியிருந்ததையும் காணக்கூடியதாயிருக்கின்றது.

போராட்டத்தில் வெற்றியும், தோல்வியும் சகஜம். வெற்றிக்கு மகிழ்ச்சி. தோல்வியில் கவலை. மறுநாள் போராட்டத்தில் தோல்வி வெற்றியாகவும் மாற்றமடையும்! அதையே ''கடல் தொழில் வாய்ப்பான், பிழைப்பான்'' என்று கூறிவைத்துள்ளனர்.

இப்படியான போராட்ட வாழ்க்கை நடத்துபவனுக்கு ஒருநாள் பல கருங்கண்ணி மீன்களைப் பிடித்துக் கரை சேர்க்கக்கூடிய வாய்ப்புக்கிடைத்து விட்டது. உள்ளத்தில் உவகை எழுகின்றது. பட்ட கடனெல்லாம் தீர்ந்து விடும் என்ற நினைப்பு. சில நாட்களுக்காவது சிரமமின்றிச்சீராக வாழ முடியுமென்ற அங்கலாய்ப்பு. படகில் இருந்து நிமிர்ந்து மனிதனுகக் கரையேறி வருகின்றான். பழைய நண்பன் ஒருவன் நிற்பதைக் கவனித்தோ, கவனியாமலோ மீனை விற்றுப் பணத்தைப் பெற்றுவிட வேண்டுமென்ற நினைப்பால் விரைந்து சென்று விடுகின்றான். நண்பனின் வாய் ''.........கருங்கண்ணி பட்டால் கடைக்கண்ணாலும் பாரான்'' என்ற ஒரு பழமொழியைக் கூறிவைக்கின்றது. பலநாள் நண்பன் ஒருநாள் தன்னைக் கவனியாது போனமை யால் இது பழமொழியாக நிலைகொண்டு விட்டது.

மீனவ நண்பன் பழமொழி திரிபுபெற்றே இவ்வாறு கூறப்படுகின்றது என்றும், உண்மையில் போராட்டத்தில் வெற்றி கொண்ட மனிதன் கடைக்கண்ணால் பாராது நேராக நிமிர்ந்து வீறு நடை நடந்தே செல்லுவான். எனவே ''கருங்கண்ணி பட்டால் கடைக்கண்ணால் பாரான்'' என்றே அமைப்புப் பெற்றிருக்க வேண்டும்.

மீனின் சுவையை மீனவன், அன்றேல் பல இன மீன் களையும் வாங்கிப் புசித்த ஒருவனால்தான் நன்கு கூறமுடி யும். அழகான மீனென்றால் கறி சுவைக்கும் என்பது கருத் தல்ல. மீன் வாழும் நீர் நிலை, மீன் இனம், மீன் பட்ட வலையின் தன்மை என்பவற்றைக் கொண்டே மீனவன் மீனின் சுவையைத் தரம் வகுத்து தன் வீட்டுக் கறிக்கு எடுத்துக் கொள்கின்றான். சுவைகளைக் கொண்டு எழுந்த சில பழமொழிகளை நான் எனது நண்பனிடம் இருந்து பெற்று இங்கே தருகின்றேன்.

உள்ளதை விற்று உல்லனை வாங்கு
மக்களை விற்று மதனனை வாங்கு
சீலையை விற்றுச் சீலாவை வாங்கு என்பன அவை.

என்ன? எது? என்று பார்க்காமலே உள்ளதை விற்று உல்லனை வாங்கு என்ற பழமொழியை எடுத்து நோக்கில் உல்லன் மீன் சுவை மிகுந்தது என்பது நன்கு புலனுகின்றது.

செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது பிள்ளைச்செல்வம். பிள்ளைகளுக்காகவே தமிழ்ப் பெற்ருேர் உழைத்து உருக்குலைகின்றனர். அதனைக்கூட மறந்து ''மக்களை விற்று மதனனை வாங்கு'' என்று கூறியிருப்பதிலிருந்து மதனனை உண்டு பழகியவன் எப்படி அதனை விரும்புகின்ருன் என்பது நன்கு தெரியவருகின்றது. தென்னிந்திய தமிழ் மக்களின் வாயிலிருந்து இந்த பழமொழி அடிக்கடி வெளிவருவதைக் கேட்கலாம்.

மனிதனின் மானம் காப்பது மனிதனின் உடலில் உள்ள சீலை. 'சீலையை விற்றுச் சீலாவை வாங்கு' என்று கூறுவதில் இருந்து மானம் குறைந்தாலும் சீலா மீனை நழுவ விடக்கூடாது என்பது அவர்களின் மன எண்ணம் போலும்.

**இருலைப் போட்டுச் சுருமீனைப் பிடி**
**சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடி**

இந்த இரண்டு பழமொழிகளும் ஒரே கருத்துக் கொடுப்பன. உணவைப் போட்டால் கடல்வாழ் உயிரினம் அவற்றை உண்ண கூட்டாக வந்தடையும். அப்பொழுது அவற்றை இலகுவாக வேட்டையாட வாய்ப்பு ஏற்படுகின்றது.

இருல் சிறியது; சுரு பெரியது. கிளி போன்ற சின்ன மீனைத் தூண்டலில் குற்றிப் பாரை போன்ற பெரிய மீனை சிக்க வைப்பது மீனவத் தொழிலுக்கு ஏற்ற செயற்பாடாகும்.

ஆனுல் மனித வாழ்க்கையின் பக்கம் ''இருலைப்போட்டுச் சுருவைப் பிடி'' என்ற பழமொழியைத் திருப்பிப் பார்த்தால் பெரிய காரியத்தில் வெற்றி காண வேண்டு

மாஞல் சிறியதைத் தூக்கிப் போட்டு வெற்றி கொள்ளவும் முடியும். மனிதன் பலவீனன். பலவீனத்தை உணர்ந்து அதற்கு ஏற்ப மது, மாது, மனதைக் கவர்ந்த பொருளைக் காட்டித் தாம் நினைத்ததைப் பெரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்தே சிலர் பெற்று விடுகின்றனர். இரண்டொரு சொற்களில் சொன்ஞல் சிறு லஞ்சம் பல கோடியைச் சேர்க்க உதவுகின்றது. இருல் சின்னன்; அதஞல் கிடைப்பது சுரு. இந்த வாக்கியம் பல கோணத்தில் வைத்துச் சிந்திப்பதற்கு ஏற்றது.

### கருவாடு விற்ற பணம் மணக்குமா ?

என்பதும் ஒரு பழமொழி. பணத்தைக் கண்டதும் கருவாடு விற்ற கையில் நடமாடியிருந்தாலும் அதைப் பெற்றுத் தம் அடிமடியில் கட்டிக் கொள்வர். இப்போது கருவாடு மணக்கும். விற்ற பணம் மணக்காது. எப்படிப் பணம் மனிதனை ஆட்டிப்படைக்கின்றது.

### காற்றைக் கண்டால் கடலிற் படகை அகலக் கட்டு

தொழில் முறையாக எழுந்த வாக்கியமே இது. இன்று சிலரால் பழமொழியாக வழங்கப்பட்டு வருகின்றது என நினைக்கவேண்டியுள்ளது. கடலில் காற்றிருந்தால் அதனை எதிர்த்துத் தொழிலாற்றுவது கடினம். தொழில் வாய்ப்பும் குறைவாகவேயிருக்கும். செலவுக்கும் வருவாய் கிடைக்காது. எனவே தொழிலுக்குச் செல்வதைக் கைவிட்டுப் படகைக் கட்டி ஓய்வு எடுப்பதையே புரியவைக்கின்றது இந்த வாக்கியம்.

### கருவாடு கரைந்தாலும் ஆணத்துக்குள்ளே

கருவாட்டை மீன் சதையாக எடுத்துக் கறியாக்கும் பொழுது கரைந்து ஆணத்துடன் இரண்டறக் கலந்து விடுகிறது. பருக்கையாக இருந்த கருவாடு மணம், குணம் இரண்டையும் தருகிறது. ஆனல் கருவாடு தன் செயற்பாட்டை இழக்கவில்லை. வாழ்விலும் இப்படியே. இனமுறைக்கு உதவியது அவமே போகாது உபயோகிக்கப்படும்

என்ற உயர்ந்த நிலையை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டு கின்றது. இதில் இருந்து பழமொழி ஒன்று வெளிப்படை யாக ஆழ்ந்து சிந்திக்கும்பொழுது பல்வேறு கருத்துக்களைப் புகட்டுகின்றது.

கருவாட்டில் மக்கள் விரும்பி உண்பது சுவை மிகுந் ததும், மதிப்புடையதுமான கட்டாக் கருவாடே. ''திரை கடலோடியும் திரவியம் தேடு'' என்ற மொழிக்கேற்ப யாழ். குடாநாட்டில் இருந்து கச்சதீவுக் கரைவரை சென்று கனத்த கட்டாப்பாரை பிடித்து வந்து கருவாடாக்கிச் சுவைத்தும், விற்றும் வருகின்றனர்.

கட்டாக் கருவாடு சுட்டாலும் சுவை குன்றாது

என்ற பழமொழி மீனவ மக்களின் வாயில் இன்னும் ஊசலாடுகிறது. ஆனால் மற்றைய சிலருடைய வாய்களில் ''கட்டாக் கருவாடு சுட்டாலும் மணவாது'' எனத்திரிபு பெற்று வழக்கத்திலிருந்து வருகின்றது என்பதைச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. மற்றவர்களுக்குத் தெரியாமல் மச்சமுண்டு மகிழும் மனிதனை ஏமாற்றி வியாபாரம் செய்த கருவாட்டு வியாபாரியின் வாய்த்திரிபு என எண்ணவேண்டியிருக்கின்றது.

20

# பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை

ஆ. ஜெயகாந்தன்

மனிதனுடைய செயற்பாட்டுக்கு ஏதுவாக இருப்பன அவனுடைய சுபாவம், மனோநிலை, பழக்கவழக்கம் என்பனவே. இவற்றை நன்கு தெரிந்து — புரிந்து வாழ்ந்தவர்களே அன்றைய எமது மூதாதையினர்கள் என்பதை பண்டைய பழமொழிகள் வாயிலாக இங்கு நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த மனித சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் வேண்டிய நேரத்தில் மற்றையவர்களுடன் இணைந்து வாழ வேண்டியவனுகவே இருக்கின்றுன். அதை உணராத சிலர் தானுண்டு தனது குடும்பமுண்டு என வாழத் தலைப் படும்பொழுது மற்றவர்களின் மனவெறுப்புக்கும், புறக் கணிப்புக்கும் இலக்காகின்றுர்கள்,

பணமிருந்தும் தன்னிடம் வாழக்கூடிய வகையில்லை எனக்கூறுதல், சமூகப் பொதுப்பணிக்கு கடுகளவு கூடக் கொடுக்காதிருத்தல், விருந்தினரைக்கண்டால் வரவேற்று உபசரியாமல் சாக்குப்போக்குச் சொல்லித் திருப்பி அனுப்பி வைத்தல் போன்ற செயல் ஒரு சில மனிதர்களிடம் சுபாவமாகவே அமைந்து விடுகின்றது. இத்தகையவர்களை அற்பன், பிசினி, கசவாரம் எனப் பெயரிட்டு அழைப்பதைக் காண்கின்றோம்.

இன்று மட்டுமல்ல அன்றும் கூட இத்தகைய அற்பக் குணம் படைத்த மனிதர்கள் வாழ்ந்துதான் வந்திருக்கின்ருர்கள். ''அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்'' என்ற பழமொழி இத்தகையவர்கள் வாழ்ந்திருக்காவிட்டால் உதயமாகி இருக்காது.

அற்பனும் மனிதப்பிறவிதான்; ஆனுல் மற்றைய மனிதர்களால் வெறுக்கப்படத்தக்க குணசுபாவம் உடையவன். பாவம், தன்னுலேயே தான் சமூக நடமாட்டத்தைக் குறைத்து ஒதுங்கி வாழும் இயல்பைக் கைக்கொண்டிருப்பவன். இதனுலேயே அவன் தன் சுய கெளரவத்தை இழந்து சுய இச்சைக்காரனுக சமூகத்தில் கணிக்கப்படுகின்ருன். மழைக்கும், வெயிலுக்கும் உபயோகிக்கும் பொருளே குடை. அத்தகைய குடையை வேளையற்ற வேளையிலே, தேவையற்ற நேரத்திலே அதுவும் ஒருவன் பிடித்து வருவதானுல் அர்த்தமென்ன?

குடை பிடித்து வருபவனுக்கு மனநோயா?

குடை என்னிடமும் இருக்கிறது என்பதை மற்றவர்களுக்கு காட்டவேண்டும் என்ற மனநினைவோ?

அர்த்த ராத்திரியில் மட்டும் குடையைப் பாவித்தால் அக்குடை நெடுங்காலம் தன் கைப்பொருளாக இருந்து வரும் என்ற பணவாஞ்சையோ? எது சரி, எது பிழை என்ற அவனது மனவெண்ணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

சமூக மட்டத்தில் இந்தப் பழமொழியை எடுத்து நோக்கினுல் சிலர் தாம் தேடிய பொருளைத் தாமும் அனுபவியாமல் மிக அற்பத்தனமாக வாழ்ந்து சுய கெளரவமற்றவர்களாக நடமாடி மரணமடைகின்றனர். ''உண்ணுச் சொத்து மண்ணுய்ப் போகும்'' என்ற கூற்றுக்கமைய அவர்கள் தேடிய பொருள் எங்கே இருக்கிறது என்பது கூடத் தெரியாமற்போய் விடுகின்றது. அவர்களது

சொந்தக் குடும்பங்களே சோற்றுக்குக்கூட வகையற்றவர்களாகி தெருத்தெருவாக அலைந்து திரியும் நிலைமைக்கு ஆளாகிவிடுகின்றன.

மனிதர்களில் வேறு ஒரு சிலர் தமது மனவாஞ்சையால் தங்களது குடும்ப நிலைமையைக்கூடச் சிந்திக்காமல் சமூகத்துடன் பின்னிப் பிணைந்து தாம் பெரிய மனிதர்களாகக் காட்சி கொடுக்க வேண்டுமென விரும்புகிறார்கள். ''நாம் எதிலும் குறைந்தவர்களல்ல, எவர்களுடனும் சரி நிகராக வாழத்தகுதியுடையவர்கள். நாங்கள் படித்தவர்கள். அனுபவசாலிகள். நாலுபேரை நன்கு தெரிந்தவர்கள்'' என்ற இறுமாப்பெண்ணத்தைக் கொண்டவர்களாக நாலு, பத்து சமூக விடயங்களில் முன்னின்று உழைப்பார்கள்.

பின் சொல்லவா வேண்டும்? ஊருக்குழைக்கும் பெரிய மனிதர்களாகத் தம்மைத் தாமே தயாராக்கிக்கொள்ளுகின்றார்கள். இப்பொழுது இருக்க, நிற்க நேரமில்லை; ஒரே அலைச்சல், வேலைச் சுமை, சதா செல்வர்களின் சகவாசம், விழாக்களில் தலைமை தாங்கும் பொறுப்புக்கள். இப்படியாகப் பல அவர்களைத் தேடி வந்துகொண்டிருக்கும். அவற்றையெல்லாம் ஏற்றுச் செய்து முடித்துக் கொண்டிருப்பார்கள்.

தங்கள் சொந்த வீடுகளுக்குப் போனால் மனைவியர் கொடுப்பனவற்றை வாங்கி, உண்டது பாதி, உண்ணாதது பாதியாகத் திரும்பிவிடுவார்கள்.

பிள்ளைகளின் நிலைமை என்ன! மனைவி வீட்டைப் பராமரிக்க என்ன செய்கின்றாள்? என்பதைக் கூடச் சிந்திக்க மாட்டார்கள். இத்தகையவர்களைப்பற்றிப் பழமொழியாளர் கூறிவைத்திருப்பதைச் சிறிது நோக்குவோம்,

ஊர் ஒச்சம் வீடு பட்டினி

இதுதான் பழமொழியாளர் கண்டறிந்தது. இதைச் சமூகம் அறியுமா? ஒருவன் தனது குடும்பத்தைக் கவனியாது

சமூகத்தை மட்டும் கவனிப்பதாக இருந்தால் அந்தச் சமூகப்பணி பூரணத்துவம் உடையது எனக் கருதமுடியாது. குடும்பம் சீராக இருந்தாற்றான் சமூக வாழ்வு சிறப்படையும் என்பதைச் சமூக வாதிகள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு சில சமூகவாதிகள் தமது குடும்பத்தைச் சீராக்கிய பின்தான் பொதுப்பணியில் இறங்கி, தம்மால் இயன்றதை சமூக நலனுக்காகச் செய்யத் தலைப்படுகின்றனர். குடும்பம் வாழ்ந்தாற்றான் சமூகம் வாழும். சீரும் சிறப்பும் அடையும்.

### பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை

பேச்சு வாயில் இருந்து வெளிவரும் ஒலி. இதன்மூலம் மனிதன் தனது மனக்கருத்தை மற்றொருவனுக்குத் தெரிய வைக்கின்றான். இந்தப் பேச்சொலியைத் துணைக்கொண்டு ஒருசிலர் பிரமாதமாகப் பேசி தங்களைத் தாங்களே பெரிய புள்ளியாகக் காட்டிக் கொள்ளுகின்றனர். அன்றும் இத்தகைய நிலைப்பாடுள்ள சிலர் எமது சமூகத்தில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது மட்டும் உண்மை. இல்லாவிட்டால் இத்தகையதோர் பழமொழி உதயமாகியிருக்காது.

பல்லக்கு மரத்தால் ஆக்கப் பட்டாலும் மணியாலும் முத்தாலும், அலங்கரிக்கப்பட்டு, மரப்பலகை தெரியாமல் பட்டுத் துணியால் சுற்றிக் கட்டப்பட்டதாகவே இருக்கும். புவியாளும் மன்னனோ அன்றிப் பெரும் பணம் படைத்த பிரபுவோ தன் சொந்தக் கால்கள் மண்ணிலே படாதவாறு பல்லக்கில் ஏறி இருக்க, வயிற்றுப் பசி போக்க வகையற்ற ஏழை மனிதர்கள் நால்வர் தமது எட்டுக் கால்களால் இரண்டு கால் கொண்ட அந்த மனிதப் பிறவியைச் சுமந்து செல்வர்.

இந்தக் காட்சியை வீதிகளில் எண்ணற்ற மக்கள் பார்த்து நிற்பர். சுமந்து செல்லும் அப்பாவிகளைப் பற்றிய சிந்தனை சற்றேனுமின்றி, கால் நோகாது பவனிவரும் பணக்காரனைப் பற்றியே பலதும் பத்தும் பேசிக் கொள்ளுவார்கள்.

வாய்வீரனுக்கு பேச்சுத்தான் வெறும் பல்லக்கு. வேறு ஒன்றுக்குமே வக்கில்லை. அதனால் கால்நடை-தான் இறுதிச் சன்மானமாகின்றது என்பதை இந்தப் பழமொழி மூலம் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவைத்திருக்கின்றனர் எம் மூதாதையர்.

பேச்சு இன்று மக்களை ஆட்டிப்படைக்கும் ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக இருப்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் அதை ஆயுதமாக ஏந்தி வருவோர் இடமறிந்து, தமது சாதுரியத்தால் அணி திரட்டிக்கொள்வதை நாம் காண்கின்றோம். வாய்த்திறன் இருந்தால் எதையும் பேசி விடலாம். பேசியதை செயற்படுத்தக்கூடிய திறன், பேசும் என்னிடமுண்டா? என்பதைச் சற்றும் சிந்திக்காமல் தமது மனதின் ஆழத்தில் குடிகொண்டிருக்கும் ஆசையை நிறை வேற்றுவதற்கு பல்லக்காக வெறும் வாய் வீச்சினால் மனித சமூகத்தைத் தட்டி எழுப்புகின்றனர். இதைச் சமூகம் அதிகளவில் சிந்திப்பதில்லை. பேச்சாயிருந்தாலென்ன, எழுத்தாயிருந்தாலென்ன அது மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வழிகோலுவதாக அமைய வேண் டும். மலையே சரிந்து விழுந்தாலும் தலைகொண்டு தாங் கும் தைரியத்துடன் பேச முன்வருபவனே உண்மை வீரன்; உண்மைத் தியாகி; சுயநலமற்ற உண்மைத் தொண்டன் என்ற பெயரைப் பெறுகின்றான்.

அத்தகையவனை சமூகம் மறவாது போற்றிப் புகழும். வெறும் காலால் நடந்தவனை மனிதர் தம் மனதிலிருந்து அகற்றிவிடுவார்கள். இது இதிகாசம் புகட்டும் உண்மை.

குடிக்கிறது கூழ்; கொப்பளிக்கிறது பன்னீர்.

வெளிப்பகட்டுக்காக வாழும் மனிதர்களைத் தமது கருத் திற் கொண்டே இந்தப் பழமொழியை அன்றைய எமது சமூகம் ஆக்கி வைத்திருக்கிறது என எண்ணவேண்டியிருக் கிறது.

மனிதன் தனக்குக் கண்டே தானம் வழங்கவேண்டும். அதைவிடுத்து தனது வாழ்க்கைக்கே வருவாய் பற்றுக்குறை யாகவிருக்கும்பொழுது வெளியுலகில் பெயரும் புகழும் சம் பாதிப்பதற்காக உள்ளதை விற்றுச் சுட்டுத் தானம் செய் வானேயானால் அது வெறும் வெளிப்பகட்டே!

வீட்டில் உள்ளவர்களின் பசி பட்டினியைப் போக்க வகை சமைத்த பின்பே வெளியுலகுக்குக் காலடி எடுத்து வைக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் வெளிப்பகட்டுக் காக வீண் செலவுகளைச் செய்துவிட்டு, எதிர்காலத்தை ஓட் டிச்செல்ல முடியாது எத்தனையோ வீட்டுத் தலைவர்கள் குட்டிச் சுவராகி வாழ வகையற்றிருப்பதையும் நாம் கண் ணாரக் காணலாம்.

எமது கையில் நாலு பணமிருந்தாற்றான் எமது எதிர் கால சந்தியினராகிய பிள்ளைகளைச் சீராக வளர்க்கவும் கல்வி கற்பிக்கவும் முடியும். அதை மறந்து ''குடிப்பது கூழ்; கொப்பளிப்பது பன்னீர்'' என்றவாறு நடப்போமேயானால் எமது வாழ்வு கெடுவதுடன், எமது பிள்ளைச்செல்வங்களின் எதிர்கால வாழ்வும் பெரும் பாதிப்புக்குள்ளாகிவிடும். எம்மவர்கள் தம்மிலும் பார்க்கத் தமது பிள்ளைகளின் நல் வாழ்வில் அதிக அக்கறை கொண்டு பேணிக் காக்கின்ற பாரம்பரியத்தைத் தொன்றுதொட்டே கடைப்பிடித்து வரு பவர்கள் என்பதனை நாம் மறத்தலாகாது.

கூழைக் குடித்து நம் வாழ்வை ஓட்டலாம். ஆனால் வாயைத் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்யலாம். அதை விடுத்து, வீட்டுக்குள் கூழைக் குடித்துக்கொண்டு வெளி யுலகில் பன்னீரால் வாய் கொப்பளித்து வாழ்வதினால் எந் தப் பலனும் கிட்டாது. கையில் இருக்கும்வரை நாடித் தேடி ஓடி வருவார்கள்; வாயாரப் போற்றுவார்கள், புகழு வார்கள்; கை கட்டி ஏவல் செய்வார்கள். ஆனால் கை வரண்டு விட்டால் கடைக்கண்ணாலும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள்; சென்ற காலத்தில் பெற்ற உதவிகளைக் கூட மறந்து விடுவார்கள்.

''ஆல் பழுத்தால் இங்கே; அரசு பழுத்தால் அங்கே'' பறவைகள் பழம் இருக்கும் இடத்தை நாடிச் சென்று தமது வயிற்றை நிரப்பிக்கொள்ளும் இயல்பை உடையன. அந்தப் பறவைகள் உணவு இருக்கும் இடத்தை நாடி ஓடிச் செல்லவேண்டியது நியதியே. ஆனால் மனிதன் பகுத்தறிவு படைத்தவன். செய்த நன்றியை மறந்து ஒருவன் நொய்த நேரத்தில் அவனைக் கைவிட்டு பசை நாடிச் செல்வானேயானால், அத்தகையவன் ஒரு சுயநலவாதியாகவே இருப்பான்.

ஆகவே பகுத்தறிவு படைத்த மனிதன் கூழைக் குடித்து, தண்ணீரால் கொப்பளித்து சமுதாயத்தில் நல்ல மணம் கமழும் பன்னீராக வாழ்ந்தால், சமூகம் அவனைப் போற்றும்; புகழும்; நல்ல சமூக அமைப்பு ஏற்பட வழி காட்டியாகத் திகழ வாய்ப்பேற்படும். ●

# 21

# தீவினை செய்தால் பேய்வினை செய்யும்

ஜெயகாந்தன்

நல்வினையும் தீவினையும் பிறப்புக்கு ஏதுவானவை. இரண்டையும் விலக்கி பற்றின்றி வாழும் ஆன்மாவே ஆண்டவனை அடையும் என்பது சமயக் கூற்று.

நல்வினை, தீவினை என்ற பதங்களை விட ஊழ்வினை, செய்வினை, கர்மவினை, தன்வினை, வினைப்பயன் எனப் பல சொற்கள் தமிழ் மொழியில் நடை முறையில் இருப்பதைக் காணலாம்.

நான், எனது என்ற எண்ண நோக்கு ஆன்மாவின் அகப்பற்றையும் வெளிப்பற்றையும் எடுத்துக் காட்டுகின்றது.

நான் பெரியவன்; நான் படித்தவன்; நான் ஆற்றல் படைத்தவன்; நான் பணக்காரன்; நான் அழகன் என்று எண்ணுவதும் கூறுவதும் உள்ளத்தில் இருந்து எழும் பற்றே. அதே போன்று எனது வீடு, எனது காணி பூமி, எனது பிள்ளை, எனது பட்டம் பதவி என நினைப்பதும் எடுத்துக் கூறுவதும் காட்டி அகமகிழ்வதும் வெளிப்பற்றே.

அன்பு வழி நடந்து, பிறரை நேசித்து, செருக்கின்றி வாழ்பவர்களை மனித சமூகம் கணித்துக் கௌரவிக்கின்றது. போற்றிப் புகழ்கின்றது. இத்தகையவர்கள் தாமும்

வாழ்ந்து மற்றையவர்களும் வாழ்வதற்கு வழிகாட்டிகளாக வாழ்ந்து மறைகின்றூர்கள். ஆனல் மனித சமூகம் இப்புவியில் வாழும் காலம்வரை இவர்களது பெயர்கள் நிலை பெற்றேயிருக்கும். இத்தகையவர்கள் இந்த மனித சமூகத்தில் மிகச் சிலரே.

ஒருசில மனிதர்கள் தாம் மேற்கொள்ளும் செயல்களால் தாமும் கெட்டு வேறு பலரையும் கெடுத்து வைக்கின்றூர்கள். இவர்கள் தமது கெட்ட செயல்களால் ஆரம்பத்தில் ஒரு சில இன்பத்தைக் கண்டாலும் நீண்ட நாள் வாழ்வில் நிம்மதியை இழந்து விடுகின்றனர். துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து வாழவகையற்று ''பிறர்க்கிடு பள்ளம் தனக்கிடு பள்ளம்'' என்ற பழமொழிக் கூற்றுக்கிலக்காகிவிடுகின்றனர் என்பது இந்த மனித வாழ்வில் நாம் காணும் உண்மையாகும்.

சகுனியின் கெடுமதி கேட்டு வழி நடந்த துரியோதனனுக்கு ஆரம்பத்தில் இன்பம் கிட்டியது. இறுதியில் என்ன நடந்தது?

துரியோதனனுடைய அழைப்பையேற்று விருந்தாளிகளாக வந்த உடன்பிறவாச் சகோதரர்களாகிய பஞ்சபாண்டவர்களைப் பொழுது போக்காக சூதாடக் கேட்டான்.

சூதுவாதறியாத தருமனும் சூதாட இணங்கினுன். சூதாட்டம் தொடங்கியது.

வினையே உருவெடுத்த சகுனி துரியோதனுக்காகச் சூதாடினுன்.

வினை வினைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்

என்ற பழமொழிக் கூற்றைச் சற்றும் உணராதவனுகச் சகுனி கபடமாக ஆடித் தருமனைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடினுன்.

தாம் தாம் விதைத்ததை தாமே அறுத்தாக வேண்டும்.

சகுனி கபடமாக ஆடித் தனக்கு மட்டுமல்ல, தன்னைச் சார்ந்த சகலருக்குமே தீவினையைத் தேடி வைத்தான். அந்த வினை பெரிதாக வளர்ந்தது. பெரியதோர் எரிமலையாகியது. அதுவே பாரத யுத்தத்துக்கு வழி கோலி வைத்தது. அதனுல் பல மணி மன்னர்கள் மண்ணோடு மண்ணுகி மாண்டனர். குடி மக்களும் தாங்கொணுத் துன்பத்தை அனுபவித்தனர்.

''வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்'' என்பதை உற்றுணர்ந்த நீதிமான்கள் பேரின்ப வாழ்வை அடைந்தார்கள். தர்மம் வென்றது. அதர்மம் ஒழிந்தது. இன்றும் பஞ்ச பாண்டவர்களின் பெயர்கள் நிலையான இடத்தைப் பெற்றிருக்கின்றன. தருமனின் பொறுமை போற்றப்படுகின்றது. பஞ்ச பாண்டவர்களின் தந்தை பாண்டுவின் பெயரும் பாரத பூமியில் நற்புத்திரர்களைப் பெற்றெடுத்த தந்தையென்ற நிலைக்கு உயர்ந்திருக்கின்றது.

சீச்சீ! அவமானம். இவனும் ஒரு மனிதப்பிறவியா? எமது மூதாதையினர் இப்புவியில் தேடி வைத்திருக்கும் குடும்ப கௌரவத்தைக் கொட்டிக் குலைக்கின்றுன்.

பால் பழத்துடன் பலசுவை உணவையுண்டு, பஞ்சணை மெத்தையில் படுத்துறங்க வேண்டியவன் கண்ட நின்ற இடங்களிலெல்லாம் கையேந்திச் சாப்பிடுகின்றுன். சத்திரங்களிலும் சாவடிகளிலும் பொழுதைப் போக்குகின்றுன். கந்தை கட்டித் திரிகின்றுன். கவிதை பாடுகின்றுன். சிவனைக் காணவேண்டுமாம், தான் பெரியதோர் துறவியாம், உண்மையில் இவனது சித்தம்தான் கலங்கிவிட்டது. இத்தகையவனுக்கு எப்படித்தான் புத்தி கூறினுலும் கேட்கத்தான் மாட்டான். உடன் பிறப்பு ஒருவன் வாழ்ந்தான். இன்று இறந்து விட்டான் என எண்ணி வாழ்வதுதான் நல்லது. இல்லை...... அவன் வாழுங் காலம் வரை நான் தலை நிமிர்ந்து வாழ முடியாது. நாளுக்கு

நாள் அவன் செயல்களால் எனக்கு வந்து சேரும் அப கீர்த்தியைப் போக்க வேண்டுமானால் அவன் சாகத்தான் வேண்டும். அல்லது நான் இந்தக் கிராமத்தை விட்டு வேறு ஊரில் போய் வாழ வேண்டும். நான் போனால் இவனுடைய மனைவியல்லவா உனது சொத்துச் சுகங்களை யெல்லாம் அபகரித்து விடுவாள். பின் நான் வாழ வகை யற்று ஆண்டியாகவல்லவா தெருத்தெருவாக அலைய வேண்டி வரும். இனிமேல் இவனை இப்படியாகத்திரிய விட்டு வைக்கக் கூடாது. எந்த வகையிலும் பழி பாவத் தைப் பாராமல் கொன்று விடத்தான் வேண்டும். என்ற கோர முடிவுக்கு வந்தாள். இன்று பார் போற்றும் பட் டிைத்தடிகளின் தூய துறவு நிலைமையைக் கண்டறிய முடியாத சகோதரி அன்று —

அவள் தனது எண்ணத்தைச் செயற்படுத்த கால நேரம் பார்த்திருந்தாள்.

ஒரு நாள் தன் சகோதரியின் வீட்டுக்கு பட்டினத்த டிகள் வந்தார்.

அவள் அவரைக் கண்டதும் ''வா என் உடன் பிறப்பே வா!'' எனப் பாசாங்கு செய்தவாறே வரவேற்று நஞ் சூட்டிய ஒட்டப்பத்தைப் புசிக்கக் கொடுத்தாள்.

அவளது திட்டமிட்ட செயலை ஞான உணர்வால் புரி ந்து கொண்ட அடிகளார் சலனம் அடையாதவராக அந்த அப்பத்தை எடுத்து ''தன் வினை தன்னைச் சுடும், ஒட்டப்பம் வீட்டைச் சுடும்'' என்ற கூற்றைக் கூறியபடி ஒட்டப்பத்தை உலகப்பற்று மிக்க தன் சகோதரியின் வீட்டுக் கூரையின் மேல் விட்டெறிந்தார்.

அவளது வீடு தீப்பற்றிக் கொண்டது. அன்றுதான் அவள் தன் உடன் பிறப்பாகிய திருவெண்டாரின் இதய சுத்தியைப் புரிந்து கொண்டாள். அதன் பின்தான் ''தன் வினை தன்னைச் சுடும்'' என்ற பழமொழியின் பொருளையும் புரிந்திருப்பாள்.

இந்தப் பழமொழி இன்று மக்கள் மத்தியில் ''தன் வினை தன்னைச் சுடும்'' என்று தனித்தும் ''தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்'' என இணைந்தும் நடை முறையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த இணைப்பு பட்டினத்தடிகளின் நிகழ்வுக்குப்பின் தான் இடம் பெற்றிருக்கலாம் எனக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

வீட்டிலே வினை இருக்கிறது.
வினை தீர்க்க கோவிலுக்குப் போனால் தீருமா?

இந்தப் பழமொழி ஒரு கேள்வியாக அமைவு பெற்றிருப்பதைக் காணலாம். மனிதன் தன் குற்றங் குறைகளைத் தானே உணர்வதில்லை. எம்மை நாம் உணர்ந்து குடும்பம் என்ற ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து வருவோமேயானால் வீட்டில் அமைதியையும் அன்பையும் சுபீட்சமான எதிர் காலத்தையும் காண்போம். நல்லதைச் செய்து நறுமணம் கமழும் நல்ல பூங்காவாக வீட்டை ஆக்கி வைக்க முடியும்.

அதற்கு மாறாக ''கீரியும் பாம்பும் போல'' சதா வாழ்ந்து வரப்பழகிக் கொண்டோமேயானால் வீட்டில் ஒழுங்கையும் ஒருமைப் பாட்டையும் காண முடியாது. ஒருவரோடு ஒருவர் உள்ளன்பின்றி செயற்படுவதால் தமக்குள் தாமே வினைகளை விதைத்துக் கொள்ளுகின்றார்கள். மனதில் புயல், சண்டை, சச்சரவு, வாய் வீச்சு என்பன வீட்டுக்குள்ளேயே இடம் பெறுகின்றன. குழந்தைகள் பெரியவர்களின் செயல்களைக் காண்கின்றனர். சிலவற்றைத் தமதாக்கிக்கொள்ளுகின்றனர். கீழ்ப்படிவு, பொறுமை, சாந்தம் என்பனவற்றை மறந்து உண்மையற்றவர்களாக தம்மைத் தாமே ஆக்கிக் கொள்ளுகின்றனர். இவற்றைச் சில பெரியவர்கள் சிந்திப்பதில்லை.

தாம் வினைகளைத் தேடிக் கொள்வதுமல்லாமல் எதிர் காலச் சந்ததியினர்களாகிய பாலர்களையும் பாழும் வினை வழிக்கு ஏதுவாக்கி வைக்கின்றனர்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் சில மனிதர்கள் தமது இல்லத்தையே வினை விளையும் களபூமியாக்கி வைத்துக் கொண்டு கோவிலுக்குப் போய் வந்தால் வினை தீருமா என்ன?

ஆன்ம சுத்தியே ஆண்டவனை அடைய வழி எனச் சகல மதங்களும் கூறி வைத்துள்ளன.

ஆண்டவனின் திருக்குமாரன் யேசுக் கிறிஸ்து மண்ணுலகில் உள்ள பாவிகளை அதாவது வினை விதைத்தவர்களை இரட்சிக்கவே மனித உருவில் அவதரித்தார்.

கௌதம புத்தர் மரணம், வயோதிபம், நோய் என்பனவற்றைக் கண்டே மனம் வருந்தி துறவு வாழ்க்கையை மேற்கொண்டு தூய ஞான ஒளியைப் பெற்றார்.

கண்ண பரமாத்மா உலக அக்கிரமங்களில் இருந்து நல்லாத்துமாக்களை மீட்டெடுக்கவே அருச்சுனனுக்கு பகவத் கீதையை உபதேசித்து போர் செய்ய இணங்க வைத்தார்.

இவற்றையெல்லாம் மனித சமூகம் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தெரிந்துதான் வைத்திருக்கிறது. ஆனால்.........

நடப்பதென்ன? வினை ஆன்மாவை பீடித்துக் கொள்ளுகின்றது. பிறப்பு நிகழ்வு நடந்து கொண்டேயிருக்கிறது. ஆன்ம விடுதலைக்கு மார்க்கமில்லை.

எவன் ஒருவன் அன்பு வழி நின்று போட்டி, பொறாமையின்றி, சத்தியவழி நடந்து பிறவுயிர்களுக்காக திரிகரண சுத்தியுடன் சேவை செய்து வாழ்வானேயானால் அதில் இருந்தே ஆண்டவனைக் காண்பான். ஆண்டவன் உருவற்றவன். அருள் நிறைந்த இதயத்தில் உறைபவன். அன்பே வடிவானவன். அவனது படைப்புக்களுக்கு பணி செய்வதால் அவனைக் காணலாம்.

அதனையே பழமொழியாளர்கள் ''அரகர என்பது பெரிதோ, ஆண்டிக்கு இடுவது பெரிதோ? என வினா மூலம் கேட்டிருக்கின்றனர்.

வகையற்று வருந்தும் மனிதனுக்கு உறுதுணை புரிவது ஆயிரம் முறை அரகர சொல்வதை விட நலம் பயக்கும். வாயைத்திறந்து ஆன்ம சுத்தியற்ற நிலையில் ஆண்டவனைத் தொழுவதால் வினை சேருமேயல்லாமல் நற்பலன் எதுவும் கிட்டாது. ஆனால் நம்மில் சிலர் மனம் போன போக்கில் எல்லாம் நடந்து விட்டு ஆண்டவனின் அருளைப் பெற நடை தளர்ந்த காலத்தில் நாடியோடி வருவதை நாம் காண்கின்றோம்.

மனப்பாரம் கூடிய நேரத்திற்றான் பரன் பாதம் தேவை. உடலில் உதிரம் உள்ள காலத்தில், தான் அனுபவித்த சிற்றின்ப சுகங்களை எல்லாம் வெறுக்கின்றான். என்ன ஞானம்?

இந்த மனிதன் தீவினை செய்வது தகாதது என்பதை தனது பகுத்தறிவால் அன்று அறிந்து தான் இருந்தான். ஆனால் ஆசையின் வயப்பட்டு மனம் போன போக்கில் போய், தன்னையும் கெடுத்து வேறு சிலரையும் துன்பக் கடலுக்குள் ஆழ்த்தி நிலை குலையச் செய்து வைத்திருக்கின்றான். தன் கஷ்டம், அவர்களது வகையற்ற வாழ்க்கை நிலை இரண்டையும் கண்ணாரக் கண்டு உணர்வு கொண்ட பின்தான் அரகர என வாய் சொல்ல கரம் இரண்டும் கூப்பி கடவுளைத் துதிக்கத் தொடங்குவர். நீரால் புறச் சுத்தத்தைச் செய்து கொண்டு உடையால் உருக்குலைந்த உடலை மறைத்து, ஆண்டவன் சந்நிதானத்துக் வந்தாலும் உள்ளத்தில் படிந்திருக்கும் அழுக்கை அகற்ற முடியுமா என்ன? அகம் சுத்தமில்லாதவனை ஆண்டவன் வந்தடைவானா? தன் வினை தன்னை சுடும். ஆனால் மனச் சாட்சிக்கு அடிமைப்பட்டு தான் செய்த வினைகளை உண்மையாவே உணர்ந்து எவன் ஒருவன் மனம் வருந்துகின்றானோ அவன் ஆண்டவனை அடைவான்; பக்த அருணகிரி நாதர் அவ்வாறே பரமனைக் கண்டார்.

"தீ வினை செய்யில், பேய் வினை செய்யும்" தீ வினை தகாதது, செய்யக் கூடாதது. செய்வதால்

பாவங்களுக்குட்பட்டு மீளாத் துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆனல் ஆசையின் வயப்படும் பொழுது மெய்யறிவை இழந்து மனிதன் தீ வினையைச் செய்து விடுகின்முன். மனம் நெகிழ்வுடையவன் வினை செய்த மறு கணமே தனது தவறுகளையிட்டு எண்ணி எண்ணி வருந்து கின்முன். அந்த வினையைப் போக்கிக் கொள்ளும் மார்க்கத் தைத் தேடி அலைகின்முன். அல்லற்பட்டு ஆருத்துயரமடை கின்முன். பயம், நடுக்கம், பிதற்றல் என்பன அவனைத் பீடித் துக் கொள்ளுகின்றது. ஒரு சிலர் எதற்கும் அஞ்சாதவர் களாக தாம் செய்த வினை பற்றிச் சிறிதளவு கூட மனந் தளராது, தங்களது அன்ருட கருமங்களில் தங்குதடை யின்றி ஈடுபடுவர். எது எப்படியிருந்தாலும் ஊழ்வினை அவர்களை விட்டகலாது. கால நேரம் வரும் பொழுது அவர்களை அறியாமலேயே துன்பங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும். செய்வினை, பெல்லி, சூனியம், பேய் பிசாசு, என்ற வார்த்தைகளைக் காதாலே கேட்டதுமே நிலை குலையத் தொடங்குவர். மனக் குழப்பமடைந்து செய்வதறியாமல் தடுமாறுவார்கள். உறக்கமின்றி நோய் வாய்ப்பட்டு உணவைக் கூட வெறுப்பார்கள். மனநோய் அதிகரித்து பைத்தியகாரர்களைப் போலக் காணப்படுவார் கள். இத்தகையவர்களின் செயற்பாடுகளைக் காண்பவர்கள் நோயல்ல பேய் பிடித்து விட்டது என்ற முடிவுக்கு வருவர்.

பேய் போக்க பெரிய மடை. உயிர்ப்பலிகள் வேறு. மந்திரவாதி தந்திரங்களையெல்லாம் துணைக் கொண்டு பல விதமான சாகசங்களையும் கையாண்டு மனச் சாந்தியை ஏற்படுத்த தன்னல் இயன்றவரை முயலுகின்முன். பலன் இல்லை.

தாம் செய்த வினையால் கிலி கொண்டு மனச் சாந் தியை இழந்தவனுக்கு எப்படி அமைதி ஏற்படும்?

மனக் குழப்பம், உடல் வாட்டம், அமைதியின்மை. அவன் உண்மையாகவே தன்னைத்தானே பேயாக்கி, நடைப்பிணமாக சமூகத்தில் காட்சி கொடுக்கின்றான்.

கால நேரம் வரும் பொழுது உள்ளம் தெளிவு பெற்றால் திரும்பவும் அவனொரு மனிதனாக நடமாட வாய்ப்புக் கிடைக்கும். இல்லையேல்- அவனே பேய் பிசாசு - பத்திர காளி.

தீ வினை - பேய் வினையாகி வினை விதைத்தவனை வினையறுக்க ஏதுவாக்கும்.

இத்தகையவர்களைக் கண்டு கூட நம்மில் சிலர் எதையும் செய்யத் துணிந்து நிற்பதுதான் சிந்தனைக்குரிய விடய மாகும்.

பஞ்சப் புலன்கள் தம் வழிச்செல்ல ஆன்மா அதனுள் சிக்குண்டு பெரும் பாவங்களுக்கு ஏதுவாகின்றது. பாவங்க ளின் பீடிப்பால் உடலில் வருத்தங்கள் ஏற்படுகின்றன. அப்பொழுதுதான் மெய்யுணர்வு ஏற்படக் கூடிய ஒரு நிலைமை உதயமாகின்றது. தவறுகளை நினைத்து தானே வருந்தி நல்லதோர் எதிர்காலத்தை ஆக்கி வாழ வழி யைத் தேடிக் கொள்ளுகின்றது. பஞ்சப் புலங்களையும் கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்தி பேரானந்தத்தைக் காண்கின்றது.

ஆன்மா அமைதியும் சாந்தமும் அன்பும் கொண்ட தாகி விட்டால் வினையென்ற வித்து ஏற்பட இடமேது? ●

அ. ஜெயகாந்தன் வதிரி.

மலர்மகால
கரவெட்டி
வடக்கு
கரவெட்டி

## வாசகப் பெருமக்களுக்கு அன்பான வேண்டுகோள்!

பழமொழிகளைக் கொண்டு யான் எழுதி வெளியிட்டுள்ள இந்நூலைத் தொடர்ந்து மேலும் பழமொழிக் கட்டுரை நூல்களை வெளியிட முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். எனவே இதுவரை அச்சுவாகனம் ஏறாத தமிழ்ப் பழமொழிகளைத் தெரிந்துவைத்திருப்போர் சிரமம் பாராது அவற்றை எனக்கு எழுதி அனுப்பி உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

பிரதேசப் பழமொழிகளே விசேடமாக விரும்பத்தக்கவை.

அனுப்பவேண்டிய முகவரி:


க. சத்தியானந்தசிவம்

'சச்சி மாஸ்ரர்'

**40, ஈச்சமோட்டை வீதி,**

**யாழ்ப்பாணம், இலங்கை.**

ஆ.ஜெயசோதி

வடமராட்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி

வடமராட்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச
சங்கங்களின் கொத்தணி
கரவெட்டி.

ஆ. ஜெயகாந்தன்
வதிரி மேற்கு

150
300
200
120
1200
75

21
775
150
1525

2275

3175

சச்சி மாஸ்ரர்



'சச்சி மாஸ்ரர்' எனப்படும் திரு. கனகரத்தினம் சத்தியானந்தசிவம் 1952 ல் சுதந்திரனில் எழுதி எழுத்தாளராக அறிமுகமானவர். இவர் தமிழாசிரியர்; ஆயுள்வே வைத்தியர் ஆசிரிய தொழிற்சங்கவாதி; அரசியலிலும் அப்போது அதிகம் ஈடுபாட்டுடன் காணப்பட்டவர். இன்று பல சங்கங்களில் தலைமைப் பதவி வகித்து வருபவர். 'சமூகத்தொண்டன்' பத்திரிகையின் உதவி ஆசிரியராக மிளிர்ந்தவர்.

எவரும் பழகுவதற்கேற்ற இனிய பண்புகள் நிறைந்தவர். இனஉணர்ச்சியும் தமிழ் உணர்ச்சியும் நிறைந்த இந்த மணிவிழா நாயகர் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையில் வசித்து வருகிறார்.

பல ஆண்டுகள் மௌனமாக இருந்த சச்சிமாஸ்ரர் இப்போது வீரகேசரியிலும், முரசொலியிலும் பழமொழிக்கான விளக்கங்களை எழுதி வருகிறார். அத்துடன் பல நூல்களை ஆராய்ந்து பழமொழிகளைத் திரட்டி வருகிறார். இவை ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டியாக அமையும்.

சச்சி மாஸ்ரரின் அரிய பெரிய முயற்சி இந்நாட்டுத் ...ழ்பேசும் மக்களால் என்றும் பாராட்டைப் பெறும்; ... உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

இந்த எழுத்தாளர் எழுதியுள்ள பழமொழிக் கட்டுரை...ன் தொகுப்பே மக்கள் வாழ்வில் பழமொழி.

மணிவிழா நாயகராக நம் மத்தியில் வாழும் சச்சி ...ஸ்ரர் தொடர்ந்தும் இம்முயற்சியில் முன்னின்றுழைக்க ...னடவன் அருள் பாலிப்பானாக.

புத்தொளி